பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

பெப்ரவரி 2026



## ‘சங்கிலி சுப்பிரமணியன்’ நேர்காணல்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – பெப்ரவரி 2026

650

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸூர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

பட விநயம் : கூகுள்

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

# அமைதி வேண்டும்

சச்சரவு மண்ணில் செய்தே
சகலமும் தோற்கச் வைத்தே
உத்தரவு போட்டுச் சண்டை
உடமைகள் இழக்க வைக்கும்
முத்திரைப் பதிக்க நாட்டில்
முடிவிலா போர்கள் மூலம்
வித்தினை ஊன்றி டாதே
விடியலைத் துரத்தி டாதே

சண்டைதாம் தீர்வா? இல்லை
சந்ததி அழிய வைத்தே
பண்பினை இழந்தி டாதே
பாவங்கள் செய்தி டாதே
உண்பது செரியா தென்றும்
உடுப்பது பயமு மின்றி
நண்பகல் இரவும் போரை
நடத்திட அழியும் நாடே

இடத்தினைப் பிடிக்கப் போட்டி
இழப்புகள் அதிக மாக்கும்
மடத்தனம் செய்தே ஊரை
மடக்கிட அலைதல் நன்றா?
படைகளை நிறுத்தி நாசம்
பயிற்சிகள் கொடுத்தே பேசித்
தடைகளை அழித்துத் தாக்கத்
தரையெலாம் மட்டம் ஆகும்

நிறுத்திடு போரை நாளும்
நிலைத்திடாச் செயலால் என்றும்
புறத்தினை அழியச் செய்து
புழுதிகள் பறக்க குண்டா?
அறத்தினை அழியச் செய்தால்
அடுத்தது நீயும் போவாய்
மறச்செயல் இதுவா இல்லை
மடத்தனம் அறிவாய் நீயும்

இடத்தின்மேல் ஆசை கொண்டே
இயங்கிட நினைக்க வேண்டா
தடங்களை அழியச் செய்து
தரைமட்டம் ஆக்கல் வேண்டா
விடமுடை வன்மம் வேண்டா
விதைத்தலும் பழுதாய் வேண்டா
படமெடுத்த நாகம் போல
படைகளும் ஆட வேண்டா

அமைதியைத் தேடல் நன்றே
அழிவுகள் வேண்டாம் இன்றே
குமைத்திட வைத்தல் வேண்டா.
குலையவே அடித்தல் வேண்டா
குவிந்திடும் படைகள் வேண்டா
குண்டுகள் போட வேண்டா
அவிந்திடும் உலகும் வேண்டா
அழித்திடும் எண்ணம் வேண்டா

தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)





# டிஜிட்டல் ஆத்மாக்கள்

*இயந்திரங்களுக்குள் சிறைப்படும் மனித உணர்வுகள்!'*

காலம் காலமாக மனிதன் தேடிக்கொண்டிருக்கும் ஒரு விடயம் தான் சாவா மருந்து. பூமியின் உள்ளகம் வரை தொட்டு பிரபஞ்சம் வரை வியாபித்துள்ள தொழில்நுட்பத்தால் மனிதன் இறக்காமல் இருப்பதற்கான மருந்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் அந்தத் தேடலில் மனிதனுக்குக் கிடைத்த ஒரு சிறிய முன்னேற்றம் என்று கூறும் அளவுக்கக டிஜிட்டல் ஆத்மாக்களின் செல்வாக்கு உயர்ந்துள்ளது. உடல் மறைந்தாலும், ஒருவரின் தரவுகளைக் கொண்டு அவரை டிஜிட்டல் உலகில் உயிர்ப்புடன் வைத்திருக்கும் இந்தத் தொழில்நுட்பம், மனித குலத்திற்கு ஒரு வரமா அல்லது நாம் இதுவரை சந்தித்திராத பெரும் விபரீதமா என்று தெரியவில்லை.

நாம் இணையத்தில் பகிரும் ஒவ்வொரு கருத்தும், புகைப்படமும், நாம் பேசும் குரல் பதிவுகளும் ஒரு பெரிய தரவுக் கிடங்கு. ஒருவர் இறந்த பிறகு, அவருடைய இந்த டிஜிட்டல் தடயங்களை செயற்கை நுண்ணறிவுக்கு (AI - Artificial Intelligence) ஊட்டினால், அது அந்த நபரைப் போலவே சிந்திக்கவும், பேசவும் பழகிக்கொள்கிறது. இதன் விளைவாக உருவாகும் 'சாட்பாட்கள்' (Chatbots) அல்லது 'டிஜிட்டல் அவதாரங்கள்', நாம் இறந்த பிறகும் நம் உறவினர்களிடம் வீடியோ காலில் பேசும் வசதியை வழங்குகின்றன. இதனைத் தொழில்நுட்ப உலகம் 'கிரீஃப் டெக்' (Grief Tech) என்று அழைக்கிறது.

'கிரீஃப் டெக்' (Grief Tech) என்றால்; என்ன?

கிரீஃப் டெக் (Grief Tech) என்பது மரணத்திற்குப் பிறகும் ஒருவருடன் தொடர்பில் இருப்பது போன்ற

உணர்வை ஏற்படுத்த, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் ஒரு வளர்ந்து வரும் துறையாகும். இது ஒரு நபர் உயிருடன் இருந்தபோது பகிர்ந்துகொண்ட குறுஞ்செய்திகள், குரல் பதிவுகள் மற்றும் வீடியோக்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் குணாதிசயங்களை அப்படியே பிரதி பலிக்கும் 'டிஜிட்டல் அவதார்' (Digital Avatar) அல்லது 'சாட்போட்களை' (Chatbots) உருவாக்குகிறது. இதன் மூலம், மறைந்தவர்கள் நம்மிடம் பேசுவது போன்ற அனுபவத்தைப் பெற முடியும்

ஆறுதலுக்குப் பின்னால் இருக்கும் ஆபத்து

இழந்த ஒருவரை மீண்டும் திரை யில் பார்ப்பது ஆரம்பத்தில் ஒரு பேரானந்தத்தைத் தரலாம். ஆனால், இந்தத் தற்காலிகச் சந்தோஷத்திற்குப் பின்னால் ஒரு பயங்கரமான எதிர்காலம் ஒளிந்திருக்கிறது.

1. ஆறாத வடுவும் மனநலச் சிதைவும்:

இயற்கையின் மிகப்பெரிய வரம் 'மறதி' ஒரு இழப்பின் துயரத்திலிருந்து மனிதன் மெல்ல மெல்ல மீண்டு வருவதே வாழ்வின் சுழற்சி. அவன் அந்த இழப்பில் இருந்து மீளும் போது சில சமயங்களில் புதிய மனிதனாக மாறுகின்றான். உதாரணமாக முழுக்க முழுக்க கணவனில் தங்கி வாழ்ந்திருந்த ஒரு பெண் திடீரென அவள் கணவனை இழந்து விட்டால் அவள் அங்கே ஸ்தம்பிதம் அடைந்து விடுகிறாள். இனி கணவன் இல்லாமல் என் வாழ்க்கை என்ன ஆக போகிறதோ என்ற மனநிலை ஏற்பட்டு வழ்வே இருண்டது போல தோன்றும். ஆனால் அதன் பின்னர் அவளுக்கு கணவனின் நினைவலைகள் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கடிக்கப்படும். இதன் போது அவள் தனது பிள்ளைகளுகளுக்காக மீண்டு வந்து தைரியமாக வளர்க்க முற்படுகிறாள். காலம் காலமாக இது நாம் கண்கூடாக கண்டு வரும் உண்மை. ஆனால், இறந்தவர்கள் கண் முன்னே உலவிக்கொண்டே இருந்தால், அந்தத் துயரம் ஒருபோதும் முடிவுக்கு வராது. அவர்களின் மறக்க டிக்கப்பட்ட நினைவுகள் மாறி மாறி வந்து கொண்டே இருக்கும். இதனால் இருக்கின்ற வாழ்க்கையை கூட அவர்களால் நிம்மதியாக வாழ முடியாத நிலை ஏற்படும். ஒரு வகையான நடைப்பிணமாக வாழ ஆரம்பிப்பார்கள். இறந்தவர்களின் நினைவுகள் அதிகம் இருக்கும் போது யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும் மனனிலை ஏற்படாது.

அத்துடன் மக்கள் நிஜ உலகை விட, தங்களுக்குப் பிடித்தமானவர்களின் டிஜிட்டல் பிம்பங்களுடன் அதிக நேரத்தைச் செலவிடும் ஒரு போலியான சிறைக்குள் தள்ளப்படுவார்கள்.

2. உணர்ச்சிகளை வணிகமாக்கும் நிறுவனங்கள்:

மனித உணர்வுகளை வணிகமாக்கும் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. மிகப் பெரிய திருமண மண்டபத்தில் மணமக்கள் சந்தோசமாக தங்கள் அடுத்த

வாழ்க்கைக்குத் தயாராகும் போது அந்த முக்கியமான நாளில் தங்கள் இறந்த தந்தையையோ தாயையோ சம்பந்தப்படுத்தி ஒரு காணொளி அல்லது புகைப்படங்களை சப்ரைஸ் என்ற பெயரில் காட்டி மணமக்களின் மனநிலையையே புரட்டிப்போடும் வேலை இங்கு நடைபெறுகின்றது. இது வியாபார அடிப்படையில் இன்று மக்களிடையே பரவலாக நடைபெற்று வருகின்றது.

*3. அடையாளத் திருட்டும் போலித் தன்மையும்:*

இதுதான் மிகவும் பாதிப்பான ஒரு நிலை. ஒருவரின் அடையாளம் 'ஹேக்' செய்யப்பட்டால் என்னவாகும்? இறந்த ஒருவரின் குரலையும் முகத்தையும் வைத்து வங்கிக் கணக்குகளைத் திருடுவது அல்லது அவர் சொல்லாத கருத்தைச் சொன்னதாகப் பரப்புவது போன்ற குற்றங்கள் பெருகும். ஒரு மனிதன் மறைந்த பிறகும் அவனது கௌரவம் இங்கே பாதுகாப்பற்றதாகிவிடும்.

*4. நிஜ உறவுகளின் விரிசல்:*

வீட்டில் இருக்கும் உயிருள்ள மனிதர்களுடன் சண்டையிடுவதை விட, திரையில் தோன்றும் 'பரிபூரணமான' (Perfect) டிஜிட்டல் பிம்பங்களுடன் பேசுவது எளிதாக இருக்கும். இது சமூகத் தனிமைப்படுத்தலை உருவாக்கும். மக்கள் நிஜ மனிதர்களைவிட, இயந்திர நிழல்களை நேசிக்கத் தொடங்குவார்கள். ஏனெனினல் இந்த செயற்கை நுண்ணறிவால் பயன்படுத்தப்படும் பிம்பங்கள் ஒருவர் தமக்கு எப்படியான ஒரு துணை வேண்டும் என்று கற்பனை செய்கிறாரோ அப்படியே பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும். இப்போது இது பாதிப்பாக விளங்காவிட்டாலும் இனி வரும் தலைமுறை அப்படியான பிம்பங்களை மட்டுமே நம்பி தம் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளக்கூடியவர்களாக மாறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

*இதற்கு என்ன செய்யலாம்?*

இன்று நாம் சொத்துக்களுக்கு உயில் எழுதுவதைப் போல, 'நான் இறந்த பிறகு எனது டிஜிட்டல் தரவுகளை அழிக்க வேண்டும்' அல்லது 'எனது பிம்பத்தை யுஐ உருவாக்கக் கூடாது' என்று உயில் எழுதும் 'டிஜிட்டல் எஸ்டேட்' (Digital Estate) சட்டங்கள் அவசியமாகின்றன. ஒருவருக்கு 'மறக்கப்படும் உரிமை' வழங்கப்பட வேண்டும்.

இயற்கையான மரணம் என்பது மனித வாழ்வின் ஒரு முக்கியமான அங்கம். நினைவுகள் மனதில் இருப்பது அழகு, ஆனால் அந்த நினைவுகளை இயந்திரமாக்குவது ஆபத்தானது. மரணம் என்பது ஒரு கதவு அடைக்கப்படுவது மட்டுமல்ல, அது அடுத்த தலைமுறைக்கு வழிவிடுதலும் கூட. நிழல்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டு நிஜங்களை மறப்பது மனித குலத்தின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும். டிஜிட்டல் ஆத்மாக்கள் என்பது ஒரு மாயத்திஷ்ர் அதை விலக்கி நிஜத்தை நேசிப்பதே மனிதத்தன்மை.

**ஆயிஷா சகீலா**

# படைப்பின் இரகசியம்

பிறை நெற்றியின் கீழே
பறை சாற்றியது போல்
மயக்கும் இமைகள் என
மேலுமிரு கரும் பிறைகள்

மூக்கின் வாளிப்பு புது
மெழுகால் வடித்தது போல்
கன்னங்கள் தாடையுடன்
கச்சிதமாய்ப் பொருந்துகின்றன

வெண்பஞ்சுக் குடத்தினுள்
வெற்றுக் கண்களுக்கு விருந்தாக
நடமாடும் இரு கருவிழிகள்
நம்ப வொணா வியப்பு

முழங்கையிற் குண்டூசி குற்றி
உதிரம் வழிவது போல்
இரத்த நாளங்களின் வடிவு

அதரங்கள் இரண்டும் செந்நிறம்
உள்ளே உதிரம் கசிந்ததுபோல்
வேடிக்கை காட்டுகின்றன

விரல்களாற் தொட்டுப் பார்க்கிறேன்
பிறந்ததின் வாயில்
கைபோடக் கூடாதென
பக்குவமாய்க் கூறுகிறாள் என் மகள்

சட்டென சிறிது விலகி
எட்டி நின்று வியக்கிறேன்
வாய் பிளந்து நிற்கிறேன்
வல்லோனின் படைப்பை எண்ணி

இருபது வருடங்களுக்கு முன்
அவள் பிறந்தபோதும் இப்படித்தான்
இரசித்த ஞாபகம் எனக்கு
இப்போது வருகிறது

இருந்தும் அவளது மகள்
மேலும் மேலும்
மெருகேற்றப் பட்டிருக்கிறாள்
அருமையான படைப்பின் இரகசியம்.

**எஸ்.ஏ. கப்பார்**
(இலங்கை)



# சாதிப்பவர்களின் ஆயுதம் மௌனம்



வெற்றுச் சொல்லை விலக்கு முதலில்
வெற்றிச் சொல்லே நிலைக்கும் வாழ்வில்!
கூவியபடி இருப்பார் குன்றிப் போவார்!
கூவாமல் செய்வார் குன்றாய் நிற்பார்!

மோதியெவர் எதிர்ப்பை முறித்து வினையை
சாதிப்பவர் நடுவிரலாய் சட்டமாய் எழுவார்!
போதிமரம் கீழமர்ந்த புத்தரின் அமைதியாய்
சாதிப்பவர்களின் ஆயுதம் மௌனம் ஞானமே!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.

---

# முதல் தனிமை...



திருமணமே வேண்டாம் என்று திரிந்த என்னை
திரிலோக சஞ்சாரியாய் திணற வைத்தாய்
சந்திரபிம்ப வதனத்தில் நர்த்தனம் ஆடிய நயனங்கள்
நாரியே உன் பக்கம் நங்கூரம் பாய்ச்சின
கண்ட நாள் முதலாய் காதல் பெருகிவிட
கல்யாணம் என்னும் பந்தத்தால் கட்டுண்டோம்
அங்கம் தளரும் வரை ஆடிப் பாடித் திரிந்தோம்
ஆடியும் வந்தது கூடவே ஆபத்தும் வந்தது
என்னிடமிருந்து உன்னை பிரித்தார்கள்
தேனும் பாலும் கூட தித்திக்கவில்லை
உன் அதரங்களின் சந்திப்பினை நினைக்கும் பொழுது
எத்தனையோ முறை தனிமையில் இருந்திருக்கிறேன்
ஆனால் இதுதான் முதல் தனிமை போல் வெதும்பி நிற்கிறேன்
நீ வரும் நாளை நினைத்து ஏங்கும் என் நிலைமையை
வந்த பின் அறிந்து கொள்வாய் என் அருமை ஆரணங்கே
தலையணை சொல்லாததையா நான் சொல்லிவிடப் போகிறேன்?

பான்ஸ்லே

# எண்ணத்தின் மாயைகள்

**மாலதி சந்திரசேகரன்**



மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை வீதியில் அந்த மாலை நேரம் பரபரப்பாக இருந்தது. ஓய்வுபெற்ற ஆசிரியர் சண்முகம் ஒரு தூணில் சாய்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த பழைய நண்பர் பாண்டியைப் பார்த்ததும் அவர் முகம் மலர்ந்தது.

‘என்ன சண்முகம் சார்... என்னத் தையோ யோசிச்சுக்கிட்டு இருக்கீய? அப்டியே லய்ச்சுப் போய் நிக்கிறீய?‘ என்று கேட்டார் பாண்டி.

சண்முகம் பெருமூச்சுடன் சொன்னார், ‘இல்ல பாண்டி, மனுஷன் மனசு இருக்கே... அது ஒரு மாயக்கண்ணாடி மாதிரி. நாம எதப் பாக்குறோமோ அது நெஜம் இல்ல, நாம எத நினைக்குறோமோ அதுதான் வெளிய தெரியுது.‘

பாண்டி சிரித்துக்கொண்டே, ‘ஒங்க ளுக்கு இந்த தத்துவப் பேச்சு எப்பவும் குறையாது. கொஞ்சம் வவுத்த கவனிப் போமா? ஒரு சூடா ஜிகர்தண்டா அடிச்சா இந்த வெயிலுக்கு தேவாமிர்தமா இருக்கும், வாரீயளா?‘

‘இல்ல பாண்டி, அதோ அந்தப் பையனைப் பாரு,‘ என்று ஒரு இளைஞனைச் சுட்டிக்காட்டினார் சண்முகம். ‘அவன் முகத்துல எவ்வளவு பதட்டம்! யாரையோ தேடுறான். ஒருவேளை அவன் காதலி வராம ஏமாத்தியிருப்பாளோ? இல்ல, வீட்ல ஏதும் சண்டையா? அவன் மனசுக்குள்ள இப்ப எவ்ளோ போர் நடக்கும்?‘

பாண்டி அந்த இளைஞனை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தார். பிறகு சத்தமாகச் சிரித்தார். ‘அண்ணே! நீங்க ஒன்னும் மாறல. அவனோட அந்தப் பதட்டத்துக்குக் காரணம் நீங்க நெனைக்கிற மாதிரி காதல் கத்தரிக்கா இல்ல. அவன் கையில இருக்குறதப் பாருங்க.‘

சண்முகம் கூர்ந்து கவனித்தார். அந்த இளைஞன் கையில் ஒரு காகிதப்பை இருந்தது.

பாண்டி தொடர்ந்தார், ‘அவன் நம்ம ஆப்பக்கடை ஆறுமுகம் மவன். இன்னைக்கு கடைக்கு அவசரமா மாவு கொண்டு போறான். ’நேரமாச்சு, அப்பா இன்னைக்கு நம்மள உரிச்சுப் போட்டுருவாரு’ங்கிற பயத்துல ஓடுறான். இதுல எங்கண்ணே காதல் மாயை வந்துச்சு?‘

சண்முகம் அசடு வழிந்தபடி சிரித்தார். ‘பாத்தியா பாண்டி, என் எண்ணம் என்னவோ அதை அந்தப் பையன் மேல சுமத்திட்டேன். நாம எதப் பாக்குறோமோ அது உலகமில்லை, நாம என்னவா இருக்கோமோ அதுதான் நம்ம கண்ணுக்குத் தெரியுது.‘

'விடுங்கண்ணே... எல்லாம் மாயை தான்! இப்ப நீங்க ஜிகர்தண்டா வாங்கித் தாரீயளா இல்லையா? அது மட்டும் தான் இப்ப எனக்கு நெஜம்!' என்று பாண்டி கிண்டல் செய்ய, இருவரும் சிரித்துக்கொண்டே கடையை நோக்கி நடந்தனர்.

ஜிகர்தண்டா கடையின் பெஞ்சில் அமர்ந்தபடி, சண்முகம் மீண்டும் அந்த இளைஞனையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பையன் இப்போது ஒரு பெண்ணிடம் ஏதோ பதட்டமாகப் பேசிக்கொண்டிருந்தான்.

சண்முகம் சட்டென்று பாண்டியைக் கிள்ளினார். 'பாண்டி! இப்பப் பாரு... அந்தப் பொண்ணு கிட்ட அவன் எவ்ளோ கெஞ்சுறான்னு. இது கண்டிப்பா மாவுப் பொட்டலப் பஞ்சாயத்து இல்ல. மனசுக்குள்ள எவ்ளோ பாரம் இருந்தா அவன் இப்படித் தவிப்பான்?'

பாண்டி ஒரு வாய் ஜிகர்தண்டாவை உள்ளே தள்ளிவிட்டு, வாயைத் துடைத்துக் கொண்டே சொன்னார், 'அண்ணே... நீங்க இன்னும் அந்த 'தேவதாஸ்' மோடுலருந்து வெளிய வரலையா? இருங்க, இங்கயே உக்காந்து வேடிக்கை பாக்குறத விட, நேரடியாவே கேட்டுருவோம்.'

பாண்டி அந்த இளைஞனை உரக்கக் கூப்பிட்டார், 'ஏலேய்... செல்வம்! இங்க வாடா!'

அந்த இளைஞன் கையில் இருந்த பையோடு ஓடி வந்தான். 'என்ன சித்தப்பு? இந்த நேரத்துல இங்க உக்காந்துருக்கீய?'

பாண்டி சண்முகத்தைக் காட்டி, 'இந்தா... சண்முகம் சார் மனசு பூரா மாயையா இருக்குதாம். நீ அந்தப் பொண்ணு கிட்ட ஏதோ உருக்கமாப் பேசுனியே, அது என்ன மேட்டர்னு சொல்லு. சார் நீ ரொம்ப பீலிங்ஸ்ல இருக்கன்னு நெனைக்கிறாரு.'

செல்வம்தலையைச்சொறிந்துகொண்டு சிரித்தான். 'ஐயையோ! அது என் தங்கச்சி சித்தப்பு. ஸ்கூல்லருந்து வர்றப்ப சைக்கிள் செயின் கழண்டுருச்சாம். 'அப்பாவுக்குத் தெரிஞ்சா திட்டுவாரு, சீக்கிரம் வந்து சரி பண்ணி விடு'ன்னு சொல்லுச்சு. அதான் 'இப்ப முடியாது, மாவு குடுத்துட்டு வர்றேன்'னு அதுகிட்ட மல்லுக்கட்டிக்கிட்டு இருக்கேன். இதுல பீலிங்ஸ் எங்கட்டு வந்துச்சு?'

சண்முகம் இப்போது வாயடைத்துப் போனார். பாண்டி விடவில்லை, 'பாத்தீயளா அண்ணே? நீங்க அவனக் காதலன்னு நெனைச்சீய, ஆனா அவன் பாசமான அண்ணனா இருக்கான். அப்புறம் நீங்க அந்தப் பொண்ணு சோகமா இருக்குன்னு நெனைச்சீய, ஆனா அது பயத்துல இருக்கு. உங்க எண்ணம் ஒரு சினிமா ஓட்டுது, ஆனா வெளிய வேற கதை நடக்குது!'

சண்முகம் சிரித்துக்கொண்டே சொன்னார், 'சரியாச் சொன்ன பாண்டி. என் கண்ணுல இருந்த கண்ணாடிய இப்பதான் கழட்டி வச்சிருக்கேன். நாம நினைக்கிற தெல்லாம் மத்தவங்க மேல ஏத்திப் பாக்குறது தான் மனுஷ புத்தியோ?'

'ஆமாண்ணே... அதான் மாயை! இப்ப அந்தமாயையெல்லாம்மூட்டைகட்டிட்டு, பேசாம இன்னொரு ஜிகர்தண்டா சொல்லுங்க. எனக்கு 'ஸ்பெஷல்' வேணும், அதான் இப்போதைக்கு மெய்யான சந்தோஷம்!' என பாண்டி சொல்ல, சண்முகம் தன் மாயை கலைந்து நிஜத்தில் சிரித்தார். ■

# திக்... திக்... நிமிடம்


## சஹ்னாஸ் பேகம்

**முதலைப்பாளி, புத்தளம்**


அவள் எப்போதும் போல இன்றும் ஒரே தீக்குச்சியில் விறகை பற்ற வைக்க முயன்ற போது அது பற்றி அணைந்தும் விட்டது.

மறுமுறையும் அப்படி ஆனதில், மீத முள்ள ஒரே ஒரு குச்சியை கவனத்துடனும் பிரயத்தனத்துடனும் காந்தத்தில் உரசிய போது அது பற்றி விட்டது. தென்னை மரத்தில் பெறப்பட்ட பன்னாடையில் பற்ற வைத்து நன்றாக எரியச் செய்து, அடுப்பில் மூட்டிய விறகுக்குள் உள் நுழைத்தாள்.

நேரம் மதியம் 12:30 ஆக இருந்தது.

இன்று ஏதும் பெரிதாக சமைக்க தேவை யில்லை என்று உம்மா சொல்லியிருந்தார் தான். என்றாலும் நேரம் போகப் போக இருப்பதை வைத்து சமைத்தால் இரவுக்கும் மிச்சப்படுவதை சமாளித்திடலாம் என்று நினைத்தாள்.

முதலில் எதை செய்வதென்று எண்ணம் எழுந்தது.

சூடாக தடுமலுக்கு இதமாக மஞ்சள் கலந்த பால் தேநீர் பருக வேண்டும் போல இருந்தது.

பற்றும் விறகு அடுப்பில், கொஞ்சம் தண்ணீரை குழாயைத் திறந்து பாத்திரத்தில் பிடித்து அடுப்பில் வைத்தவள், மலமல வென கொதிக்க விட்டாள்.

அடுத்ததாக, அரிசியை பாத்திரத்தில் பகலுக்கு மட்டும் போதுமாக எடுத்து தண்ணீர் விட்டு கொஞ்சம் ஊற வைத்தாள்.

மற்றொரு பாத்திரத்தில் பருப்பையும் தண்ணீர் விட்டு ஊற வைத்தாள்.

மீன் டின்னை பதமாகத் திறந்து, அதனுள்ளிருந்த தண்ணீரை சிறு பீங்கானில் மீன் துண்டுகள் விழாமல் வடித்தாள்.

மீன் துண்டுகளை பீங்கானில் பதமாக அடுக்கினாள்.

வடுப் புளியை இன்னொரு பாத்திரத் தில் தண்ணீர் விட்டு ஊற வைத்தாள்.

இப்போது வெங்காயத்தை அளவாக நறுக்கி எடுத்தாள்.

பூண்டையும் சீரகத்தையும் ஒன்றாக இடித்து வைத்தாள்.

புளியை கரைத்து வடித்து எடுத்தாள்.

அதில் மிளகாய் தூளை சேர்த்து கரைத்தாள்.

இப்போது கொதிக்கும் தண்ணீர்

பாத்திரத்தில் அளவாக பால் மாவை சேர்த்து, சிறிதாக மஞ்சள் மற்றும் மிளகு தூளும் சேர்த்தாள்.

சேர்த்தவை திரளுமுன் பாத்திரத்தை அலசியபடி எடுத்து கொண்டாள்.

தன் குட்டி தம்பிக்கும் கொடுக்க எடுத்து வைத்தாள்.

இப்போது பாத்திரமொன்றை அடுப் பில் ஏற்றி, காய்ந்ததும் எண்ணெய் விட்டு சூடானதும் கடுகு, பூண்டு, கருவேப்பிலை, வெங்காயம் சேர்த்து வதக்கினாள்.

அதில் கரைத்த மிளகாய் தூள் கலந்த புளிக் கரைசலை சேர்த்து மூடி வைத்து கொதிக்க விட்டாள்.

பின்னர் மீன்களையும், அதனுடன் இருந்த தண்ணீரையும் சேர்த்து உப்பு சேர்த்து மீண்டும் மூடி வைத்தாள்.

கையில் எடுத்த பால் தேநீர் ஆறி விட்டிருந்தது.

இரண்டு மிடடருக்கு பின் குடிக்க மனம் வராததால் அதை சிங்கில் கொட்டிவிட்டாள்.

தம்பிக்கும் எடுத்ததை கொடுக்க அவனை அழைத்தாள்.



*அவன் விளையாட்டு ஆர்வத்தில் வர மறுத்ததால் மூடி வைத்து விட்டு வேலையைத் தொடர்ந்தாள்.*

*அடுத்ததாக, கொதித்த டின் மீன் கறி பாத்திரத்தை இறக்கி வைத்தாள்.*

*அரிசியை கழுவி அடுப்பில் வைத்து நெருப்பை வேகுவதற்கு ஏற்றதாக சரி படுத்தினாள்.*

*மற்ற அடுப்பில் பருப்பை அவிய போடலாமென்று நினைத்து பருப்பையும் கழுவ எடுத்த நேரம், யாரோ கூப்பிடுவது போல கேட்டது.*

*தன் தம்பியிடம் யாரென்று பார்க்கு மாறு சொன்னாள்.*

*அவனும் போக மறுத்ததால் செல்லமாய் அவனது தலைமுடியை கலைத்து விட்டு சென்றாள்.*

*அவளது உம்மாவின் சாச்சி (சின்னமா) வந்திருப்பதை கண்டவளுக்கு ஆச்சரியம் தான்.*

*வராதவர்கள் வந்தால் அதிர்வாகத் தானே இருக்கும். 'வாங்க வாங்க, உள்ளே...' என்று அழைத்தாள்.*

*அவரோ முன்வரந்தாயிலேயே இருப்ப தாக சொல்லி கதிரையை கேட்டார்.*

*சின்ன வேலையாக வந்தாராம். அதனால் பார்த்து போக வந்ததாக சொன்னார்.*

*அப்ரா நேரத்தை பார்த்தாள். சரியாக மதியம் 1:00 மணியாக இருந்தது.*

*'இல்ல, உள்ளே வாங்களேன்' என்று அழைத்துக் கொண்டே கிச்சன் பக்கம் வந்தாள்.*

*'எங்கே உம்மா, தங்கச்சுகள்?' என்று விசாரித்தார்.*

*'உம்மாவும் வாப்பாவும் மருந்துக்கு.*

*பெரிய தங்கச்சியும் பெரிய தம்பியும் ஸ்கூலுக்கு,' என்றாள்.*

*'இப்போவா சமைக்கிறாய்?' என்றார்.*

*'ஆமா உம்மாம்மா. வாப்பா பகலுக்கு இல்ல தான்னு, உம்மா நூடுல்ஸ் போட்டு சாப்பிட சொன்னாங்க.*

*நான் தான் சோறு ஆக்கி, டின் மீனும் பருப்பையும் ஆக்கிட்டா நைட்டுக்கு கரச்சல் இருக்காது என்று பார்த்தேன்,' என்றாள்.*

*அவரின் கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டே வேலைகளை செய்தாள்.*

*அந்த நேரமே அதிர்ச்சியும் வந்தது.*

*'எங்கே சின்ன தம்பி?' என்று உம்மாம்மா கேட்டார்.*

*'இங்கே தான் மா இருந்தான்...'*

*அப்ரத்... அப்ரத்... என்று அழைத்தும் பதில் இல்லை.*

*பயம் நெஞ்சுக்குள் எழுந்தது.*

*இருவரும் சேர்ந்து தேடத் தொடங்கி னார்கள்.*

*அப்ரா, செய்த வேலைகளை அப்ப டியே விட்டுவிட்டு வீட்டுக்குள் அறைகள்*

அனைத்திலும் ஓடினாள்.

பெயரைமீண்டும்சொல்லிகூப்பிட்டாள்.

வளவெங்கும் தேடினாள்.

குளியலறை, குட்டி தோட்டம் எங்கும் பார்த்தாள்.

'என்னடிமா, புள்ளையை காணலையே...' என்ற உம்மாம்மாவின் வார்த்தை பயத்தை மேலும் கூட்டியது.

'இல்ல மா... எப்போதும் எல்லா கதவுகளையும் சாத்திட்டு தான் வேலை செய்வேன்...

இப்போ கொஞ்ச நாளா இப்படியே பயமுறுத்துவான் தான்...

இன்னைக்கு ரொம்ப நேரமா அமைதியா இருக்கானே...'

இதயம் துடித்து வெளிவருவது போல இருந்தது.

இருண்ட உலகில் தவிப்புடன் நின்றாள். அந்நேரம் வேலை விட்டு வந்த மாமா, 'ரூமில் கதவின் மூலையில் நிற்கிறான்' என்றார்.

ஓடோடி சென்று கதவைத் திறந்தவள், உள்ளே இருந்தவனுக்கு இரண்டு அடி போட்டாள்.

அவன் அழுதபடி மாமாவிடம் ஓடினான். சரிமா நானும் போயிட்டு வாரேன் என்ற உம்மம்மாவை வழி அனுப்பி, கதவுகளை நன்றாக சாத்தி வந்தவள், அழும் தம்பியை இறுக்க அணைத்து முத்தம் கொடுத்தாள்.

ஆனால் அவளின் இதயம் இன்னும் அமைதியடையவில்லை.

அன்றிரவு நடந்ததை மாமா தாயாரிடம் சொல்ல, அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த அப்ராவிற்கு அது சாதாரண தருணமாகவே தோன்றவில்லை.

சூழல் அறியாத தாயா? அவளின் தலையை தடவினார்.

அவள் தாயை கட்டி அணைத்து அழுதாள். தந்தையும் அணைப்பை கொடுத்தார்.

மறுநாள் காலை அப்ரத் எழுந்த போது வீடு அமைதியாக இருந்தது.

'அப்ரா ராத்தா... உம்மா... வாப்பா...' என்று கூப்பிட்டும் யாருமில்லை. பயம் கொண்டு தேம்பி அழுதான்.

அப்போது தலையை யாரோ நீவினார்கள். திரும்பினான் தாயும் தந்தையும். அழுகையுடன் அவர்களை கட்டியணைத்தான்.

மெதுவாக அவர்கள் சொன்னார்கள்:

'தங்கம்... நேற்றும் இதே மாதிரி தான் அப்ரா ராத்தாவுக்கும் இருந்திருக்கும்...'

பிஞ்சு மனம் மெதுவாக தலையாட்டியது. அப்ராவின் வருகைக்காக, ஸ்கூல் முடிந்து வீட்டுக்கு வரும் நேரத்திற்காக காத்திருந்தான்.

'சிறுவர்களின் விளையாட்டு குணம் குறும்பாகத் தான் தொடங்கும். ஆரம்பத்திலே கண்டு கொள்ளா விடின், விபரீதத்தை கொண்டு வந்து விடும். முளையிலே கிள்ளி எறிந்து விடுவோம்.'

■

# அன்பின் பாலம்

## ஸில்மா ஹிதாயத்துல்லா

**பகுதி - 10**

கனவிலும் நீ...
நினைவிலும் நீ..

தம்பியைக் கண்டதும், அவனைக் கண்டு விட்டதாயும் அவனை அங்கே நிற்குமாரும் செய்கை செய்துவிட்டு, தம்பியை நோக்கி நடந்தான் நவாஸ்.

“அஸ்ஸலாமு அலைக்கும் நானா...'' நவாஸ் அருகில் வந்ததும் முகமன் சலாம் சொன்னான் தம்பி.

தன் புருவங்களைச் சுருக்கி, நெற்றியை உயர்த்தி, அவனைப் பார்த்த நவாஸுக்கு, இவனிடம் தான் நினைப்பதை எப்படிக் கேட்பது என்று ஒருவித எண்ணம் தோன்றவும், காரின் சாவியால் நெற்றியைக் கீரியபடியே....

‘‘தம்பி... ஒங்கட மைனீ கிட்ட விஷயத்த செல்லீட்டா...?” மெதுவாய்க் கேட்டான்.

தம்பியும் உடனே, ‘‘ஓ.... நானா... பாவம்... மைனீ நல்லா பயந்து...

அவ வேற கேள்வி கேட்டு, நான் ஏதாவது உளறிட்டன் எண்டா ஒங்களுக்கிட்ட பேச்சி கேக்க வாகுமே... நான் டக்கென்டு கோல கட் பண்ணிட்டன்” பதில் தந்தான்.

“தம்பி உடையான் படைக்கஞ்சான்” என்பார்களே...

இதுக்காகத்தான் இருக்கும்...

‘இவன் ஒருவன் போதும்...

நான் ராஜ்ஜியங்களை வென்றிட.... தோள்களை அகற்றி, புஜங்களை உயர்த்தி, படைவீரனைப் போல தன்னை உருவகப் படுத்திக் கொண்டான் நவாஸ்.

இதுவும் ஒரு வகைப் போர் தானே... அன்பெனும் போர்....

“வெரி குட். அப்படித்தான் ஈக்கணும்..” மனம் திறந்து பாராட்டினான்.

“வாங்க நானா.. நாங்க போம்... மைனீ வந்தீக்கும்...” கைகளைப் பிடித்து, இழுத்து அவசரப்படுத்தினான்.

“ஓகே” தோளைக் குலுக்கிக் கொண்டு அவனுடன் சேர்ந்து நடந்தான்.

“தம்பி, for your kind information நாங்க இப்பவே ஹிஸ்னா வ மீட் பண்ணப் போற இல்ல.. எனக்கு அவ என்ன செய்ற என்டு பார்க்கோணும்...” என்று இழுவையாகச் சொல்லி முடித்தான்.

“நானா...'' என்று அதிர்ச்சியாய்ப் பார்த்தவனை, அவன் தோளில் இரு கைகளையும் போட்டு, “பார்த்துக் கொள் வோம் தம்பி... அரசியல்ல இதெல்லாம் சாதாரணம்...” என்று சிரித்துக் கொண்டே

சேர்ந்து நடந்தான்.

ஹிஸ்னா குழந்தைகளுடன் ஆட்டோவில் வந்து இறங்குவதையும், அவனைத் தேடித் தவிப்பதையும், இருவரும் ஒளிந்து இருந்து பார்த்தனர்.

ஹிஸ்னா போனை உயர்த்தும்போதே தம்பிக்குத் தான் கோல் எடுக்கிறாள் என்று முன்கூட்டியே யூகித்தவன் உடனே தம்பியின் மொபைலை சைலன்டில் போட்டான்.

ஒவ்வொரு சம்பவத்தையும் கூட நின்று பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு ஹிஸ்னா தன் மேல் எவ்வளவு அன்பாக இருக்கிறாள் என்பது அப்பட்டமாகப் புரிந்தது.

அவள் திரும்பத் திரும்ப கோல் எடுக்கும் போது, “பாவம்... நானா.. மைனீ பதறிப் பெய்த்து...'' நவாஸின் தம்பி ஒப்பாரி வைக்கத் தவறவில்லை.

“தம்பி, சபியாவுக்கு கோல் எடுத்து ஹாஸ்பிடலுக்கு வரச் செல்லுங்கோ.... அதோட அந்த லெட்டரையும் மறக்காம எடுத்துக் கொண்டு வரச் செல்லுங்கோ... நான் செல்றத்த விட சபியா சென்னாத்தான் ஹிஸ்னா நம்புறண்டும்....”

மீண்டும் அவனது ஆணையைத் தம்பி செவி சாய்த்தான்.

ஹிஸ்னா குழந்தைகளைக் கவனிக்கும் விதத்தில் அவள் பொறுப்புக்களை எவ்வளவு தூரம் உணர்ந்து செயல் படுத்துகிறாள் என்பதையும் புரிந்து கொண்டான்.

முதிய பெண்மணியிடம் ஹிஸ்னா பேசிக் கொண்டிருந்தபோதே.. நவாசுக்கும் அந்த பெண்மணி சொல்லியது சரி என்று தான் பட்டது.

‘‘தம்பி.. இப்ப எடுங்க.. ஒங்கட மைனீக்கு கோல...” கொலரை உயர்த்தி, கண்ணாடியை மாட்டிக்கொண்டு ஸ்டைலாகச் சொன்னான் நவாஸ்.

நவாஸின் தம்பியும் ஏற்கனவே பேசி வைத்ததைப்போல ஹிஸ்னாவுக்குத் தகவல் கொடுத்தார். தம்பியை பின் கேட்டு வழியே போய் முன்வாயிலுக்கு வருமாரு பணித்து விட்டு, பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு முன்னே செல்லும் ஹிஸ்னாவின் பின்னால் இவனும் தொடர்ந்தான்.

மூத்த மகன், ‘‘சாச்சா..'' என்று கைகாட்டியதும், ஹிஸ்னாவின் பார்வை தொலைதூரம் போய் நவாஸைத் தேடி, ‘இல்லை’ என்று சோர்ந்து திரும்பியது.

ஏதோ... திடீரென... அவள் கண்களைப் பின்னால் இருந்து இரு கைகள் மூடியது.

குழந்தைகள் “அபூ...” என்று குதூகளித்தன. ஹிஸ்னாவும் சந்தோஷம் கலந்த பயத்தில் உறைந்து போனாள்.

‘உண்மையிலேயே.... இவர் என்னமோ செய்யத்தான் போகிறார்... என்று மட்டும் அவளுக்கு விளங்கியது. இனி அவ்வளவுதான்... அவர் வேறு யாருடனோ போகப் போகிறார்....‘

அவளின் படகு மெல்ல.... மெல்ல.... மூழ்கத் தொடங்கியது.

நவாஸ் என்ன செய்யப் போகிறான்...?

அன்பின் பாலம் தொடரும்....

# நம்பிக்கை
# தன் நம்பிக்கை; மூட நம்பிக்கை

திருமதி.இரா.இராஜாமணி.
ஈரோடு

நம்பிக்கை என்பது பலரது அனுபவங்களால் சொல்லப்படுவது.

தன்நம்பிக்கை என்பது நமது செயல்களினாலும் பயிற்சியினாலும், நமக்கு நாமே தரும்ஊக்கத்தினாலும் உருவாவது.

பயிற்சியோ, முயற்சியோ முற்றுப் பெறாத நிலையில் விளையும் செயல்களுக்கு எதிரே இருப்பவையே காரணம் என்பதே மூட நம்பிக்கை.

சான்றாக, கரு மேகங்கள் வானில் எழுந்தால் மழை வரும் என்பது நம்பிக்கை. மழைவரலாம், வராமல் போகவும் பல காரணங்கள் இருக்கலாம்.

மழை வந்தாலும் நனையாமல் வீடு சென்றுவிடுவேன் என்பது கையில் குடை வைத்திருப்பவனின் தன்னம்பிக்கை.

குடை எடுத்துச் செல்லாதவன் 'இன்று சந்திராஷ்டமம் என்றோ, கிளம்பும் போதே எதிரில் பூனை வந்தது என்றோ' அதன் மேல் பழியைப் போடுவது மூட நம்பிக்கை.

மேலும் ஒரு சான்று. கூறுகிறேன்.

ஒருமுறை, அலெக்சாண்டர் போர்க் களத்தில் நிற்கிறார். எதிரிப்படைகள் பத்தாயிரம் பேர் நிற்கிறார்கள்.

அலெக்சாண்டர் பக்கமோ, படையில் ஐயாயிரம் பேர் தான் இருக்கிறார்கள்.

படைத்தளபதி கூறுகிறான்-

'எதிரிப் படைகளில் பத்தாயிரம் பேர் உள்ளனர். நாமோ ஐயாயிரம் பேர் தான் உள்ளோம். அவன் ஜெயிப்பது உறுதி என்று கூறுகிறான் -

இவ்வாறு சொல்லி, அவநம்பிக்கை யாகப் பேசுகிறான்.

.

பொதுவாக, இரண்டு மடங்கு வீரர்கள் கொண்ட படை வெற்றிபெறும் என்பது நம்பிக்கைதானே!

அலெக்சாண்டர் கூறுகிறார். 'என்னைச் சேர்க்காமல் எண்ணிவிட்டீரா தளபதி?" என்று சொல்லி விட்டு,

'ஐயாயிரம் பேர் என்கிறீர்கள், என்னையும் சேர்த்து எண்ணினால் நம் பக்கம் பத்தாயிரம்பேர் ' - - என்று கூறிவிட்டு

'வாருங்கள், போர் தொடங்கலாம்' என்றாராம்.

இது அவரது தன்னம்பிக்கை.

தோற்ற படைத் தளபதி சொன்னானாம். 'இன்றைக்கு டு விழித்த முகம் சரியில்லை' என்று இது தான் மூட நம்பிக்கை.

ஆன்மிகவாதிகள் தெய்வநம்பிக்கையை தன்னம்பிக்கையாகக் கொள்வர்.

பகுத்தறிவு பேசுபவர்கள் **மூட நம்பிக்கைகள்** சில எனப் புறந்தள்ளுவர்.

வள்ளுவர் கூறுகிறார்

***'ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றி***
***தாழா துஞற்று பவர் (****குறள் எண் 620)*

'விதியைமதியால்வெல்லலாம்'என்பார்கள்.

சிலர் தெய்வ நம்பிக்கையை பற்றிக் கொள்வர். தெய்வமோ முயற்சியுடையோரிடம் தொற்றிக் கொள்கிறது.

ஒரு முறை... இருவருக்குள் "இறைவன் எங்கிருக்கிறான்?'' என்ற போட்டி நடக்கிறது. தேடுதல் வேட்டையில் ஈடுபடுகிறார்கள்.

கோவிலுக்குச் செல்கிறார்கள், அங்கு தேடிப் பார்த்த போது, அந்த நேரம் தெய்வம் அங்கே இல்லை என உணர்கிறார்கள்.

ஒரு பஜனை நடக்கும் இடத்திற்கு வருகிறார்கள், அங்கேயும் தெய்வம் இல்லை என உணர்கிறார்கள்

.

பெரிய பணக்காரர் விழா நடத்தி அன்னதானம் செய்கிறார். அவ்விடத்திலும் இறைவனைக் காணவில்லையாம். நடந்து நடந்து தேடித் தேடி அலுத்துப் போகிறார்கள்.

ஒரு மரத்தின் கீழ் நிழலுக்கு அமர்கிறார்கள்.

அருகே ஒரு கட்டிடம் கட்டும் தொழிலாளி கற்களை சம்மட்டிகொண்டு உடைத்துக் கொண்டுஇருக்கிறான். அவன் மனைவி அருகில் ஒரு துண்டுகையில் கொண்டு நிற்கிறாள்.

அவனுக்கு வியர்வை வெளிப்பட்டு நெற்றியில் வழிகிறது. இடது கையை நீட்டுகிறான். அவள் துண்டைத் தருகிறாள். துடைத்துவிட்டு, திரும்பிப் பார்க்காமல் துண்டை வீசிவிட்டு வேலையில் ஈடுபடுகிறான்.

வீசிய துண்டை சிரித்தபடியே லாவகமாகப் பிடித்த தெய்வம் சிரித்தபடி மறைந்தது.

உண்மையில் அவன் மனைவி மரநிழலில் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டு இருக்கிறாள்.

மின்னல் வெட்டியது போல அங்கே தெய்வம் தெரிந்தது கண்களுக்கு.

இருவரும்ஒருவரைஒருவர்பார்த்தபடி, 'உழைப்பவன் அருகில் தெய்வம் தொண்டு செய்யக் காத்திருக்கிறது.'என்று பேசிக் கொள் கிறார்கள்.

உழைப்பே உயர்வு தரும்.

உண்மை உழைப்பே வளர்ச்சிக்கான நம்பிக்கை.

இதுவே, எனது தன்னம்பிக்கை.

# மகன் பிறந்தான்....

## தந்தை மனம் பூத்த பாக்கள்)

சிந்தை மகிழவைத்தாய்!
இன்பம் தனைத்தந்தாய்!
தந்தை எனும்பேறு
. தந்திட்டாய்! - வந்துவிடும்
காலம் உனதாகும்!
. ஞாலம் சிறப்பாகும்!
சூலுதித்த சூரியன் நீ.

அழகு ;திறமை ;
. அறிவு ;வளமை;
பழக இதம்தரும்
. பான்மை; .- நிலவின்
குளிர்மை; மனதுள்
. உயர்வெண்ணம், பொதிந்த
தளிரே! அழைக்கிறேன் வா.

நாளை உலகம்
. நலம்பெற வேஇங்கே
ஆளப் பிறந்தவன்
. நீயாவாய் - காலைக்
கதிர்போல வந்து
. மனம்மகிழ் வித்து
சதிர்நடை போடு சிறந்து.

ரோசா இதழ்விரித்து
. நீசிரிப்பாய் உள்ளத்தால்
ராசாநீ வாழ்கவென
. வாழ்த்தி,வாரி -நேசமாய்
உன்னை கரமெடுத்துக்
. கொஞ்சி மகிழ்ந்திருப்போம்!
என்றும்நீ எங்கள் உயிர்.

பொன்னொளியாய் வந்தாய்!
. புதுநகை பூத்துவென்றாய்
சின்னகை யாலே
. இனிமைசெய்தாய் - சின்னவன் நீ
சிந்தையுள் என்னை
. செதுக்குகின்றாய்! என்மகனுன்
சிந்துமொழி யால்மகிழ்ந் தேன்.

கன்னல் சுவைதான்
. மதுரமொழி வெண்பஞ்சு
கன்னம் இரண்டும்
. பவளமணி! - விண்ணுலவும்
வெண்ணிலா தானுன்
. வதனமப்பா! என்மகனே!
உன்நேரிங் காரோ அழகு.

என்பேரைச் சொல்ல
. இனிதிங்கு வந்தாய்;உன்
பண்குர லாலே
. தகப்பனென - என்றன்
மனம்குளிர வேஅழைப்பாய்;
. ஆனந்தம் கொண்டேன்
உனைமகனாய்ப் பெற்றத னால்.

காந்தள் விரல்நீட்டி
. நானுன் வாரிசென்று
சாந்தமலர் புன்னகையால்
. சாடைசொல்லும். - மாந்தளிரே !
மானிட வர்க்கத்துள்
. வந்தவான் வெண்ணிலவாய்
பூநடையால் பூமி உலவு.

வட்டாட்சியர் ஜி லோகநாதன்

## கமல. அருள் குமார் கவிதைகள்

■

தங்கத்திலான கூண்டு என்பது
கிளிக்குப் பெருமையில்லை..
தகரத்திலான ஓடு என்பது
கூரைக்கு சிறுமையில்லை..

பளபளக்கும் அம்பு என்பது
அது செய்யும் கொலைக்கு
பெருமையில்லை..
சலசலக்கும் அருவி என்பது
அது தரும் நீருக்கு
சிறுமையில்லை..

அலையில்லா கடல் என்பது
அதில் போகும் தோணிக்கு
பெருமையில்லை...
விலையில்லா மூங்கில் என்பது
வெளிவரும் இசைக்கு
சிறுமையில்லை...

இரும்பிருக்கும் இடத்தில்
கரும்புக்கு அவசியமில்லை..

விருப்பம் இருக்கும் இடத்தில்
திணிப்பிற்குத் தேவையில்லை..

பிடித்ததை வைத்துக் கொள்வதில்
சிறுமையில்லை - எதையும்
பிடித்து வைத்துக் கொள்வதில்
பெருமை இல்லை...

■

வண்டார்க்கும் மதுகொண்ட
பங்கய குளத்தில்
வந்தேகும் நீர் தடுக்கும்
மதக்குடைப் பெடுக்க...

வெள்ளம் பெருக்கெடுக்க
தண்டுயர வழியின்றித்
தண்ணீர்
முண்டகத்தை மூழ்கடிக்க..
அண்டி மது அருந்திடும்
தும்பி முதலும் பிற வண்டு
இனமும் ..

உண்டி உண்டிட
அண்டைக் குளம் தாவும் ...

பங்கையக் குளம் சீராகி
முண்டகம் மேல் எழும்ப..

ஆங்கு வண்டுகள் முன்போல்
ஆர்ப்பரிக்கும் அன்ன
விரும்பா வினையால்
விலகிய உறவுகள்...

இரும்பாய் இருந்தாலும்
இன்றில்லை நாளை
கரும்பாய் இனிக்கும்
காலம் வந்தேகும்...

■

இறங்கும் போதும்
இரங்கும் போதும்
கவனம் தேவை..

இணையும் போதும்
இணைக்கும் போதும்
கவனம் தேவை

வழுகும் போதும்
வழங்கும் போதும்
கவனம் தேவை...

பழகும் போதும்
பழுக்கும் போதும்
கவனம் தேவை..

பருகும் போதும்
பருக்கும் போதும்
கவனம் தேவை..

உருகும் போதும்
உருக்கும் போதும்
கவனம் தேவை...

விலகும் போதும்
விலக்கும் போதும்
கவனம் தேவை..

■

வேர்களில் ஈரம்
இருக்கும்வரை இலைகள்
காய்வதில்லை..

போர்களின் ஓலம்
கேட்கும்வரை வயிறுகள்
நிறைவதில்லை..

விழுதுகள் பாரம்
தாங்கும் வரை
மரங்கள் சாய்வதில்லை..

விளைச்சல்கள் பூமியில்
நீங்கும் வரை
அறங்கள் தேய்வதில்லை..

கடல்களில் தண்ணீர்
உள்ளவரை அலைகள்
ஓய்வதில்லை..

கரங்களில் கருணை
உள்ளவரை மனிதம்
மாய்வதில்லை..

**கமல. அருள் குமார்**

சென்னை.



# உளி பேசும் மொழி

நெல்லை க. சோமசுந்தரி

கவிஞர். எழுத்தாளர் தொல்லியல் ஆர்வலர்

சென்னை, தமிழ்நாடு

35

அக்னியினை உருவாகக் கொண்டு அண்ணாமலையார் எழுந்தருளியுள்ள திருவண்ணாமலையின் ஆலயமானது கலைநயமிக்க எழில் கொஞ்சும் சிற்பங்கள், அழகுடன் கம்பீரமாக எழுப் பப்பட்டுள்ள மண்டபங்கள் அதனைத் தாங்கி நிற்கும் சிற்பங்களுடன் கூடிய கல்தூண்கள், வண்ண ஓவியங்கள், உலோகங்களால் வார்த்து எடுக்கப்பட்ட செப்புத் திருமேனியில் சிற்பக்கலை நுணுக்கத்தை வெளிப்படுத்தும் உற்சவ மூர்த்திச் சிற்பங்கள், வானளாவிய கோபுர வாயில்கள், கலைச் சிற்ப வேலைப்பாட்டுடன் செய்யப்பட்டுள்ள அழகிய தேர்கள் எனக் கலைக்கூடமாகக் காட்சியளிக்கிறது. இதனை அகில உலகிற்கும் பறைசாற்றும் விதமாக ஆண்டு தோறும் மிகவும் விமர்சையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தை விழா, மார்கழி விழா, திருக்கார்த்திகை திருவிழா மற்றும் பங்குனித் திருவிழா போன்ற விழாக்கள் அண்ணாமலையார் ஆலயத்தின் கலைநயத்திற்கு மேலும் அணி சேர்க்கிறது.

இவ்வனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் இவ்வாலயத்திற்கு மட்டுமின்றி திருவண்ணாமலை நகரத் திற்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் அந்நகரின் முதன்மையாகவும், மற்றும் இயற்கையாகவே அமைந்துள்ள மலை யானது ‘திருவண்ணாமலை‘ என்றால் மிகையாகாது.‘ நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலை‘. மலையை வலம் வந்து வழிபடும் முறை தோன்றிய தலம் என்பதால், திருவண்ணாமலையில் சிவனே மலையாக வீற்றிருப்பதால், இது கைலாயத்திற்கு இணையான மலை யாக அண்ணாமலையாராகவேக் கருதப் படுகிறது. அதனாலேயே இம்மலையை வலம் வந்து பக்த கோடி பெரு மக்கள் தரிசித்து வணங்குகின்றனர். இதனையே ‘கிரிவலம்‘ அதாவது ‘மலை வலம்‘ என்று அழைக்கின்றனர். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மலை வலத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

அவை மட்டுமின்றி, மூலிகை மரங்கள் நிறைந்த இம்மலைக்கு மேலும் பல சிறப்பு அம்சங்கள் நிறைந்து காணப்படுகிறது. திருவண்ணாமலையானது 14 கிலோ



மீட்டர் சுற்றளவும், ஏறத்தாழ 2671 மீட்டர் உயரமும் கொண்டு கம்பீரமாக வீற்றிருக்கிறது. இம்மலையின் அடிவாரத்தைச் சுற்றிப் பல கோவில்கள், ஆசிரமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. என் கோண வடிவில் அமைக்கப்பட்டுள்ள அஷ்ட (எட்டு) சிவலிங்க ஆலயங்களானது, மிகவும் சிறப்பு வாய்ந்தது.



அதில் அண்ணாமலையார் ஆலயத்தின் ராஜகோபுரத்திற்கு அருகில் கிழக்கு திசையில் அமைந்துள்ளது. 'இந்திர லிங்கம்' அதனையடுத்து இரண்டாவதாகத் தென் கிழக்கு திசையில் நெருப்பின் அம்சமாக 'அக்னி லிங்கம்' அமைந்துள்ளது. அடுத்ததாகத் தென் திசையில் 'எமலிங்கமும்', தென் கிழக்கு திசையில் 'நிருதி லிங்கமும்' அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கு திசையில் நீரின் அம்சமாக 'வருண லிங்கமும்' வடமேற்கில் காற்றின் அம்சமாக 'வாயு லிங்கமும்' வடதிசையில் 'குபேர லிங்கமும்' அமைந்துள்ளது. மலைவலப்பாதையுடன் வடகிழக்கு பாதையில் எட்டாவதாக 'ஈசானிய லிங்கம்' அமைந்துள்ளது. கிரிவலப் பாதையின் சிறிது தூரத்தில் ஆதியிலிருந்த பழமையான அண்ணாமலையார் சிவன் கோயில், ரெட்டைப் பிள்ளையார் கோயில், பூத நாராயண சுவாமி கோயில், முக்கியமான அம்மன் கோயிலாகப் பச்சை அம்மன் கோயில் போன்றவை சிறப்புப் பெற்ற தலங்களாக உள்ளது. மலை வழிப்பாதையின் வடபுறம் குபேர லிங்கம் ஆலயத்திற்கு அருகில் வித்தியாசமாகச் சிறிய அளவிலான இடுக்குப் பிள்ளையார் ஆலயம் உள்ளது. இவ்வாலயத்திற்கு மூன்று சிறிய வாசல்கள் உள்ளது. இவ்வாசலுக்குள் ஒருக்களித்துப் படுத்தவாறு உள்ளே நுழைந்து வெளியே வர வேண்டும்.



திருவண்ணாமலையில் கிரிவலம் வருவது நான்கு யுகங்களிலும் நடைபெற்று வருவதாக ஸ்தல வரலாறு கூறுகிறது. புராணக் கதையின் வாயிலாக, கிரிவல மகிமையைக் கலியுகத்தில், பாண்டிய மன்னன் வஜ்ராங்கதன் அறிந்ததாகப் புராணங்கள் கூறுகிறது. ஒருமுறை பாண்டிய மன்னன் வஜ்ராங்கதன், வேட்டையாடுவதற்காகச் சென்ற போது, வாசனை மிக்க புனுகுப் பூனையைக் கண்டான். அந்த பூனையைப் பிடிக்க ஓட, அது அவனிடமிருந்து தப்பிக்க மலையை அடைந்தது. மன்னனும் குதிரையில் விடாது விரட்ட, அது மலையை ஐந்து முறை சுற்றி வந்தது. அம்மலையைப்

பூனையும், குதிரையும் சுற்றி வர, மன்னன் குதிரை மீது அமர்ந்து சுற்றி வந்தான். ஐந்து முறை சுற்றி முடிந்ததும் கோயிலுக்கு எதிரே வந்த போது பூனையும், குதிரையும் கீழே விழுந்து உயிரை விட்டன. அப்போது, கிரிவலத்தால் சாப விமோசனம் பெற்று உயிரிழந்த பூனையும், குதிரையும் கந்தர்வர்களாக மாறி விண்ணுலகம் சென்றன. அதைக்கண்ட மன்னன் என்னவென்று விசாரிக்க, அவர்கள் இருவரும் கைலாயத்தில் சிவ



பூஜை செய்த கந்தர்வர்கள் என்றும், சாபத்தின் காரணமாகப் பூனையாகவும், குதிரையாகவும் மாறியதாகத் தெரிவித்த னர். நாங்கள் இரண்டு பேரும் இன்று இந்த புண்ணிய மலையை ஐந்து முறை வலம் வந்ததால், சாப விமோசனம் பெற்று கைலாயம் செல்கிறோம். ஆனால், நீ குதிரை மீதிருந்தபடி கிரிவலம் வந்ததால், உனக்குப் பலன் கிடைக்கவில்லை. இந்த மலையை நீயும் வலம் வந்தால் ஒவ்வொரு அடிக்கும், ஒரு அஸ்வமேத யாகம் செய்த பலனை அடைவாய் என்று கூறி இரண்டு




பேரும் விண்ணுலகம் சென்றார்கள். இவ்வாறாக பல்வேறு மகிமைகளைக் கொண்டதாகத் திருவண்ணாமலை இருப்பதன் காரணமாகவே, கிரிவலம் செல்வோர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது

இம்மலையைச் சுற்றி அமைக்கப் பட்டுள்ள பல ஆலயங்களும், பல வகையினில் சிறப்புப் பெற்று பக்தர்களின் வருகையானது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருப்பினும் அவை அனைத்தும் கலை வண்ணங்களுடன் சிற்ப வேலைப்பாட்டுடன் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஆன்மீகமும், கலைகளும், ஒன்றோடு ஒன்று இயைந்து பல நூற்றாண்டு காலமாக நம் தமிழகத்தில் வளர்ந்து வருவது மட்டுமின்றி இன்றும் அதன் தொன்மையையும், சிறப்பினையும் பல நூற்றுக்கணக்கான ஆலயங்கள் பறை சாற்றிக் கொண்டுள்ளன. அவ்வகையில் அண்ணாமலையாரின் ஆலயம் தனித்துவ மானது என்பதனை நம்மால் உணர முடியும். இவ்வளவு சிறப்பு பற்றி விளங்கும் அண்ணாமலையார் ஆலயத்தின் கலைநயத்தினை உளியின் மொழி வாயிலாக நாம் அறிந்து கொண்டோம்.

மேலும், ஐந்து தனித்துவமான சிவால யங்கள், முறையே பஞ்சபூதத் தலங்களான ஆகாயத்தை உருவாகக் கொண்ட சிதம்பரம் நடராஜர் கோவில், நிலத்தினை



குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோயில், நீரினை அடிப்படையாகக் கொண்ட திருவானைக்கோவில் ஐம்பு கேஸ்வரர், காற்றினை ஆதாரமாகக் கொண்டுள்ள திரு காளத்தியப்பர் மற்றும் அக்னியினை அடிப்படையாகக் கொண்ட திருவண்ணாமலையார் ஆலயங்கள் ஆகிய வற்றைப் பற்றியும், அவைகளின் கலை சிற்பங்களைப் பற்றியும், ஒவ்வொரு ஆலயத்தின் தனிச் சிறப்புகளைப் பற்றியும் ஏறத்தாழ மூன்று வருட காலமாக, உளியின் மொழியின் வாயிலாக நாம் அறிந்து கொண்டோம்.

இத் தொடருடன் பயணித்த அனைத்து வாசகர் நெஞ்சங்களும் இதனை உணர்ந் திருப்பார்கள் என்ப தனை நம்மால் அறிய முடிகிறது. இத்தொடரின் ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட 'பஞ்சபூதங்களில்' உள்ள கலைப் படைப்புகளைப் பற்றி ஒரு சிறிய அளவில் இத்தனை திங்களாகத் தொடரில் எடுத்துரைக்கப்பட்டது. இத்தொடரானது அடுத்த திங்களுடன் முற்றுப்பெறும் என்பதை உளியின் வழியாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(அடுத்த இதழில் முற்றும்)

**உளி பேசும் மொழி பற்றிய கருத்து →**

உளி பேசும் மொழி நெல்லை க.சோமசுந்தரி அவர்களின் தொடர் மிக விஸ்தீரணமாக செதுக்கப்பட்டு வருகிறது. பக்தி என்பது மெய்ஞானம் என்றாலும் அதை உணர நம் முன்னோர்கள் முன்னெடுத்தது விஞ்ஞானத்தை தான். ஒவ்வொரு காலகட்டத்திலும் நம் பாரம் பரியம் கலாச்சாரம் மற்றும் வாழ்வியல் ஆகியவை ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தும் நிலைத்திருக்கவும் அவற்றை பிற்கால சந்ததியினர் அறிந்து கொள்ளவும் ஆலயங்களையும் திருவிழாக்களையும் உருவாக்கினர். அவை ஒவ்வொன்றையும் நாம் நேரில் சென்று பார்க்க முடியாத நிலையில் நெல்லை க.சோமசுந்தரி போன்ற ஆய்வாளர்கள் தம் கள ஆய்வு மற்றும் கட்டுரைகள் மூலம் நாம் தெரிந்து கொள்ள வழிகாட்டுகின்றனர்.

அதில் இந்த உளி பேசும் மொழியில் பஞ்சபூத தலங்கள் குறித்து பதிவு செய்துள்ள அனைத்தும் மிக பிரம்மிப்பாக இருக்கிறது. காற்றின் ஆளுமை மிக்க திருக்காளத்தியும் நீரின் நிறை தன்மை மிக்க திருவானக்காவும் நிலத்தின் திடம் மிகுந்த காஞ்சியும் மிகவும் அழகாக ஆலய வரலாறு மட்டுமின்றி பூகோள விளக்கங்களோடு மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டிருந்தது.

ஆகாயத்தின் அண்ட பிரமாண்டத்தை இன்றைய விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டு இன்னமும் அது குறித்து ஆய்வைத் தொடரும் வகையில் மைக்ரோ-நானோ என்னும் மின்னணுவியலின் மூலக்குறியீடான ஆனந்த ஈசனாம் நடராஜர் மற்றும் தில்லையின் அற்புதங் களை இந்த உளி பேசிய மொழி அவரின் துறைசார் நிபுணத்துவத்தை தெள்ளென பறை சாற்றும்.

தற்போது உளி பேசிக் கொண்டிருக்கும் அக்னித்தலமான நினைக்க முக்தி தரும்

திருவண்ணாமலை குறித்த தகவல்கள் மனதோடு மிகவும் அழகாக ஆழமாக இருக்கிறது. என் சொந்த ஊர் என்பதால் இது மேலும் சிறப்பு ஈர்ப்பினை தருகிறது. ஊர் மற்றும் ஆலயத்தின் சிறப்புகள் உடன் பல நூற்றாண்டுகளாக பலராலும் கட்டப்பட்ட அண்ணாமலையார் ஆலய கட்டட கலை நுணுக்கம் மிக நேர்த்தியாக சொல்லியுள்ளார். அதிலும் குறிப்பாக பெரிய நாயகர் எனும் சோமாஸ்கந்தர் எங்களுக்கு தலைவர்... அவரின் புன்னகை நிறைந்த முகத்தை காண்பது மட்டுமே உலக சிவனடியார்கள் அனைவருக்கும் இருக்கும் தேடலும் ஆறுதலும் முக்தியும் ஆனந்தமும். இத்தகு சிறப்பு வாய்ந்த திருவுருவத்தை மிக அழகாக வர்ணித்து இருப்பதுடன் பாரம்பரிய சிலை வடிக்கும் திறனையும் எழுதியுள்ளது பாராட்டுக்குரியது. இதுமட்டுமின்றி திருவண்ணாமலை குறித்து மிகவும் சுவாரஸ்யமான தகவல்களை அதிக அளவில் பதிவு செய்வது குறிப்பிடத்தக்கது.

நெல்லை க. சோமசுந்தரி அவர்களின் அகண்ட ஞானம் சீர் மிகு தமிழ் புலமை ஆழ்ந்த ஆன்மீக நோக்கம் எல்லாம் இணைந்து பக்திக் கட்டுரை என்றாலும் அவரின் தனித்துவம் மிகச் சிறப்பாக வெளிப்படுத்திடும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் அவர்களுக்கு நன்றியும் தமிழ் கூறும் நல்லுலகில் சிறந்த எழுத்தாளராக கல்வெட்டு ஆய்வாளராக ஆன்மீக தென்றலாக மென்மேலும் சிறக்க உண்ணாமுலை உடனாகிய அண்ணாமலையார் அருளை வேண்டுகிறேன்.



**- சாந்தா தேவி**
அக்குயோகா
மருத்துவர்,
வாழ்வியல்
ஆலோசகர்,



# பாதையெல்லாம் சோலையாகும்

## பாவலர் கருமலைத்தமிழாழன்







விழிகள் மூடிப் படுத்திருந்தால்
விடியல் விழிக்குத் தெரியாது
விழித்த விழிக்கே இருள்விரட்டி
விடிந்த ஒளியின் எழில்தெரியும்
வழியா வியர்வை உடலிருந்தால்
வாழ்க்கை இருளில் போய்முடியும்
பொழியும் வியர்வை உடலுக்கே
பொலியும் அழகு வாழ்வமையும் !

விரல்கள் பத்தும் அருங்கருவி
வீணாய் வைத்தால் வெறுங்கருவி
விரல்கள் இயங்கும் திறன்பெற்றால்
வியக்கும் மாற்றம் உனில்விளையும்
வரங்கள் எல்லாம் கனவுகளில்
வாய்க்கும் அற்புத மந்திரங்கள்
விரல்கள் ஒன்றே இந்நிலத்தில்
விளைக்கும் அற்புத சரித்திரங்கள் !

காலை மடக்கி அமர்ந்திருந்தால்
கடந்து போமோ பாதையினை
காலை மாலை மாறிமாறி
கடந்து செல்லும் உனைவிட்டே
நாளை என்று கடத்தாமல்
நடக்கக் காலை எடுத்துவைத்தால்
பாலை மணலும் பூக்களாகும்
பாதை யெல்லாம் சோலையாகும் !

வெல்லும் முயற்சி இல்லாமல்
வெற்றி உன்னில் விளையாது
புல்லும் உனக்கு வில்லாகும்
புதிய முயற்சி உனக்கிருந்தால்
அல்லும் பகலும் சோராமல்
ஆற்றும் உறுதி தளராமல்
சொல்லும் வியர்வை முத்துகளால்
சொர்ணம் போல வாழ்வொளிரும் !


# தென்றலின் மார்கழிக்கிறுக்கல்கள்



1.
வண்ண மலர்கள் மலர்ந்திருக்க மார்கழி
எண்ணம் போல் வந்தே எழிலாகும்-மண்ணில்
மழையின் சிறு தூறல் வானம் வழங்க
இழைந்த வருகை இதம்



2.
மலர்கள் வருகை மயங்கிட வைக்கும்
நலங்கள் விளையும் நலிவை-விலக்கும்
கலக்கம் அகற்றி கவலைகள் போக்கும்
உலவுகின்ற தென்றல் உலகு.



3.
நீலப் பூ பூத்திருக்க நிம்மதி தேடியே
காலைப் பொழுது கழிந்தது-வேலை
முடிந்தே இதமாக முன்றில் பனியில்
விடிந்த அழகோ வியப்பு.


4.
வண்ணங்கள் தோய்ந்து வளமாய் வாழ்வினிதாய்
மண்மகள் பூத்தாள் மகிழ்வினில் -கார்காலக்
காதல் சிலிர்க்கக் கவிதை மழையினில்
காலமெல்லாம் சொல்லும் கவின்.

5.
பள்ளிக்குச் சென்றிடுவாய் பண்பினைநீ கற்றிடுவாய்
கள்ளமில்லாப் பெண்ணாய் கவனமாக-துள்ளலுடன்
என்றும் நடையிடுவாய் எதிலும் கருத்தாகத்
தென்றலென வீசிடுவாய்.. செல்



6.
நிறம்மாறா தென்றும் நிலையாய் மனத்தை
அறவழியில் அன்பாய் நடக்க-மறவாதே
எண்ணங்கள் என்றும் எழிலுடன் வைத்திருக்க
வண்ணங்கள் ஆகும் மனம்.

- தென்றல் கவி தமிழ்ச்சிட்டு பட்டுக்கோட்டை.



# வெண்பாப் போட்டி (பயணம்) 49

ஒற்றுமை நின்றிட ஓங்கிடும் உன்புகழ்
வேற்றுமை நீக்கிட வேரறுக்கும் உன்துன்பம்
பற்றுடன் வந்திடும் பாச உறவுகளால்
கற்கின்ற பாடம் களம்

**பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை**

.

திண்டாட்டம் தீரத் திருவிளங்க மாந்தருக்கே
கொண்டாட்டம் வேண்டும் குவலயத்தில்! பண்டிகைகள்
உண்டாக்கி வைத்தான் உவந்தே சகம்முழுதும்
பண்டாக்கி வைத்த பரன்!

**சுந்தர ராசன்**

.



மனிதநேய மாண்புடனே மக்களெல்லாம் வாழ
இனிதாகப் புத்தாண்டே வந்து – கனியெனவே
நல்லதமிழ் பேசி நலமுடனே யாம்வாழ
வெல்வழியே காட்டு விரைந்து.

**பாவலர் தாழை ந. இளவழகன், மணப்பாறை.**

.

புனிதத் திருநாளாய்ப் பொங்கித் ததும்பும்
இனிமை தரும்பண் டிகையாம் – மனிதரின்
தூய உணர்வுகளைத் தூக்கி நிலைநிறுத்தி
நேயப் பயிர்வளர்க்கும் நீடு!

**பாவலர் கோவதன், மலேசியா**

ஒற்றுமையைக் கூட்டும் உலக அமைதியைப்
பற்றிவரும்ஷ் பண்பாட்டுப் பண்டிகையால் – கற்பவைகள்
பாடமாகும்! வாழ்வைப் பயனாக்கும்! வெற்றியைக்கொண்
டாடவைக்கும் முக்கியநன் னாள்.

**மாலதி திரு**

.

இம்மதம் தானெனக்(கு) என்றெவரும் முன்கூட்டிச்
சம்மதம் ஈந்தாரோ சார்ந்தொழுக? – அம்மதத்தில்
தோன்றியதால் பண்டிகையைத் தொட்டெடுத்தல் கொள்சடங்காய்
ஊன்றியதே இவ்வாழ்வில். ஒப்பு

**விசு. இம்மானுவேல், பெங்களூரு**

.

பண்டிகை கூட்டிடும் பண்பாட்டைத் தம்முள்ளே
அண்டச்செய் தார்கள் அகமகிழ்ந்தே – கொண்டாடும்
பக்குவத்தைப் பெற்றவராய்ப் பைந்தமிழர் எல்லாரும்
திக்கெட்டும் பேர்பெற்றா ரே !

**எம்.ஆர்.தனசேகரன், மலேசியா.**

.

அன்பைச் செலுத்தி அகமகிழ்ந்து போற்றிடவே
இன்பம் பெருகும் இயல்பினால் – துன்பம்
விலகிப் பகையற்று வேற்றுமை நீங்கி
உலகில் தழைக்கும் விழா!

**கீதா அருண்**

.

பண்டிகை யென்றும் பயன்தரும் வாழ்வினிலே
கொண்டாட்ட மாகும் குவலயத்தில்! – பண்பாடாய்ப்
பாரினிலே தோன்றிடும் பொங்கல் திருநாளும்
சீர்தந்து செல்லும் சிறப்பு.

**இரா . சம்பந்தன் – யேர்மனி**

மனிதநேயம் நாளும் மலரும் புவியில்
புனிதமது தானாய்ப் புலரும் – தனித்து
விளைந்த சுயநலத்தை வீழ்த்திய நெஞ்சம்
களைந்த கழனியாகும் காண்

**ஜனனி**

பண்டிகைகள் யாவும் பழக்கத்தில் வந்துபின்
பண்பாடாய் மாறுவதைப் பார்த்துள்ளோம் – கண்குளிர
கொண்டாடும் குறையில்லை என்றானால்
வண்ண மயமாகும் வாழ்வு!

**செ. இராசா**

தேரோட்டம் என்றாலும் தீர்த்தவாரி என்றாலும்
ஊரோடு கூடும் ஒருநாளில் – சீரோடு
பந்தங்கள் சேர்ந்துமே பண்ணிடும் சீண்டலில்
சொந்தம் நெருங்குமே சூழ்ந்து.

**அ. சி. தியாகராசன், காரைக்குடி**

பொங்கல் திருநாளைப் பூரிப்பாய்க் கொண்டாடு
திங்களாம் தையில் தெளிவுடன் – எங்குமே
செங்கதி ரோனைச் சிறப்புடன் போற்றிடும்
மங்காத் தமிழரின் மாண்பு.

**பாவலர் க.சண்முக சிதம்பரம்**

தொன்றுதொட்டு பண்டிகை தோள்சுமப்ப தேனென்று
சின்ன மனமும் சிறிதேனும் – நின்றதுண்டோ
சிந்தையில்; பண்டிகை சீர்செய்யும் பண்பாட்டை
பந்தமாய் காலமெல்லாம் பார்த்து

**பூர்ணிமா சங்கர்**



முன்னோர்கள் கட்டமைத்த முத்தான பண்டிகைகள்
இன்போடும் பண்போடும் ஈந்துவக்கும் – நன்னெறியைத்
தந்தருளும் துணைநின்றே உள்ளுவக்க
வந்திடுமே வாழ்வில் வனப்பு.

**வானதி சந்திரசேகரன்**

இன்பத்தேன் நாளும் பொழிந்திடவே எல்லோரும்
ஒன்றித்தே அன்பால் இணைந்திடவே – என்றென்றும்
பொன்னாளாய் பூக்க உறவுகளும் கொண்டாடும்
நன்னாளும் வாழ்வில் இனிது.

**வாசுகி பிரபா**

ஒற்றுமையாய் வாழ்வில் உயர்ந்திடுவோம் அன்பாலே
பெற்றிடுவோம் நன்மைதரும் பேரின்பம் – கற்கட்டும்
சந்ததியும் காலச் சரித்திரத்தில் வாழத்தான்
வந்தனைத்து வாழ்த்தட்டும் வான்.

**பாவலர்மணி வா.சண்முகம்**

பண்பாட்டைக் காத்திடப் பண்டிகைகள் வேண்டுமென்பேன்
பண்பட்டு வாழ்ந்திடப் பாரினிற் – கண்ணென
வண்ணமாய்ச் சீர்மிகும் வாழ்த்தொளி மின்னிட
எண்ணஞ் சிறக்கும் இயல்பு .

**சரஸ்வதி பாஸ்கரன்**

மாண்புடன் வாழ்ந்தே மனிதம் வளர்த்திட
மீண்டும் வழிகாட்டும் மேன்மையால்–ஆண்டருள்
நேயமுடன் நோக்க நிலைக்கும் திருவருள்
தூயமனம் காணும் துணிவு

**குளோரியா ரூபா, சுவிற்சர்லாந்து**

அன்பை விதைக்கும் அரவணைத்துச் சுற்றத்தை
இன்முகம் காட்டியுன்ன இல்லழைக்கும் – முன்னோரின்
பண்பாட்டை ஓங்கவைக்கும் பாரில் தமிழ்நாட்டுப்
பண்டிகைகள் என்றே பகர்!

**பாவலர் கருமலைத்தமிழாழன், ஓசூர்**

.

பண்பாட்டைப் போற்றிடப் பண்டிகை வந்திடும்
மண்ணின் பெருமையே மாண்புறும் – கொண்டாட்டம்
இன்பத்தைக் கூட்டும் இடர்களைப் போக்கிடும்
அன்பைப் பகிர்வோம் அறிந்து.

**ஓசூர் மணிமேகலை**

.

இயந்திர வாழ்க்கையில் இன்பமது கானா
மயங்கி அலையும் மனசும் – தயங்காது
பண்டிகை காலத்தில் பண்புடன் மூழ்கிடக்
கண்ணில் தெரியும் களிப்பு.



**சோ. சுந்தரேசுவரி.**

.

அன்புடன் பாசமும் ஆற்றலுடன் ஒற்றுமையும்
இன்பமுடன் நல்நட்பும் எல்லாமும் – ஒன்றாகக்
கொண்டாடி இல்லங்கள் கூட்டமாய் வாழ்ந்திடும்
பண்டிகைகள் பண்பாட்டின் வேர்

**கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.**

.

மனிதமும் போற்ற மனமும் மகிழும்
இனிதாக வாழும் இதயம்! – மனிதா
கனிவுறும் சொல்லால் கரைந்தோடி துன்பம்
பனிபோல் உருகிடும் பார்.

**பாவலர்மணி நிறைமதி நீலமேகம்**

சாதிக் கலவரம் சாதனை இல்லையடா
பாதி அறிவால் பலியாதல் – நீதியல்ல!
ஓதிய வேதம் ஒதுக்கிவிட்(டு )அன்புடன்
போதித்த ஒற்றுமையைப் போற்று.

**தன்ராஜ் பாப்பணன்**

.

இறைவனின் அன்பால் இனிதாய்ப் பிறப்பு
கறைபடா உள்ளமும் காட்டும் – மறையாத
ஏழ்மையைக் கண்டே இரங்கத் துடிக்கும்
வாழ்வில் மனிதம் வரம்.

**இந்திராணிதங்கவேல்**

.

கண்ணசைவில் காண்கின்ற காட்சிகள் கண்ணிலே
விண்ணேறி வானில் விளையாடும் – வண்ணமே
எண்ணத்தால் முன்னோடும் ஏற்றமுடைப் பண்டிகை
மண்ணிலே பேசுமதன் மாண்பு.

**குயில்.மு.இரசியாபேகம்.**

.

தங்கிடும் வண்ணமே தைமகள் தோன்றிட
மங்கலம் காணுமே மாநிலம் – பொங்கிடும்
தைமகள் வந்ததும் தைத்தே பெறலாம்அத்
தைமகள் கைவரத் தை.

**சி. செல்லமுத்து, மேல்மங்கலம்.**

.

பண்டிகை என்றால் பணவிரயம் என்பேன்யான்
தண்டச் செலவுகள் தானதிகம் – கண்டபடி
பட்டாசு பட்டாடை பாவிக்கக் கந்துவாங்கி
வட்டியை ஏற்றுவதா வாழ்வு?

**சுந்தர்ராஜ் தயாளன்**

# வெண்பாப் போட்டி (பயணம்) 50

## போட்டியின் கால அளவு  பெப்ரவரி 01 முதல் 12 வரை 2026

இம்மாதப் போட்டி.... **தலைப்பு : -**

அன்றாடம் வீட்டில் அம்மா, மனைவி சமையலை நாம் சாப்பிடுவது வழக்கம்......
ஆனால் தொடர்ந்து ஒரே உணவை சமைத்துச் சாப்பிடச் சொன்னால் எல்லோருக்கும் ஒரு சலிப்பு ஏற்படுவது வழக்கம்....
உதாரணமாக உப்புமாவை எடுத்துக் கொள்வோம்.....
நாலைந்து நாளாக இதே உப்புமா தானா?
இன்றைக்காவது இட்லி அல்லது தோசை செய்திருக்கலாமே....
என்று சலிப்போடும் வெறுப்போடும் சொல்வதை ஒரே வெண்பாவில் சொல்ல வேண்டும்....
எந்த உணவு சமைத்தார்கள்.... அதைத் தவிர்த்து
எந்த உணவை நீங்கள் சமைக்கச் சொன்னீர்கள் என்பதை உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளலாம்.....

.

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

இதோ எ கா பாடல் : --

.

எப்பவுமே சட்டினியும் இட்டிலியும் வைக்காம
இப்பவாச்சும் பூரி இடியாப்பம்  - உப்புமான்னு
புத்தம் புதுசாநீ போடாம விட்டதால
செத்துடுச்சி என்நாக்கு (ச்)சீ.

அசத்துங்கள் கவிஞர்களே...

.

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.
காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்...

**தளர்வுகள் :-** தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.
நன்றி🙏

**பொதுவான விதிகள்** :-    ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.
வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

என்றும் தமிழுடன்....
**தமிழ்நெஞ்சம் ஆசிரியர்**
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

# கற்பகத்தின் கல்யாணம்





11

**அன்புச்செல்வி சுப்புராஜு**
பட்டாபிராம், சென்னை - 600072

'உங்களுக்குப் பிடிச்சிருக்கு தானே... வாங்கிக்கங்க... இதோ இது என் பே ஸ்லீப்' கேட்டபடியே நீண்ட அவரது கைகளைப் பார்த்தபடியே...

'உங்களுக்கு என் வீட்டுச் சூழ்நிலை தெரியலனு நெனைக்கிறேன்ங்க... இப்பதா படிச்சு முடிச்சு, தையல் பயிற்சி பள்ளி நடத்திட்டு இருக்கேன். அப்பாவுக்கு ஒடம்பு சரியில்லை, தம்பி, தங்கச்சிங்க படிக்கணும். இதுதா எம் மண்டைக்குள்ள ஓடுது. கல்யாணத்தைப் பத்திலாம் யோசிக்கவே இல்லை... இதுல நீங்க வேற பிடிச்சுருக்கா - பிடிக்கலையானு...'கற்பகம் பேசப்பேச' இப்பக்கூட நீங்க வேற வேற காரணந்தா சொல்றீங்களே தவிர்த்து, பிடிக்கலைனு சொல்லலை' இடை மறித்தார் செல்வம்.

கோபத்துடன் சித்தப்பாவை உறுத்துப் பார்த்தபடியே 'ஏஞ் சித்தப்பா இப்படி பேசுறாரு... சும்மா ஒக்காந்து வேடிக்கை பாக்குறீக... உங்களுக்குத் தெரியாத விசயமா?' கற்பகம் கேட்கவும் மறுமொழி பேச எத்தனித்த சித்தப்பாவை கவனித்தில் கொள்ளாமல் செல்வத்துடன் வந்திருந்த பெரியவர்களைப் பார்த்து 'மன்னிக்கவும் ஐயா, எனக்கு இப்போதைக்கு திருமணம் செய்ய விருப்பமில்ல. நீங்கள் வேற பொண்ணு பார்த்துக்கோங்க' என்றாள்.

'அடடா... என்னம்மா படபடன்னு பொரியற, கொஞ்சம் நிதானப்படு. தம்பி கொடுக்கறத வாங்கி வச்சிக்க... அம்மா வந்ததும் காட்டு. காலைல நானும், அம்மாவோட போய் அப்பா கிட்ட பேசறேன். இப்ப உன் கல்யாணத்தை நடத்தவாவது உங்கப்பா சரி ஆவார்ல' சித்தப்பா சொல்லிக்கொண்டு இருக்கும் போதே 'யார்க்கா இவங்க...' மண்ணெண் ணெய் கேனுடன் உள்ளே நுழைந்த தங்கச்சி கேட்கவும்' வந்தவுகள மொதல்ல வாங்கனு கேக்காம யாரு, எவுகனு என்னா கேள்வி பாப்பா?' கற்பகம் சத்தமிட 'பரவாயில்லைங்க சின்னப்பிள்ளைதானே.. ' சமாதானம் சொன்னார் செல்வம்.

'அக்காவுக்கு வேற வேலையில்லா, இந்தா வாரேன்' உள்ளே சென்று மண்ணெ ணண்ணெய் கேனை வைத்து விட்டு, கை கழுவிய பிறகு தூக்குவாளியுடன் வந்த தங்கச்சி 'காசு கொடுக்கா, டீ வாங்கிட்டு வரேன்.வேற ஏதும் வாங்கணுமா?' என்று கேட்டாள்.

'நல்ல வளர்ப்பு, வாத்தியார் குடும்ப முனா சும்மாவா... ' பெரியவர் சொல்லவும் சிரித்தபடியே பணத்தைத் தந்தாள் கற்பகம்.

'சிரிச்சா மகாலட்சுமியாட்டம் இருக்க ம்மா, பொறவு ஏன் எப்ப பார்த் தாலும்

சோகமா… இல்லைனா கோவமா இருக்க?' பெரியவர் கேட்கவும் 'அதொன்னுமில்லைங்க ஐயா' என்று தொடங்கியவளை இடைமறித்து 'தாத்தான்னு கூப்பிடும்மா, கல்யாணம் ஆவுது…. ஆகல… அது அடுத்த விசயம், நாங்க உனக்கு தாத்தா மொறை, அவன் மாமா மொறை, அப்படியே கூப்பிடு' என்றார்.

'சரிங்க தாத்தா, நீங்க என்னைப் புரிஞ்சுக்கணும். இன்னும் மூனு வருசங் கழிச்சுதா கல்யாணமுனு நெனச்சிருக்கேன். அது தெரியாத சித்தப்பா உங்களக் கூப்பிட்டு வத்துட்டாக… தப்பா நெனைக் காதீக… சொந்தக்காரவுகளா எப்ப வேணும் னாலும் நீங்க இங்க வரலாம் தாத்தா '

'நல்லா பேசுற தாயி… ஏலே செல்வம், நீ பேசுன பேச்சுல புள்ள பயந்துடுச்சோ என்னவோ… இங்கேயே இரு… அந்த ரூமுக்குப் போய் நா பேத்தியா கிட்ட கொஞ்சம் பேசிட்டு வாரேன்… சரிதா னுங்களே' சொல்லிய தாத்தாவையும், வேகமாகத் தலையாட்டிய சித்தப்பா வையும், சிரித்தபடியே இருந்த செல்வத் தையும் பார்த்து 'ஐயோ… ' என்று இருந்தது கற்பகத்திற்கு.

'மொதமொத வீட்டுக்கு வந்துருக்காக… வெறும் டீ எப்படி தரது… அதா லட்டும், மிச்சரும் வாங்கிட்டு வந்தேன். காசு செலவாயிடுச்சுனு கத்தாத வச்சுக் கொடு' மெதுவாக காதுக்குள் பேசுவதாக நெனச்சு சத்தமாக தங்கச்சி பேச… எல்லாரும் சிரிக்கத் தொடங்கினார்கள்.

'ஆத்தி… மொறைக்காத, நானே வச்சுத் தரேன்… '

'உம்பேரு என்ன பாப்பா' கேட்ட செல்வத்திடம் 'நானொன்னும் பாப்பா இல்ல, எட்டாவது படிக்கிறேன்… உங்க பேரு என்ன?' எதிர்க் கேள்வி கேட்டாள் தங்கச்சி.

'எம்பேரு செல்வம்'

'எம்பேரு முத்துச்செல்வி'

'நல்ல பேரு'

'எனக்கே தெரியும்'

'வாயாடி'

'ஆத்தி… எம் பட்டபேரு அது, அதச் சொல்லாதீக'

'உத்தரவு மகாராணி'

இரண்டு பேரும் பேசிச் சிரிக்க, 'பாப்பா…' என்று அழுத்தமாகக் கூப்பிட் டாள் கற்பகம். உடனே அமைதியாகி, பலகாரங்களுடன், டீ கொடுத்து தள்ளி நின்று கொண்டாள் முத்து.

தொண்டையைச் செறுமிய செல்வம் 'இதோ பாருங்க, பார்க்கும் போதே உங்க சூழலும் புரியுது, உங்களோட குணமும் புரியுது. நா சுத்தி வளைச்சுப் பேசல, எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு, உங்களுக்கு என்னையப் பிடிச்சிருந்தா அம்மா வரவும் கலந்து பேசிட்டு, உங்க சித்தப்பாகிட்ட சொல்லி விடுங்க. இன்னைக்கு புதங் கெழமை. வெள்ளிக்கெழமை பூ வச்சி, வெத்தலை, பாக்கு மாத்திரலாம், அவசரப்பட்டு ஏதுஞ் சொல்லாதீக, இப்ப உங்களுக்கு ஏதும் புரியாத குழப்பமா இருக்கும். நல்லா யோசிச்சு காலைல சொல்லுங்க போதும்' தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போதே 'ஏலே… என்ன பேசுவேன்' இடைமறித்தார் தாத்தா.

தொடரும்…

# அக்கரைப் பச்சை!

இக்கரையில் நிற்கும் போதில்
இயல்பாகத் தெரியும் காட்சி!
அக்கரையைக் காணும் போதில்
அங்கேதான் வளமாய்த் தோன்றும்!
தக்கதொரு வாக்கைக் கூறித்
தடங்காட்டிச் சொன்னார் முன்னோர்!
அக்கறையாய் நினைத்தோம் என்றால்
அனைத்ததுவும் சமம்தான் என்போம்!

மாடிவீட்டில் வாழ்ந்தால் கூட
மண்குடிசை கண்டே ஏக்கம்!
தேடிவந்த செல்வம் யாவும்
சிறப்பான நிறைவைத் தாரா!
கூடி வாழும் குடிசை மக்கள்
கோபுரத்தின் செல்வம் கண்டு
வாடி யிங்கே நிற்பார் பாரீர்!
வாழ்க்கையென்றால் இதுதான் உண்மை!

இருப்பதிலேயே நிறைவைக் காண்போம்!
இனியெதுவும் விருப்பம் வேண்டாம்!
பொருளாசை விளைக்கும் கேடு!
பொறுமையைத்தான் போற்றும் நாடு!
வருகின்ற வெற்றி யாவும்
வாய்ப்புகளின் பயனால் கூடும்!
புரிகின்ற தொண்டு தானே
புவியினிலே பெயரைக் காக்கும்!

ஒசூர் மணிமேகலை



## சோம்பலுக்கு விடை கொடு

புத்தாண்டு தினத்தன்று
புதுஉறுதிமொழி எடுப்பது நன்று
அதில் ஒன்று உருப்படியாய்
சோம்பலுக்கு விடை கொடுப்பது நன்று

கோடிக்கோடியாய் சேர்த்த சொத்தில் நீ
சொகுசாக எத்தனை நாள் வாழ்வாய்?
மாடிமாடியாய் கட்டி வாழ்ந்தாலும் நீ
தூக்கத்தை எப்படி வாங்குவாய்?
நாளெல்லாம் சோம்பலிட்டு நடக்காமல்
நீயிருந்தால் தேடி வரும் நோய் உன்னை.

வயலுக்குப் போய்வா உழவனின்
உழைப்பை உணர்ந்து வா
கடலுக்குப் போய் வா மீனவனின்
உழைப்பை உணர்ந்து வா
நகரத்திற்குப் போய் வா அம்மக்கள்
இரவெலாம் கஷ்டபடுவதைப் பார்

சாதித்தவர் சரித்திரத்தைத் தேடிப் படி
சோதனைகளால் பட்டபாடு பல தெரியும்

சும்மா கிடைக்காது எதுவும்
அம்மாவின் தியாகம் போல்

அறிந்து கொள் நன்றாய்
நீ உன் உறவுக்குக் கொடுக்கும்
உண்மையான பரிசு
உன் ஆரோக்கியமே...

சோம்பலுக்கு விடை கொடு
சரித்திரம் படைத்திடு.

முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி
புதுச்சேரி.

**ஏகாந்தம் விலகியதே**
**ஏந்திழை வருகையாலே**

எண்ணமதில் நிறைந்தவளே
எனக்குள் நுழைந்தாயே

என்னருகில் வந்தாயே
புன்னகைப் புரிந்தாயே

விழியசைவில் வீழ்த்தியே
விந்தைகள் செய்தாயே

மங்கையுனது உள்ளமே
மாசில்லாத குணமே

நளினமான நங்கையே
நெஞ்சமதில் கங்கையே

வஞ்சியின் வனப்பில்
வசீகரமான ஈர்ப்பே

ஏகாந்தம் விலகியதே
ஏந்திழையின் வருகையாலே

மகிழ்வானது மனம்
மறந்ததில்லை தினம்

மலரிடைத் தேனாய்
இதழ்களில் இனிப்பே

இனியவளே காதலால்
இதமானது இளமையே

ஓராயிரம் ஆசைகளது
ஓய்ந்திடாது ஒருபோதும்

அரும்பிய மொட்டே
அன்பானேன் சிட்டே

சிலிர்த்திட்ட பருவமும்
சில்லென்றானது உன்னாலே

எழிலால் மயக்கிய
என்னவள் நீதானே

இளையவளே இதயத்தில்
பூத்திட்ட முல்லைமலரே

சஞ்சலமில்லை என்னுள்ளே
சந்தோசமது வந்ததே



பெ.வெங்கட லட்சுமி காந்தன். விருதுநகர்

**1. நன்மைகள் - நல்குவாய்**

நல்லனவே செய்தபடி நால்வர்க்(கு) உதவிடுவோம்;
வெல்லுகின்ற சொல்லெடுத்து வெண்பாவும் - நல்லனவாய்
இன்சுவையாய் நற்பொருளில் ஏற்றமொடு தான்செய்து
பொன்னுலகு செல்வோம் புரிந்து!

**2. சொல்லும் குழறுமே**

நன்சொல்லைப் பேசுவதால் நன்மை பெருகிவரும்
புன்சொல்லைப் பேசிப் பொறிகலங்கல் - நன்றோ;
இனியவை பேசியென்றும் இன்பம் பெறுவோம்
கனிவுடன் பேசல் களிப்பு!கவிஞர்

**3. மார்கழித் திங்களில்**

ஆதியந்தம் இல்லா அருட்சோதி பாடிய
வாதவூ ரானை வணங்கிடுவோம் - வேதத்தின்
நாதனைப் பாடிய நங்கைதன் தாள்பணிவோம்
போதமார்க ழித்திங்கள் போழ்து!



*(வாதவூரார் - மாணிக்கவாசகர்;*
*நங்கை - கோதை நாச்சியார்;*
*போதம் - ஞானம்)*

கவிஞர்.இரா.சீ.பாலகுமார்.M.A .,
சந்தோசபுரம் .சென்னை - 600073.

# சிறுவர் சங்கமம்

## நட்பு

அன்பால் வருவது நட்பு!
பார்புகழ உதவும் நட்பு!
மலராய் மலர்வது நட்பு!
கனியாய் கனிவது நட்பு!
ஓவியம் போன்றது நட்பு!
காவியம் படைப்பது நட்பு!
ஆடி மகிழ்வது நட்பு!
அடிபட்டால் ஓடி வருவது நட்பு!

**ர.மகாலட்சுமி**, ஏழாம் வகுப்பு,
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி, தொட்டணம்பட்டி,
வேடசந்தூர் ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம்.

## மல்லிகை

வெள்ளை நிற மலரே!
கொள்ளை அழகு மலரே!
குண்டு குண்டு மலரே!
சுண்டி இழுக்கும் மலரே!
வாசமாக நீயும் இருக்கிறாய்!
உன்மேல் பாசமாக நானும் இருக்கிறேன்!
கொத்துக் கொத்தாய் பூத்திருக்கிறாய்!
முத்து முத்தாய் மலர்ந்திருக்கிறாய்!
பஞ்சு போன்ற மலரே!
என் நெஞ்சை அள்ளும் மலரே!
நீயின்றி சிறக்காது திருமணம்!
உன்னை தினம் சூட ஏங்குதே என் மனம்!

**ச.யுவஸ்ரீ**, ஏழாம் வகுப்பு,
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
தொட்டணம்பட்டி, வேடசந்தூர் ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம்.



# விடுகதைகள்

1). அமைதியான பையன்.அடிக்காமலே அழுவான்.அவன் யார்?

2).நீலக் குளத்தில் வெள்ளை நுரை.அது என்ன?

3). கிரீடம் வைத்த அரசனுக்கு வயிறெல்லாம் பல்.அவன் யார்?

4). வயிறு நிறைய உண்டால் வானத்தைப் பார்ப்பான்.அவன் யார்?

5).கைக்குள் அடங்கும் பிள்ளை.கதை நூறு சொல்லும் பிள்ளை.அது என்ன?

6). வாழ்நாள் முழுவதும் வாயைத் திறந்திருப்பான்.அவன் யார்?

7). எண்ணெய்யில் பூக்கும் பூ.எண்ணெய் வற்றினால் வாடும் பூ.அது என்ன?

8)உயிரில்லாத நீதிபதி.நியாயமாகத் தீர்ப்பு சொல்வார்.அவர் யார்?

9).குடுமி வைத்தவன் , சந்தை தவறாமல் இருப்பான்.அவன் யார்?


10).கருப்புக் கடலில் ஒரு வெள்ளை படகு.எவ்வளவு புயலடித்தாலும் மூழ்காது.அது என்ன?

**ச.சுபஸ்ரீ,** ஏழாம் வகுப்பு,
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி, தொட்டணம்பட்டி,
வேடசந்தூர் ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம்.

விடைகள்
41 ஆம்
பக்கம்





ரா.சோபிகா



ரா.ஷிவானி






ஜீ.தஜேஷே். . . . .






ஜீ.நறுமுகை



பைரூஸ் அம்ஹர்
தரம் :02
அ/அல் மனார்
மு.வி
முஸ்லிம்
ஹல்மில்லாவ





பா.அருளீஸ்வரன்

# எலிகளின் கதை

ஜீ.மைத்ரேயி
வந்தவாசி

ம்ம்ம்.... என அழுதது குட்டி எலி. அதை பார்த்த அம்மா எலி 'ஏன் குழந்தாய் அழுகிறாய்? பார்ப்பதற்கு நல்லாவே இல்லை' அழுது கொண்டே வந்த குட்டி எலியைப் பார்த்துக் கேட்டது. ஒரு பூச்சி, உணவைக் கூடபா பிடித்துச் சாப்பிட முடியவில்லை என்றது குட்டி எலி.

'இதனால் உன்னை யாராவது அடித் தார்களா?' என்று அம்மா எலி கேட்டது. 'இல்லை' எனத் தலையை ஆட்டியது குட்டி எலி.

'அப்புறம் எதுக்கு அழுகிறாய்? நான் சொல்வதைக் கேள்... முதலில் எல்லோரி டமும் நட்பாகவும், ஒற்றுமையாகவும் விளையாடு' என்று சொன்னது அம்மா எலி.

அழுதபடியே விளையாடச் சென்றது குட்டி எலி. அங்கே நிறைய எலிகள் விளையாடிக் கொண்டே இருந்தன. என்னால் மட்டும் ஏன் உணவை எடுக்க முடியவில்லை?' என நினைத்துக் கொண்டு இருந்தது குட்டி எலி.



'மற்ற எலிகள் உன்னை விட வேகமாக ஓடுகின்றன, சின்னச் சின்ன பொந்துகளிலும் நுழைகின்றன. நீ அழுதால் மட்டும் உணவு கிடைத்து விடுமா? நீ பிடித்துச் சாப்பிட வேண்டும். நாம் அழும் போது ஆறுதல் மட்டுமே மற்றவர்கள் சொல்லுவார்கள்' அம்மாவின் பேச்சில் ஆறுதலாக இருந்தது குட்டி எலிக்கு.

அம்மாவின் நம்பிக்கையான பேச்சு பெறும் ஆறுதலாக விளங்கியது குட்டி எலிக்கு. அன்று மாலை வீட்டிற்கு வந்த எலிகள் ஒற்றுமையோடு கதைகள் கேட்டும் விளையாடிக்கொண்டே இருந்தன. அனைவரிடமும் ஒற்றுமையாகவும் விளையாடிக் கொண்டே இருந்தார்கள்.

ஒரு சில எலிகள் உணவை எப்படி எடுப்பது என ஆராய்ச்சி செய்து கொண்டு இருந்தன. ஒற்றுமையாக செல்லாமல் தனியாக சென்று சாப்பிடலாமா என யோசித்துக் கொண்டே இருந்தன. அம்மா எலி அனைவருக்கும் நல்லொழுக்க கதை களைச் சொல்லிக் கொண்டே இருந்தார் கள். அதோடு மட்டுமில்லாமல் உடலுக்கு சத்தான உணவை எவ்வாறு எடுத்துச் சாப்பிடலாம் என சொல்லிக் கொடுத்தார் அம்மா எலி.

எலிக் குட்டிகள் பொறுமையுடன் அனைத்துக் கதைகளையும் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அன்று முதல் எலி குட்டிகள் அழாமல் தைரியத்துடன் செயல்பட தொடங்கின. கூட்டத்தில் சென்று இனிப்புகளைச் சாப்பிட தொடங்கின.

## 39 பக்க விடைகள்

1. ஐஸ்கட்டி
2. வானம்
3. மாதுளை
4. கோணிப்பை
5. புத்தகம்
6. தபால்பெட்டி
7. விளக்கு
8. தராசு
9. தேங்காய்
10. நிலா

# எறும்புப் பயல்

சோமனுர்னு ஒரு ஊர் இருந்துச்சு. அந்த ஊரில் எப்பவும் வெயில் அதிகமாக இருக்கும். அதனால் அந்த ஊரில் உள்ள பள்ளிக்கு அதிக விடுமுறை கிடைக்கும்.

சந்தோஷ் அந்த ஊரில் உள்ள பள்ளியில் நான்காம் வகுப்பு படித்து வந்தான். இவன் எதைப் பார்த்தாலும் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டே இருப்பான். பலரும் அவனை வருங்காலத்துல பெரிய விஞ்ஞானியா வருவானு சொன்னாங்க. ஆராய்ச்சினா விஞ்ஞானி பண்ணுற மாதிரி எல்லாம் கிடையாது. அது என்ன ஆராய்ச்சினா அவனைச் சுற்றி நடக்கும் எந்த விசயத்தையும் கூர்ந்து கவனிப்பான் அவ்வளவு தான்.

அப்படிதான் ஒருநாள் இரவு அவன் தூங்க செல்லும் முன் ஒரு எறும்பைப் பார்த்தான். வழக்கம் போல அதைப்பற்றி ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்து விட்டான். அப்பொழுது அவனுக்குள் ஒரு கேள்வி எழுந்தது அது என்னவென்றால் ஏன் இந்த எறும்புகள் எல்லாம் உருவத்தில் மிகச் சிறியதாக உள்ளது என்று யோசிக்க தொடங்கினான். உடனே இந்தக் கேள்வியை அவன் அம்மாவிடம் சென்று கேட்டான். அது இயற்கையின் படைப்பு அதனால் சில பயனும் மற்றும் சில நேரம் ஆபத்தும் உள்ளது என்றார் அம்மா.

அதைக் கேட்ட சந்தோஷ் நாமும் எறும்பு போல இருந்தால் எப்படி இருக்கும் என எண்ணினான்.

மறுநாள் காலையில் எழுந்து பார்த்தான் சந்தோஷ். அங்கே பல மேடுகள் இருந்தன. அதில் அவன் நிற்கும் பொழுது அது அப்படியே உள்ளே சென்றது. அங்கே நீளமான பட்டையான ஒரு பெரிய குன்று இருந்தது. அதில் இது என்ன இடம் என்று பார்க்கலாம் பிறகு அம்மா, அப்பாவைத் தேடலாம் என்று எண்ணினான் சந்தோஷ்.

அந்த இடத்தைத் தொட்டுப் பார்த்தான். அது மெதுமெதுவென்று இருந்தது. அதில் ஏறிப் பார்த்தான். ஒரு பெரிய கரடி உருவம், பூ எல்லாம் வரையப்பட்டிருந்தது.

இது என்னுடைய அறை போல தெரிகிறது ஆனால் ஏன் எல்லாம் ரொம்ப பெரிசாக தெரிகிறது? சிந்தித்தவனுக்கு அதுதான் புரியவில்லை.

அப்பொழுது அவன் மேஜை அருகில் எறும்புகள் பெரிதாக செல்வதைக் கண்டான். ஐயோ! நான் தான் ரொம்ப சிறியதாக மாறிவிட்டேன்னா? ஐயோ இப்பொழுது என்ன செய்வேன். சரி, அம்மா அப்பாவை பார்த்து என்னை மாற்ற என்ன வழி என்று கேட்கலாம்?

இந்த அறையை விட்டு எப்படி வெளியே செல்வது என்று யோசித்தான். நொடியில் ஒரு யோசனை தோன்றியது இந்த கட்டிலின் கால் வழியே சறுக்கிக் கொண்டே கீழே செல்லலாம் என யோசித்தான்.

அந்த யோசனையை செயல்படுத்தி அறையை வீட்டு வெளியே வந்தான். அவன் அப்பா சோபாவில் அமர்ந்து

இருப்பதைப் பார்த்தான். ஆனால் அவன் அப்பா சிறிதாக மாறவில்லை அதை நினைத்து மகிழ்ச்சி அடைந்தான். சரி அப்பாவின் காது அருகில் சென்று கத்தி அப்பாவை பார்க்க வைக்கலாம் என எண்ணினான்.

அப்பாவின் கை வழியாக ஏறி அவர் காது அருகில் செல்லும் பொழுது அவன் அப்பா ஏதோ ஊறுவது போல நினைத்து கையை வைத்து தட்டினார். அதில் தப்பிக்க வேண்டும் என்று எண்ணிய சந்தோஷ் கீழே குனிந்து கொண்டான் அப்பாடா தப்பிச்சுட்டேன்.

சிறிது நேரம் கழித்து அவன் எப்படியோ அப்பாவின் காதுக்கு அருகில் சென்றான். அப்பா அப்பா என்று கத்தினான் அவர் சுற்றும் முற்றும் பார்த்தார். சத்தம் மட்டும் கேட்குது யாரையும் காணும் என்று யோசித்து தன் மனைவியை அழைத்துக் கேட்டார்.

‘உனக்கு எதாவது சத்தம் கேட்டுச்சா?‘

‘இல்லையே ஏன் என்ன ஆச்சு?‘ என்று கேட்டார்.

ஏதோ நின்று கொண்டு இருப்பது போல பார்த்தார் காதுக்கு அருகில் இருக்கும் சந்தோஷசை கையில் எடுத்து தூக்கி போட்டார் சந்தோஷ் ’ஆ ஆ’ என்று கத்திக்கொண்டே கீழே விழுந்தான். அந்நேரம் பார்த்து பலத்த காற்று அடித்ததால் அவன் சோபாவில் வந்து விழுந்தான்.

அப்பொழுது அவன் அம்மா வந்து அமர்ந்து வேர்க்கிறது என ஃபேன் போட்டார். அந்த பேன் சுற்ற வைத்தார். பேன் வேகமாக சுற்ற ஆரம்பித்ததும் அதில் வந்த காற்றில் அவன் பறந்து சோபாவின் நுனியை பிடித்து கொண்டான்.

அதிகமாக வந்த காற்றால் பறந்து சென்று அங்கு வைத்து ஒரு தண்ணீர் டம்ளரில் விழுந்தான். ‘ஐயோ, ஆ ஆ நான் மூழ்க போகிறேன்... என்னைக் காப்பாத்துங்க... காப்பாத்துங்க‘ என்று கத்தினான்.

அவன் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அம்மாவும், அப்பாவும் பயத்தில் அவனை எழுப்பினர் ‘டேய் சந்தோஷ், எழுந்திரு டா... என்ன டா ஆச்சு?‘ என்று கேட்டனர். அப்பொழுது தான் அவனுக்குப் புரிந்தது தான் இதுவரை கண்டது கனவு என்று.

அதையெல்லாம் அவன் அம்மா, அப்பாவிடம் சொல்லி ’இது உண்மையா இருக்குமோனு பயந்து விட்டேன் அம்மா‘ என்றான். அவன் சொல்லியதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

**கமல் சங்கர்**



# மரவெட்டியின் வேண்டுதல்

மரம் வெட்டும் தொழிலாளி ஒருவன், மரத்தில் ஏறி விறகு கட்டைகளை வெட்டுவதை வாடிக்கையாக கொண்டிருந்தான். ஒருமுறை மரத்தில் ஏறியவன் கிளைகளை வெட்டிக் கொண்டே மேல் நோக்கி சென்றான். சிறிது நேரத்தில் மரத்தின் உச்சிக்கு சென்றுவிட்டான். அப்போதுதான் கீழே கவனித்தான். கால் வைத்து இறங்குவதற்கு கூட கிளை இல்லாமல் எல்லாவற்றையும் வெட்டிவிட்டு மேலே சென்றிருந்தான்.



அந்த உயரத்தில் இருந்து கீழே பார்ப்பதற்கு அவனுக்கு பயமாக இருந்தது. கீழே இறங்க முடியாதே என கவலைப்பட்ட அவனுக்கு பயம் குடலைப் புரட்டியது. உடனே கடவுளிடம் வேண்டினான். கடவுளே, நீ என்னை பத்திரமாக தரையிறக்கினால், நான் என் பசுவை உன் கோவிலுக்கு தானமாக தருகிறேன் என்றான். வேண்டிக்கொண்டிருக்கும்போதே லேசாக சறுக்க, மரத்தில் இருந்து வழுக்கி சற்று கீழே வந்தான். இப்போது முன்புபோல உயரம் தெரியவில்லை. இப்போது அவனுக்கு கொஞ்சம் தைரியம் வந்தது.

பசு இல்லை கடவுளே, நான் உனக்கு எனது ஆட்டைத் தருகிறேன் என மீண்டும் வேண்டினான். இப்போதும் சறுக்கியது. இன்னும் கீழே வந்தான். ஆட்டை என்னால் தர முடியாது கடவுளே, நான் உனக்கு கோழியை தருகிறேன் என்றான். மீண்டும் சறுக்கி வழுக்க, ரொம்பவே கீழே இறங்கிவிட்டான். இப்போது அவனுக்கு பயம் போய்விட்டது. என்னால் கோழியும் தர முடியாது கடவுளே, நான் உனக்கு ஒரு முட்டையை படைக்கிறேன் என்றான். இப்போதும் சறுக்கல் எடுக்க இன்னும் கீழே இறங்கினான். இப்போது அவன் தரையில் இருந்து சில அடிகள் உயரத்தில் இருந்தான்.

உடனே அவன், உனக்கு எதையும் தர முடியாது கடவுளே, நானே கீழே இறங்கிக் கொள்கிறேன் என்று மரத்தில் இருந்து கீழே குதித்தான். விறகு கட்டைகளை பொறுக்கிக் கொண்டு மகிழ்ச்சியாக பாடிக்கொண்டு வீடு திரும்பினான். பயம் விலக விலக மனிதனின் நடவடிக்கைகள் படிப்படியாக மாறிவிடுகின்றன.

A s கோவிந்த ராஜன்

# உயிர்களைப் பேணி உறுபொருள் அடைவாய்



உலகம் முழுவதும் உயிர்களின் இருப்பிடம்!
கலகம் எதற்கு கண்ணோட்டம் கொள்வாய்!
பலவும் பிறப்பது பாரினில் வசிக்கவே!
நலமாய் அவற்றை நாமும் காக்கவே;

விலங்குகள் ஆயிரம் வீதியில் திரியுதே!
கலங்குமே பாவம் கவளம் இன்றியே!
இலங்குதல் வேண்டும் இயற்கை நியதிகள்!
துலங்கும் ஓர்வழி துரிதமாய் நிச்சயமே!

தண்ணீர் வைத்துத் தவிக்கும் பறவைக்கு!
மண்ணில் நாமும் மானுடம் காப்போம்!
எண்ணிலா நாய்கள் எல்லா இடத்திலும்!
கண்ணால் கண்டால் கருணை செய்வோமே!

மனநிலை பாதித்த மனிதரைப் பார்த்தால்;
தனக்கென யாருமிலாத் தனிநபர் கண்டால்;
உனக்குள் ஓர்குரல் உள்ளத்தில் ஒலிக்கும்;
நனவிலி எண்ணம் நனவாக்க வேண்டுமே

பாசியது படருமே பதுக்கிய பணத்தில்;
யோசித்துப் பாருங்கள் யோகத்தில் புலப்படும்!
யாசிக்கும் நிலையில் யாரையும் வைக்காமல்;
நேசித்து உதவிகள் நேரிலே செய்வோமே!

பெற்றோர் காத்தல் பெருங்கடமை ஆகுமே
வற்றா அருவியாய் வள்ளன்மை வேண்டும்
செற்றம் பார்க்காது செருக்கை விடுத்து
சுற்றம் பேணல் சூழ்பகை வெல்லுமே

வெறுப்பு எதற்கு வேதனையே மிஞ்சும்
அறுக்கும் உயிரை ஆழமாய் வதைத்து!
கறுப்பு நாளைக் களிப்புடன் வரவேற்று;
உறுப்பு தானம் உவந்து செய்வோமே!

இருக்கும் வரையில் இன்மை செய்யாமல்;
நெருக்கம் வளர்ப்போம் நெஞ்சில் இனிக்குமே;
விரும்பும் வரைக்கும் விதிப்படி நடந்து!
அருமை உயிர்களை அழியாமல் காப்போமே!

கயிற்றில் ஆடும் கடவுள் படைப்பில்
வயிற்றை நிரப்ப வன்மம் எதற்கு
பயிர்கள் மீதும் பாசம் வைத்து;
உயிர்களைப் பேணி உறுபொருள் அடைவோமே!

**இரா.கவிதா,**
பட்டதாரி ஆசிரியர், திண்டுக்கல்



# முயன்றால் முடியும்

மணிவண்ணனும் சங்கரும் பக்கத்து பக்கத்து வீட்டில் வாழ்பவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பர்கள்.

மணிவண்ணன் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கின்ற மாணவன்.

சங்கர் தனியார் பள்ளியில் ஆங்கில வழி கல்வி படிக்கும் மாணவன்.

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் மணிவண்ணன் சங்கர் வீட்டிற்கு விளையாட செல்வது வழக்கம்.

சங்கரின் அப்பா மணிவண்ணனை, ஆசையோடு மணி என்றே அழைப்பார்.

மணிவண்ணன் சங்கர் வீட்டிற்கு விளையாட செல்லும்போது, சங்கரின் அப்பா மணியை பார்த்து எப்படி படிக்கிறாய் என்று கேட்டார்.

நான் நன்றாக படிக்கிறேன் அய்யா என்றான்.

படித்து முடித்ததும் எந்த வேலைக்கு போக ஆசைப்படுகிறாய் என்று கேட்டார்.

நான்கலெக்டராகவிருப்பப்படுகிறேன். என்றான் .

நீ ஆசைப்பட்டது போல் கலெக்டர் ஆகி மக்களுக்கு நல்லது செய் என்று கூறிவிட்டு, தமிழ் வழிக் கல்வி படிக்கிறாயே.

நீ எப்படி கலெக்டர் ஆவாய் என்றும் ஆங்கில வழி கல்வி படித்தால்தான் இந்திய ஆட்சிப் பணி (IAS) தேர்வில் பதில்கள் எழுதி சுலபமாக தேர்ச்சிபெற முடியும் என்றார்.

நீ நினைத்ததை அடைய கடும் முயற்சி தேவை அதனால் நன்றாக படிக்க வேண்டும். லட்சியத்தோடு படி என்று உற்சாகப்படுத்தினார்.

சங்கரை பார்த்து மணிவண்ணன் லட்சியத்தோடு படிக்கிறான். அவனைப் போல நீயும் கலெக்டர் ஆவதற்கு நன்றாக படிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு இருவரையும் விளையாடச் சொல்லி அங்கிருந்து புறப்பட்டு வெளியில் சென்று விட்டார்.

வீட்டிற்கு வந்த மணிவண்ணன் அப்பாவிடம் சங்கரின் அப்பா கலெக்டர் ஆகவேண்டும் என்றால் ஆங்கில வழிக் கல்வி கற்றால்தான் இ.ஆ.ப. (ஐஏஎஸ்) தேர்வில் வெற்றி பெற முடியும் என்கிறார்.

அது உண்மையா அப்பா? என்றான்.

**இன்பத்தை பெருக்க இன்முகம் தேவை**
**பாசத்தை விதைக்க பைந்தமிழ் தேவை**
**ஞானத்தை பெற நற்றமிழ் தேவை**
**நன்னெறி பெற்றிட தாய்மொழி தேவை**

தாய்மொழியில் நீ நன்றாக படித்து கல்லூரி படிப்பை முடித்து அதில் வெற்றி பெற்று இ.ஆ.ப. (IAS) தேர்வு எழுதலாம்.

இ.ஆ.ப. (IAS) தேர்வு எழுத பொது அறிவு அதிகம் தேவை. பொது அறிவை வளர்த்துக்கொள்ள நீ நூலகம் சென்று படிக்க பழகிக்கொள்ள வேண்டும் என்றார்.

அப்படியா என்றான் மணிவண்ணன்.

ஆமாம் நீ பள்ளிக்கு செல்லும் வழியில் அரசு நூலகம் இருக்கிறது. நீ நூலகத்தை பார்த்தது இல்லையா? என்றார்.

ஆமாம் அப்பா நான் பார்த்து இருக்கிறேன். அனைவரும் போய் படிக்கலாமா என்றான்.

அரசு பொது நூலகம்தான். அனைவரும் படிக்கலாம். ஆனால் நூலகத்தில் இருந்து புத்தகங்களை வாங்கி வந்து வீட்டில் படிக்க நூலகத்தில் உறுப்பினராக சேர்ந்து உறுப்பினர் அடையாள அட்டை வாங்க வேண்டும் என்றார்.

மணிவண்ணன் அப்பாவிடம் என்னையும் உறுப்பினராக சேர்த்து விடுங்கள் என்று கேட்டான்.

நான் உன்னை நூலகத்தில் உறுப்பின ராக சேர்த்துவிடுகிறேன். நேரம் கிடைக்கும் போது சென்று பல நூல்களை வாங்கி வந்து படித்துப் பயன்பெறு என்றார்.

சில நாட்களுக்கு பின் மணிவண்ணனை அழைத்து சென்று நூலகத்தில் உறுப்பின ராக்கினார்.

சங்கர் மணிவண்ணனை பார்த்து இப்போ தெல்லாம் நீ எங்கள் வீட்டிற்கு வருவது இல்லை. என் மீது கோபமா? என்றான்.

உன்மீது எனக்கு கோபம் இல்லை என்றான் மணிவண்ணன்.

பின் ஏன் வீட்டிற்கு வருவது இல்லை என்றான்.

சங்கர் நான் இப்போது நேரம் கிடைக்கும்போது எல்லாம் நூலகத் திற்கு சென்று பல நூல்களையும் நாளிதழ் களையும் படித்து வருகிறேன் என்றான்.

சங்கர் பள்ளியில் உள்ள பாடங்களை படிக்கவே நேரம் போதவில்லை நூலகத் திற்கு சென்று எப்படி படிப்பது என்று கேள்வி கேட்டான்.

அதற்கு மணிவண்ணன் பள்ளி பாடமும் படிக்க வேண்டும் பொது அறிவை பெருக்கிக்கொள்ள நூலகத்திற்கு சென்று பல நூல்களை படித்தும் நாளிதழ்களில் வரும் செய்திகளை படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றான்.

சில காலங்களுக்கு பிறகு இருவரும் கல்லூரி படிப்பை படித்து முடித்தனர்.

நாளிதழில் IAS தேர்வுக்கு விண்ணப் பிக்கலாம் என்று விளம்பரச் செய்தியை மணிவண்ணன் படித்தான். அந்த செய் தியை சங்கரிடமும் கூறினான்.

விண்ணப்பம் அனுப்ப கடைசி நாள் எப்போது என்று கேட்டான்.

அதற்கு இந்த மாதம் 31 ஆம் தேதிவரை உள்ளது என்றான்.

இருவரும் சேர்ந்தே விண்ணப்பித்தனர். சங்கள் IAS கோச்சிங் சென்டரில் பணம் கட்டி சேர்ந்து படித்து வந்தான்.

மணிவண்ணன் அரை நாட்கள் நடத்தப்பட்டுவரும் அரசு இலவச IAS பயிற்சி சென்டரில் படித்தான் மீதிநேரம் நகரத்தில் உள்ள மிகப்பெரிய நூலகத்திற்கு சென்று IAS தேர்வுக்கு தேவையான பல புத்தகங்களை தேடித் தேடி எடுத்துவந்து படித்து வந்தான்.

வீட்டில் இரவு 12.00 மணிவரை படித்து விட்டு உறங்கிவிடுவான். அதிகாலை 03.00 மணிக்கே எழுந்து படிக்க துவங்கி விடுவான். எப்படியாவது IAS தேர்வில் வெற்றி பெற்று நல்ல நிலமைக்கு வந்திட வேண்டும். வீட்டை உயர்த்த வேண்டும் என்று கடுமையாக படித்து வந்தான்.

IAS தேர்வு ஏழுதும் நாள் அறிவிக்கப் பட்டது. தேர்வு நாளும் வந்தது அனை வரும் தேர்வு எழுதும் மையத்திற்கு சென்று தேர்வு எழுதினர்.

சங்கர் கேட்ட கேள்விகளுக்கு தடுமாறி தடுமாறி பதில் எழுதினான்.

மணிவண்ணன் கேள்விகளை படித்து நன்கு புரிந்து பதில் எழுதினான்.

நூலகத்தில் பல நூல்களில் படித்தான் பயனாக பொது அறிவு கேள்விகள் அவனுக்கு கை கொடுத்தது அதனால் மிக தெளிவான விடைகளை எழுதினான்.

இருவரும் தேர்வு எழுதிவிட்டு வந்தனர். சங்கர் கேள்விகள் மிகவும் கடினமாக இருந்தது என்று மணிவண்ணனிடம் சொன்னான்.

அதற்கு மணிவண்ணன் கேள்விகள் கடினமாக இல்லை என்றும் நான் பல காலங்களாக நூலகத்தின் படித்த செய்திகள் எனக்கு தேர்வில் கை கொடுத்தது அதனால் எனக்கு கேள்விகள் கடினமாக இல்லை என்றான்.

சில மாதங்களுக்க பின் IAS தேர்வின் முடிவுகள் வெளிவந்தது அதில் மணிவண்ணன் மாநில அளவில் 3வது இடத்தில் வெற்றி பெற்றான் என்று ஊடகங்களில் செய்தி யாக வந்தது.

சங்கரின் அப்பா IAS தேர்வு முடிவு

வெளியிட்டு விட்டார்கள் நீ பார்த்தாயா? என்ற கேட்டார்.

இல்லை அப்பா! இதோ பார்க்கிறேன்! என்று கூறிவிட்டு இண்டர்நெட்டில் பார்த்தபோது அவன் வெற்றி பெறவில்லை. அப்பாவிடம் நான் வெற்றி பெறவில்லை என்ற கூறினான்.

மணிவண்ணன் மாநிலத்தில் 3வது இடத்தில் வெற்றி பெற்றிருக்கிறான் என்று தந்தையிடம் கூறினான்.

சங்கரை பார்த்து தோல்வியே வெற்றிக்கு அடிப்படை மீண்டும் கடினமாக உழைத்தால் நீயும் வெற்றி பெறுவாய் என்றும் வருத்தப்படவேண்டாம் என்றார்.

நீ என்னுடன் வா உன் நண்பனை நாம் அனைவரும் சென்று பார்த்து வாழ்த்திவிட்டு வருவோம் என்றார்.

சங்கர் குடும்பம் மணிவண்ணன் வீட்டிற்கு வருவதற்குள் அனைத்து ஊடகங்களும் பேட்டி எடுத்துக்கொண்டு இருந்தனர். ஊரில் உள்ளவர்களும் மணிவண்ணன் வீட்டிற்கு வந்து வாழ்த்து களை தெரிவித்த வண்ணம் இருந்தனர்.

சங்கர் மணிவண்ணனை கட்டித்தழுவி பாராட்டு களை தெரிவித்தான் குடும்பத் தினரும் வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தனர்.

ஊடகத்தினர் மணிவண்ணனிடம் அரசு பள்ளியில் படித்து முதலில் எழுதிய தேர்விலேயே 3வது இடத்தில் வெற்றி பெற்றதை நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள் என்று கேட்டனர்.

நான் சிறு வயதிலேயே எனக்கு கலெக்டர் ஆகவேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது. ஏன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் கலெக்டராக ஆகிவிடவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

என் எண்ணத்தை அறிந்து தாய் தந்தையரும் ஆசிரியர்களும் நண்பர்களும் என்னை மிகவும் ஊக்கப்படுத்தினார்கள்.

என் தமிழாசிரியர்

நூலைப் படி,

சங்கத்தமிழ் நூலைப்படி;

முறைப்படி நூலைப்படி.

என்று பாவேந்தரின் பாடலை பாடி என்னை படிக்க சொன்னது எனக்கு இன்றும் காதுகளில் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் என்பார்கள் அதுபோல நானும் நன்றாகப் படித்தேன்.

என் தந்தையார் நூலகத்தில் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி கொடுத்தார். அதனால் பல நூல்களை படித்ததால் தேர்வில் எனக்கு அவை கை கொடுத்தது. அதனால்தான் வெற்றி பெற்றேன்.

வாசிப்பு பழக்கம் இருந்துவிட்டால் மாணவர்கள் அனைத்திலும் வெற்றி பெறுவார்கள். படிப்பதால் அறநெறியை உணர்த்தியது. பண்பை வளர்த்தது அறிவை கொடுத்தது என்னை உயந்த நிலைக்கு உயர்த்தியது என்ற மகிழ்ச்சியாக கூறினான்.

***கவிஞரேறு வாணிதாசனாரின் கொன்றை வேய்ந்தோன்***
***நூல்பல கற்ப வாலறி(வு) உண்டாம்,***
***பல நூல்களைப் கற்பதனால் கூர்மையான அறிவு உண்டாகும்***
***தெளிந்த சிந்தனை உண்டாகும்.***
***சிறந்த நூல்களைப் படிப்பதனால் அவனுக்கு பேரறிவு உண்டாகும்.***



**பொன் முருகன்**

# நல்லெண்ணத்தின் நற்பலன்

அயான் ஒரு நடுநிலை குடும்பத்தை சேர்ந்தவன். அவன் தந்தை ஒரு ஜவுளிக் கடையில் கூலி வேலை செய்கின்றார். அவரின் சம்பளம் வீட்டின் தேவை களுக்கும் அவனின் படிப்பிற்கும் போது மானதாக இருந்ததே தவிர அவனின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு போத வில்லை. அயான் தினமும் தனக்கு பாடசாலை செல்லும் போது கிடைக்கும் சிறு தொகை பணத்தை செலவழிக்காமல் சேமித்து வந்தான். ஒரு நாள் பாடசாலை விட்டு வந்த அயான் தான் சிறுக சிறுக சேமித்து வந்த பணத்தொகையை எடுத்துக் கொண்டு தன் நண்பன் சாபித்துடன் சந்தைக்குச் சென்றான். அவனின் பல நாள் கனவாயிருந்த கிரிக்கட் பேட்டும் பந்தும் வாங்க செல்லும் ஆனந்தம் அவன் விழிகளில் அப்பட்டமாய் தெரிந்தது.

அவர்கள் சென்று கொண்டிருக்கும் போது ஒரு ஏழை இஸ்லாம் மதம் அல்லாத சிறுமி பசியில் மயங்கி கிடக்க அந்த சிறுமியின் தாய் கதறிக் கொண்டிருந்தாள். ஆனால் அவர்களை யாரும் கண்டு கொள்ளாமல் தத்தமது வேலையில் மூழ்கியிருந்தனர். கடையை நோக்கி சென்று கொண்டிருந்த அயான் ஒரு நிமிடம் நின்றான். அவன் மனதில் ஏதோ தோன்ற கடைக்குச் சென்று உணவுப் பொதியும், தண்ணீர் போத்தலும் வாங்கி அப்பெண்மணியிடம் கொடுத்தான். சாபித் அக்காட்சியை திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவர் அச்சிறுமிக்கு சிரமப்பட்டு தண்ணீர் புகட்ட அவள் சில மிடர்கள் குடித்ததும் மெதுவாக கண் விழிக்க அந்தப் பெண் அச்சிறுமிக்கு அயான் கொடுத்த உணவை ஊட்ட சிறிது நேரத்தில் அச்சிறுமி எழுந்து நின்றாள். அப்போது அயானின் முகத்தில் ஒரு நிம்மதி ஒளிர்ந்தது. அச்சிறுமியும் அந்த பெண்மணியும் அயானுக்கு நன்றி கூறினர். பிறகு அயானும் சாபித்தும் அவர்களிடம் விடைபெற்று வீடு திரும்பினர்.

வீடு திரும்பும் வழியில் சாபித் ‘அயான், எனக்கு ஒரு விஷயம் புரியல... நீ எத்துன மாசமா அந்தப் பணத்தை கஷ்டடபட்டு சேர்த்து வந்தனு எனக்குத் தெரியும். அந்த கிரிக்கெட் பேட் உன்னோட பல நாள் கனவு. ஆனா, ஒரு நிமிஷத்துல அந்தப் பணத்தை எல்லாம் இதுவரை அறுமுகம் இல்லாத ஒருத்தவங்களுக்காகச் செலவு பண்ணிட்டியே, உனக்கு உண்மையாகவே வருத்தமாக இல்லையா?‘

அயான் மெலிதாகப் புன்னகைத்து விட்டுச் சொன்னான், ‘வருத்தமா? இல்ல சாபித், மனசு ரொம்ப லேசா இருக்கு. என்ட வாப்பா எப்பவும் ஒன்னு சொல்லுவாரு



'நம்மகிட்ட இருக்கிறதைக் கொண்டு மத்தவங்க கஷ்டத்தைத் தீர்க்குறதுதான் உண்மையான செல்வம்'னு. 'பசியில ஒருத்தன் இருக்கும்போது, நாம மட்டும் வயிறு நிறையச் சாப்பிடுறது ஒரு மூமினுக்கு அழகல்ல'னு என்ட உம்மா எனக்குச் சின்ன வயசுல இருந்தே சொல்லிக் கொடுத்திருக்காங்க. அந்தச் சிறுமி பசியால மயங்கி விழுந்ததைப் பார்த்தப்போ, என் கிரிக்கெட் கனவை விட அவங்களோட அந்த சூழ்நிலை தான் எனக்குப் பெருசா தெரிஞ்சது. அந்த பெண் கண்ணுல தெரிஞ்ச நிம்மதி, ஆயிரம் கிரிக்கெட் பேட்டை விட எனக்குச் சந்தோஷத்தைத் தந்தது அயானின் பேச்சைக் கேட்டு சாபித் வியந்து போனான்.

அன்று இரவு, சாபித் தன் தந்தை மீரானிடம் நடந்த அனைத்தையும் விவரித்தான். அயானின் தியாகத்தையும், அவன் பெற்றோரின் வளர்ப்பையும் கேட்டு மீரான் நெகிழ்ந்து போனார். 'இப்படியும் ஒரு பையனா! என்று அவர் ஆச்சரியப்பட்டார்.

மறுநாள் காலை... அயான் தன் வீட்டின் முன் அமர்ந்து பாடப் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு கார் அங்கே வந்து நின்றது. அதிலிருந்து சாபித்தும் அவனது தந்தை மீரானும் இறங்கினார்கள். மீரானின் கையில் ஒரு பெரிய பார்சல் இருந்தது.

அயானின் தந்தை கடைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தவர், அவர்களை கண்டதும் இன் முகத்துடன் வரவேற்றார்.

மீரான், அயானின் தந்தையிடம் சொன்னார் 'பாய், உங்க மகனை நினைச்சு நீங்க ரொம்பப் பெருமைப்படணும். நேத்து அவன் செஞ்ச காரியம் சாதாரணமானதல்ல. தான் ஆசைப்பட்ட பொருளை விட, ஒரு ஏழையின் பசி முக்கியம்னு நினைச்ச அவனோட அந்த மனசு பாராட்ட வேண்டியது பிறகு அயானை அருகில் அழைத்த மீரான், தான் கொண்டு வந்த பார்சலை அவனிடம் கொடுத்தார். 'இது உனக்காக, நீ நேத்து செஞ்ச அந்த நல்ல காரியத்துக்காக ஒரு சின்ன அன்பளிப்பு.'

அயான் மெதுவாக அந்தப் பார்சலைத் திறந்தான். அவனது கண்கள் அகல விரிந்தன. அதில் அவன் வாங்க நினைத் ததை விடவும் மிகச் சிறந்த ஒரு கிரிக்கெட் பேட்டும், தரமான பந்துகளும் இருந்தன.

அயான் தயக்கத்துடன், 'இது எதுக்கு அங்கிள்? நான் எதையும் எதிர்பார்த்து அதைச் செய்யலையே...' என்றான்.

மீரான் அவனது தோளைத் தட்டிச் சொன்னார், 'எனக்குத் தெரியும் அயான். நீ எதையும் எதிர்பார்த்துச் செய்யல, அதனாலதான் இறைவன் உனக்கு இதை என் மூலமா கொடுத்திருக்கான். பாய்... உங்க பையன் செய் செயலால எங்க எல்லாரோட இதயத்தையும் ஜெயிச் சுட்டான். உங்க வளர்ப்பு மிகச் சிறந்தது என்றார்.

அயானின் தந்தையின் கண்கள் கலங்கின. தன் ஏழ்மையிலும் மகனுக்கு ஊட்டிய நற்பண்புகள் இன்று ஒரு நற்செயலாகத் திரும்பி வந்ததை எண்ணி அவர் இறைவனுக்கு நன்றி சொன்னார்.

அயான் தன் புதிய பேட்டை கையில் ஏந்தியபோது, அந்தச் சிறுமிக்கு உணவளித்தபோது கிடைத்த அதே நிம்மதியான புன்னகை அவன் முகத்தில் மீண்டும் பூத்தது. ■

**ரஸ்னா ரம்ஸான்**

# சுமைகளின் சொந்தம்

விழிகளின் உள்ளே
வழிந்தோடமுடியாத வெள்ளம்
அப்படியே நிறைந்து
தத்தளிக்கிறது

கால் விரல்கள்
கசந்து நடக்க
வெறுப்பைத் தெரிவித்து
அப்படியே வீதியோரம்
வேரூன்றிய நிலையில்...

கைவிரல்களை ஒன்றன்
பின் ஒன்றாக
கடித்துக் குதறிக்கொண்டு
விழிகள் அசையாமல்
விறைத்துக் கொண்டன



எங்கோ சிறகடித்துப்
பறந்து கொண்டிருந்த
சிந்தனைச் சிறகுகள்
சிறகொடிந்து தவித்துக்
கொண்டிருக்க அப்படி
என்னதான் நடந்தது

அங்கு ஒன்றுமில்லை
சில சுமைகளுக்கு
ஒதுங்கிக் கொள்ள
இந்த மனதில் தான்
திறந்த வெளி
இருக்கின்றது போலும்...

அதோ அத்தனை விரல்களும்
இந்த முகத்தை நீட்டிச்
சொல்கின்றன
பெற்றுக் கொள்
உன்னால் முடியும் என்று
அத்தோடு அந்த யாப்பு
எழுதப்படாமல் இயல்பூக்கம்
பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டது
மட்டுமன்றி...
அது திறக்கப்படாமலேயே
மூடப்பட்டும் விட்டது...

சேஹு மொஹம்மது பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ,

# வரமாகும் வாழ்க்கை

உள்ளத்தில் சூழந்திடும் கறைகளைப் போக்கி
உன்னத வாழ்வினை அடைந்திடல் நன்று
பள்ளத்தில் வெள்ளமாய் பண்புகள் சேர்த்து
பாரினில் வாழ்ந்திடல் மானிடர்க் குயர்வு
கள்ளமும் கபடமும் இல்லா தொழித்து
கருணையை நெஞ்சத்தில் மஞ்சமாய் நிறைத்து
அள்ள அள்ள குறைந்திடா அன்போடு
அனுதினம் வாழ்ந்திடல் ஆயுளுக் கழகு

மென்மையை நாவினில் மென்மேலும் பெருக்கி
மேன்மைப் பண்பினை எந்நாளும் நிறைத்து
வன்முறை விலக்கி வாய்மையைப் பெருக்கி
வாழும் வாழ்விலே வசந்தங்கள் தூவி
எண்ணத்தில் தூய்மையை வண்ணமாய் விதைத்து
இன்னலை கன்னலாய் இலகுவாய் நினைத்து
உண்மையே உயர்வென்று உவப்போடு எடுத்து
உலகிலே வாழ்ந்திடல் பிறவிக்கே பெருமை

அயரா துழைத்து ஆன்றோரை மதித்து
அறநெறி பயின்று அறிவினி லுயர்ந்து
செயல்களை சிரசிலே சின்னமாய் ஏந்தி
சீருடன் நடந்திட சிறக்குமே வாழ்வு
துயரங்கள் துடைத்து துன்பங்கள் போக்கி



தூய்மை உள்ளத்தை துணையாக கொண்டு
உயிர்களை உவந்து உறவினைக் கவர்ந்து
உலகினில் வாழ்ந்திடல் உன்னத செயலே

தருவினை போலவே தண்மையில் நிலைத்து
தார்மீக பொறுப்புடன் தரணியில் உழைத்து
கருவினில் காத்திடும் அன்னையைப் போலவே
கனிவுடன் வாழ்வதும் தனியான சுகமே
உருவத்தை விடுத்து உள்ளத்தை மதித்து
உள்ளன்பும் கருணையும் உணர்வினில்
இணைத்து
வருத்தங்கள் காணாத வாழ்வினை அமைத்து
வாழ்ந்திடும் வாழ்வினில் இன்பங்கள் மலரும்

வறுமையில் செழுமையை செம்மையாய்ச் சூடி
அறநெறி முறைமைகளை வனப்புடன் நாடி
பொறுமையும் பெருமையும்
துணையாகக் கொண்டு
பெருவாழ்வு வாழ்ந்திடல் பாரினில் சிறப்பு
குறுகிய சிந்தனை கருவோட ழித்து
குறைவிலாத் திருவோடு குதூகலம் கண்டு
நறுமணம் கமழும் நற்பணி புரிந்து
நாடு போற்றிட வாழ்ந்திடல் வரமே

வஞ்சனை யென்பதைநெஞ்சிலே யகற்றி
வாழ்வினை எஞ்ஞான்றும் வசந்தமாய் மாற்றி
வெஞ்சினம் விலக்கி வெகுளியை நீக்கி
வாஞ்சையோடு நம் வாணாளைப் பழக்கி
கொஞ்சமும் குழப்பங்கள் சூழ்ந்திடா வண்ணம்
குடும்பத்தில் குறைவிலா இன்பத்தைச் சேர்த்து
மஞ்சு போல் பஞ்சு போல் மனதினைத் தளர்த்தி
மண்ணிலே வாழ்திட மலர்ந்திடும் மகிழ்ச்சி.

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

பொன். குமார் பார்வை

# அணங்கு

*பெண்ணியத் தன்முனைக் கவிதைகள்*
*(அன்புச்செல்வி சுப்புராஜு)*




இலக்கியம் கதை, கவிதை, நாவல், கட்டுரை என பலவகைகள் இருப்பினும் எவ்வகைக்கும் இல்லாத ஒரு சிறப்பு கவிதைக்கு உண்டு. ஏனெனில் கவிதை என்பதிலும் பலவகைகள் உள்ளன. மரபு, புதிது, ஹைக்கூ, நவீனம், பின் நவீனம் என பலவகைகளில் தன்முனையும் ஒரு வகையாக உள்ளது. இவ்வகைகளிலும் உள்வகைகள் உண்டு. கவிதை வகைகளில் மரபே முதன்மை. மரபைத் தவிர மற்றவை பிறநாட்டு வடிவங்களே. தன்முனைக் கவிதைகளும் ஓர் இறக்குமதி வடிவமே. இவ்வடிவத்திலும் பல கவிஞர்கள் பலவாறாக எழுதி வருகின்றனர். ஒரு பெண் கவிஞரான அன்புச்செல்வி சுப்புராஜு பெண்ணியம் பேசும் வகையில் அணங்கு என்னும் தலைப்பில் ஒரு தன்முனைக் கவிதைகள் அடங்கிய தொகுப்பைத் தந்துள்ளார். இவ்வகையில் இது முதல் நூலாகிறது.

மீட்பருக்காக காத்திருத்தலில்
கழியும் காலங்கள்
மீட்சி வேண்டிய நிமிர்தலில்
விடியும் பொழுதுகள்

என்னும் தன்னம்பிக்கையில் பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டியுள்ளார். பெண்கள் எவராவது வந்து மீட்பர், விடுதலை பெற்று தருவர் என காத்திருக்கக் கூடாது என்கிறார். காத்திருந்தால் விடுதலை கிடைக்காது. காலங்களே கழியும் என்கிறார். மேலும் களத்தில் இறங்கிப் பெண்களே போராட வேண்டும் என்கிறார். அவ்வாறு போராடினாலே வெற்றியும் கிடைக்கும், விடுதலையும் பெறுவோம் என நம்பிக்கை ஊட்டியுள்ளார்.

சித்தார்த்தனான புத்தன் ஞானம் பெறும் போது மனைவியை நினைக்க வில்லை. துறவறம் பூண்டவர் மனைவி யசோதராவையும் மகன் இராகுலனையும் எண்ணிப்பார்க்கவில்லை. இதனால்

ஏகாந்தப் பெருவெளியில்
தனக்கொரு மரம் தேடுகிறாள்
நிறைவின் மனதுடன்
இராகுலனின் அன்னை யசோதரா

என ஒரு தன்முனைக் கவிதை எழுதி யசோதராவும் ஒரு போதி மரம் தேடுகிறாள் என புரட்சி பேசியுள்ளார். பெண்களும் ஞானம் அடைய முடியும் என்கிறார். தொன்மத்தை வைத்து எழுதியுள்ளார்.

பெண்கள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வதால் பூமாதேவி என்பர். சகிப்புத் தன்மையிலும் சாதனை படைத்தவர்கள் பெண்கள். பெண்கள் எல்லாவற்றையும்

சகித்துக் கொள்வதன் விளைவாக மிகு சகிப்புத்தன்மையின் இறுதியில் மீந்து போனது ஏளனமும், எள்ளலும், பைத்தியக்காரப் பட்டமும் கிடைத்தது என்கிறார். சகித்துக் கொள்வதால் பெண் களுக்கு ஏளனம், எள்ளல், பைத்தியக்கார காரி என்னும் பட்டங்களே கிடைக்கின்றன என்கிறார். பெண்கள் சகித்துக் கொள்வது கூடாது என்றும் அறிவுரைத்துள்ளார். சீறி எழு என்கிறார்.

பெண்கள் எல்லாவற்றோடும் எல்லோ ரோடும் பொருந்தி போவதால் பூஜ்யமாகி விடுகிறார்கள். பொருந்தாமல் எழும் பெண்களுக்கே எதிர்காலம் காத்திருக்கிறது என்று

பொருந்த முடியாமல்
புதைந்து எழுகிறாள்
அதோ தூரத்தில்
அவளுக்கான தொடுவானம்

என்னும் தன்முனைக் கவிதையில் தெரிவித்துள்ளார். தூரத்தில் இருந்தாலும் தொடுவானம் தெரிகிறது என்று நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளார்.

நாய் துரத்தினால் ஓடக் கூடாது. நின்று திரும்பிப் பார்த்தாலே நாய் பயந்து ஓடிவிடும் என்பர். கவிஞர் அன்புச்செல்வியும்

ஊன்றி நின்று
திரும்பிப் பார்த்தாள்
தயங்கிப் பின்வாங்கின
துரத்திய பயங்கள்

என்று எழுதியுள்ளார். பயங்கள், துன்பங்கள், துயரங்கள், தொல்லைகள் என எது துரத்தினாலும் பெண்கள் பயந்து ஓடக்கூடாது, துணிந்து நின்று திரும்பிப் பார்த்தாலே போதும் என்கிறார். ஒரு பெண்ணைப் பற்றியது மட்டுமல்ல, எல்லா பெண்களுக்குமானது.

ஒவ்வொரு அடிக்கும்
கழன்று கொண்டே வருகிறது
கால்களை இறுக்கிய
சங்கிலியின் கண்ணிகள்

என்பதும் நல்ல தன்முனைக் கவிதை. கால்கள் கட்டப்பட்டுள்ளதே என்று பெண்கள் அமைதியாக இருக்கக் கூடாது, தொடர்ந்து முன்னேற முயல வேண்டும் என்கிறார். முன்னேற முயலும் போதுதான் கால்களை இறுக்கிய சங்கிலியின் கண்ணி கள் தளரும், கழன்று கொண்டே வரும் என்று ஒரு வழி காட்டியுள்ளார்.

இறுக்கிக் கட்டி
இறுதி என்றார்கள்
அறுத்து எறிந்து
ஆரம்பம் செய்தாள்

என்பது நல்ல ஆரம்பம். எதுவும் இறுதி இல்லை. இறுக்கிக் கட்டினாலும் அறுத்து எறிய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். எந்தக் கட்டுக்கும் கட்டுப்பட வேண்டாம் என்கிறார்.

சீதை மரணமடையவில்லை. சீதை பூமித்தாயின் மகளாகப் பிறந்ததால் அவமானத்தால் மனமுடைந்தபோது, பூமி பிளந்து அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டாள் என்று இராமாயணம் கூறுகிறது. இது மரணத்தை விட பூமிக்குள் மறைவதைக் குறிக்கிறது. குறிப்பாக மக்கள் சீதையுடைய கற்பு குறித்து மீண்டும் கேள்வி எழுப்பியபோது இந்த நிகழ்வு நடந்தது. இது சீதையின் தூய்மைக்கான அக்னி பரீட்சையின் தொடர்ச்சியாகவும் மக்களின் அவநம்பிக்கையால் ஏற்பட்ட வேதனையின் விளைவாகவும் கருதப் படுகிறது. இந்த இராமாயணச் சூழலைக் கவிஞர்

காடேகிய பின்னும்
மண்ணில் புதைந்தாள்
முன்னரே தீக்குளித்த
இராமனின் மனைவி

எனத் தன்முனைக் கவிதையாக்கி யுள்ளார். இன்றும் சந்தேகத் தீயில் பெண்கள் எரிந்து கொண்டுதான் உள்ளார் கள் என்பது கவலைக்குரியதே.

அறுந்த கயிறுக்கு
ஆயிரத்தெட்டு ஓலங்கள்

துள்ளிக் குதிக்கிறது
மூக்காணங்கயிறு அறுந்த மாடு

என்பது பெண்ணின் விடுதலையை பேசுகிறது. பெண் விடுதலை பெற்று விட்டால் அவள் எப்படி மகிழ்வாள் என்பதை மூக்காணஙகயிறு அறுந்து துள்ளிக் குதிக்கும் ஒரு மாட்டுடன் ஒப்பிட்டுள்ளார்.

தாயம் என்பது ஒரு விளையாட்டு. இந்த விளையாட்டில் தாயக்கட்டைகள் விழு வதைப் பொருத்து காய்கள் நகர்த்தப்படும். எதிரி நாய்களால் வெட்டப்படுவதும் உண்டு. கவிஞர்

இலக்கை நோக்கி
நகர்த்தப்படும் காய்கள்
வெட்டுப் படுகிறது
ஒரு துண்டு நம்பிக்கை

என்னும் தன்முனைக் கவிதையில் வெட்டுப்படுதலை நம்பிக்கைக்குக் குறிப்பிட்டுள்ளார். இலக்கை நோக்கி பயணிக்கும் போது நம்பிக்கை இழக்கச் செய்யும் நிகழ்வுகளோ, விபத்துகளோ ஏற்பட்டாலும் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்கிறார்.

மண்டியிட்டுக் கிடந்தவள்
கரங்களில் கூர்நகங்கள் - இனி
சமரசமற்ற நியாயங்களின்
குரல்வளைகள் நெறிக்கப்படும்

என்னும் தன்முனைக் கவிதை சரியான எச்சரிக்கை. இனி பெண்களை அடக்கி வைக்கவோ, ஒடுக்கி வைக்கவோ முடியாது என்று ஆணாதிக்க சமூகத்திற்கு தெரிவித்துள்ளார். பெண்களிடம் எப்போ தும் கூர்நகங்கள் இருக்க வேண்டும் என்பது கவிஞரின் கோரிக்கை.

கவிதைகளில் தன்முனைக் கவிதைகள் ஒரு தனித்த இடத்தைப் பிடித்துள்ளது. கவிதை உலகில் கவனத்தை ஈர்த்துள்ளது. தன்முனைக் கவிதைகளில் பல பாடு பொருள்கள் பாடப்பட்டிருந்தாலும் முதன் முதலில் பெண்களை மையப் படுத்தி எழுதியுள்ளார் கவிஞர் அன்புச் செல்வி சுப்புராஜு. பெண்களின் பிரச்சனைகளை, சிக்கல்களை, பாடுகளைப் பேசியதுடன் பெண்கள் சுதந்திரமாக இயங்கவும் விடுதலை பெற்று வாழவும் வழிவகுத்துள்ளார். பெண்கள் ஆணாதிக்க சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். பெண்களுக்கு தைரியமூட்டியுள்ளார். பெண்களுக்கு உற்சாகமூட்டியுள்ளார். தன்முனைக் கவிதைகளை சரியாக பயன் படுத்தி பெண்களுக்காக எழுதி ஒரு நிலை உயர்த்தியுள்ளார். பெண்களையும் உயர்த்த முயன்றுள்ளார். ஆண்களுக்கு பெண்கள் சளைத்தவர்கள் இல்லை என்கிறார். அணங்கு என்பது சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் ஒரு தெய்வீக அல்லது மந்திர சக்தி. தெய்வத்திற்கு நிகரான அழகிய பெண். கவிஞர் இத்தொகுப்புக்கு அணங்கு என்று பெயரிட்டுள்ளது பொருத் தம். பெண்ணியத்தைக் குறிக்கிறது. அணங்கு என்னும் ஒரு சிற்றிதழ் கவிஞர் மாலதி மாதிரி நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. தொன்மங்களில் இருந் தும் பல நிகழ்வுகளைக் கவிதைகளில் கையாண்டுள்ளார். கவிஞர் அன்புச் செல்வி சுப்புராஜு கவிதைத் தொகுப்புகள், ஹைக்கூ தொகுப்புகள், சிறுகதைத் தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள் வெளியிட்டு இருந்தாலும் பெண்ணியத் தன்முனைக் கவிதைகள் அடங்கிய அணங்கு என்னும் இத்தொகுப்பு ஒரு கி. மீ. கல். பெண்ணியத் தொகுப்புகளிலும் தனித்து காணப்படுகிறது. பெண்களால் எதுவும் முடியும், எதுவும் சாத்தியம் என்கிறது. வாழ்த்துகள்.

**பொன். குமார்**

வெளியீடு: நூலேணிப் பதிப்பகம் சென்னை
கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு
98419 78029

# ஓய்வுச் சிந்தனை

அறுபது வயது;
அரசின் வரம்பு!
உழைத்தோம் ஓடினோம்;
உறவுகளோடு மகிழ்ந்தோம்!
ஓய்வுச் சிந்தனை
ஓரமாக ஒதுக்கியே
மனதிற்கு உள்ளது;
மன்றாடும் பாங்கு!
சிறுவயதின் நாட்களோ
சிரசிலே நர்த்தனமிடும்!
இளமை பருவத்தை
இனிதே சுவைக்கும்!
உடல் இழைத்தாலும்
உள்ளம் வலுவானால்;
ஊரும் உலகமும்
உனது அருகிலே!
சாதி என்ன;
மதம் என்ன;
வேற்றுமை நிசப்தம்;
ஒற்றுமையே சப்தம்!
எல்லோரும் உறவு;
என்ற மனநிலையே!
அறுபது வயதில்;
அதிகப் பொறுமை!
எழுபது வயதில்;
எகிறிய ஆளுமை!
என்பது வயதில்
எம்மாள் உதவியும்
தொண்ணூறு வயதில்
தொலைத்தது மிஞ்சும்
நூறு வயதினிலே;
நிறைந்த ஆன்மா!
நின்றே கேட்கும்;
நில்லாது பொங்கும்
மனதினில் உதிக்கும்;
மங்கலம் பொங்கும்!
முதுமையின் எழுச்சி;
முற்றிலும் வீழ்ச்சியே!
முழு மனிதனாகவே
முழுவதும் உணர்ந்து
பற்றற்ற மனிதாய்;
முற்றுப் பெறுவாய்!
இறைவன் சந்நிதியில்
இறுதி அடைக்கலமாக
இறுதி மூச்சானது
இனிய பிரிவாகவே;
சாந்தி நிலவட்டுமாக!
முக்தி அடைவோமாக!

**பாவலர். மீரா ஹுசைன்**
சென்னை- 101



# மூன்று கால் ஆட்டுக்குட்டி

## எஸ். ஏ. கப்பார். (இலங்கை)

"பக்கத்துத் தோட்டத்தில சண்டை நடக்குது போல. எந்நேரமும் அதையே நோண்டிக்கொண்டு இருக்காம வெளிய போய் என்னெண்டு பாருங்க." - இது வரை தனது கைத்தொலைபேசியை நோண்டிக்கொண்டிருந்த அனஸின் மனைவி அதை மேசையில் வைத்துவிட்டு கணவனின் கவனத்தைத் திசை திருப்பினாள்.

தன் கையிலிருந்த கைத்தொலை பேசியை பக்கத்திலிருந்த கதிரை மீது வைத்துவிட்டு எழுந்த கணவனிடம் "அதையும் கையோட எடுத்திட்டுப் போங்க" என அறிவுரை கூறியபோது மீண்டும் குனிந்து தனது கைத்தொலை பேசியை எடுத்தவன் "மற்றவர்களின் புதினங்களை வீடியோ வடிவில் பார்ப்பதில் அவ்வளவு மகிழ்ச்சி என் மனைவிக்கு" என முணுமுணுத்தவாறு வீதிக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான் அனீஸ்.

எதிர் வீட்டு நண்பன் றமீஸ் வெளியே நின்று எதையோ அவதானித்துக் கொண்டிருப்பதைக் கண்ட அனீஸ், "என்ன மச்சான் காலையிலேயே பெரிய சத்தம் கேட்குது. என்ன ஏதாவது சண்டையோ" என வினவினான்.

"இல்ல மச்சான். நம்மட இறமுளார் மாமாட தோட்டத்துக்குப் பக்கத்துல ஒரு குடும்பம் காணி வாங்கி வீடு கட்டிக்கொண்டு இருக்காங்க இல்ல. அந்த வீட்டுக்காரன் பெரிய கில்லாடி போல இருக்கான். நேற்றிரவு இறமுளார் மாமா வளர்க்கிற ஆட்டுக்குட்டி ஒன்றுட ஒரு கால தறிச்சிட்டான் போல" என்று கூறி முடிப்பதற்குள் "என்ன! ஆட்டுக்குட்டிட காலத் தறிச்சிட்டானோ? இது பெரும் பாவம் இல்ல. வா போய் என்ன எண்டு பாப்போம்" எனக் கூறியவாறு றமீஸை அழைத்தான், அனீஸ்.

"நீ போய் பாரு மச்சான். நான் இப்பதான் பாத்துப்போட்டு வாரன்." எனக் கூறினான், றமீஸ்.

இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன் மிகக் குறைந்த விலையில் சிறிய வீட்டுடன் ஓர் ஏக்கர் காணி கிடைத்ததால் தான் வசித்து வந்த இடத்தை வாடகைக்குக் கொடுத்துவிட்டு மனைவியுடன் வந்து குடியேறினான், அனஸ். புதிதாகக் குடிவந்தவர்களைப் பார்ப்பதற்குப் பக்கத் திலுள்ளவர்கள் இடைக்கிடை வந்து தரிசித்துச் சென்றனர். வந்தவர்களில் இறமுளார் மாமாவின் மனைவி அனஸின் மனைவிக்குப் பிடித்துப்போகவே அவர்கள் நண்பிகளாயினர்.

இறமுளார் மாமா அவ்வளவு படிக்காத வர் என்றாலும் நல்ல பண்பானவர். நல்ல

உழைப்பாளி. அவர் வசிக்கும் காணி மிகப் பெரியது. நாலு ஏக்கர் இருக்கும். வலது பக்க மூலையில் சிறிய வீடொன்று கட்டி மனைவி மக்களுடன் வாழ்ந்து வருபவர். இடது பக்க மூலையில் பெரியதோர் ஆட்டுக் கொட்டில் அமைத்து ஆடுகள் வளர்த்து வருகிறார். மிகுதிப் பகுதியில் மரக்கறித் தோட்டம் செய்து வருகிறார். தானும் தன் பாடும் என்று இருப்பவர்.

ஆறு மாதங்களுக்கு முன்புதான் இறமுளார் மாமாவின் பக்கத்துக் காணியில் அரை ஏக்கர் காணித்துண்டு ஒன்றை வாங்கி, சிறிய வீடு ஒன்றைக் கட்டிய பின் மனைவியுடன் வந்து குடியமர்ந்தான் உவைஸ். பார்ப்பதற்கு அப்பாவி போல தெரிந்தாலும் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் அடிக்கடி சண்டை போடத்தொடங்கினான். உவைஸ் என்ன தொழில் செய்கிறான் என்பது யாருக்கும் தெரியவில்லை. ஒரு வாரத்தில் ஓரிரு நாட்கள்தான் வீட்டுக்கு வருவான். வந்ததும் வராததுமாக பக்கத்து வீடுக்காரர்களில் ஒருவருடனாவது சண்டை பிடிக்காமல் இருக்கமாட்டான். அதனால் அனஸ் மற்றும் றமீஸ் குடும்பம் அவனுடன் நல்ல உறவு வைத்துக்கொள்வதில்லை.



இறமுளார் மாமாவின் வீட்டு முற்றத்தில் கூடியிருந்த அயலவர்களுடன் இணைந்து கொண்ட அனஸ் "என்ன நடந்தது மாமா?" என வினவினான்.

"இஞ்சபாருங்கதம்பிஇந்தஅநியாயத்த. வாயில்லா ஜீவன்ட காலத் தறிச்சிட்டான் பாவி மகன். அவன் நல்லா இருப்பானா? நாசமாப்போவான். அவன்ட புள்ள குட்டிகளுக்கும் இப்படித்தான் நடக்கும்." எனச் சபித்தபடி கண்கலங்கினார், இறமுளார் மாமா. அப்போதுதான் ஒரு கால் தறிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்தான், அனஸ். ஒரு கால் துண்டாடப்பட்ட நிலையில் அவருக்குப் பக்கத்தில் சோகமே உருவாகக் கிடந்தது. இறமுளார் மாமாவின் முகத்தைப் பார்ப்பதை விட அந்த ஆட்டுக்குட்டியின் முகத்தைப் பார்ப்பதுதான் எனக்குப் பெரும் சங்கடமாக இருந்தது. பாவம் அந்த ஆட்டுக்குட்டி. ஒரு கால் இல்லாமல் எப்படித்தான் வாழப்போகுதோ.

"மாமா! இத இப்படியே விட்டுவிடாம போலீசுக்குப் போங்க. போய் ஒரு முறைப்பாடு செய்யுங்க. அவங்க மிச்சத்தப் பாத்துப்பாங்க. அதுக்கு முதல்ல பக்கத்துக் கிராமத்தில இருக்கிற மிருக வைத்தியரக் கூப்பிட்டு ஆட்டுக்குட்டியக் காட்டுங்க. நேரம் போனா ஆட்டுக்குட்டிக்கு ஏதும் ஆகிடும்." என அறிவுரை கூறினான், அனஸ்.

"இல்ல தம்பி. நான் போலீசுக்கெல்லாம் போகப் போறல்ல. அல்லாஹ்கிட்ட பாரம் கொடுத்திட்டேன். அவன் பாத்துக்குவான். மிருக வைத்தியருக்கு சொல்லி அனுப்பியிருக்கேன். அவர் வந்து மருந்து கட்டி சுகப்படுத்திடுவார்." எனக் கூறிய இறமுளார் மாமாவிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு வந்து சேர்ந்து நடந்தவற்றை தனது மனைவியிடம் கூறி

மனவருத்தப்பட்டான், அனஸ்.

இச் சம்பவம் நடந்த பிற்பாடும் உவைஸ் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் நடந்துகொள்ளும் விதம் மிக மோசமாக இருந்ததால் அந்தச் சிறிய கிராமத்து மக்கள் உவைஸ் குடும்பத்தை அந்த ஊரிலிருந்து அப்புறப்படுத்த முனைந்து வெற்றியும் கண்டனர். உவைஸ் தான் குடியிருந்த காணியை விற்றுவிட்டு வேறு ஊருக்கு குடும்பத்துடன் சென்றுவிட்டான்.

நாட்கள்மிகவேகமாகநகர்ந்துவிட்டன. உவைஸ் ஊரைவிட்டுச் சென்று சுமார் ஐந்தாறு வருடங்களாகிவிட்டன.

ஒரு நாள் அனஸ் வீட்டுக்கு வந்த றமீஸ், இருவரும் உரையாடிக்கொண்டிருந்த போது ஏதோ ஞாபகம் வந்தவனாக "அனஸ், ஒரு விஷயம் தெரியுமா? நம்ம இறமுளார் மாமாட பக்கத்து வீட்டில இருந்த உவைஸ் இருக்கானே"

"ஆமா. அவர்ர ஆட்டுக்குட்டிட காலத்தறிச்சவன்தானே?"

"அவன்தான். அவனுக்கு கிட்டத்திலே ஆஸ்பத்திரியிலே ஒரு பிள்ளை கிடைச்சிருக்காம். அந்தப் பிள்ளைக்கு மூன்று கால்களாம்."

றமீஸ் சொல்லிமுடிப்பதற்குள்,

"யா அல்லாஹ். நீ படைத்த மனிதர்கள் அறியாமல்செய்யும்பாவங்களைமன்னித்து விடு. இவ்வுலகில் உனது தண்டனைகளை வழங்கிவிடாதே, அல்லாஹ்." எனக் கூறிய வாறு நண்பன் றமீஸின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான், அனஸ்.

■

# அடைக்கலம் தேடும் அன்பு

உன்னிடமே தஞ்சமானேன்
உள்ளத்தில் உறவானேன்

உரிமையாய் கேட்கிறேன்
உறவாகியே வந்துவிடு

உணர்வுகளின் சங்கமம்
உன்னதமாகும் மஞ்சம்

கெஞ்சலில் கொஞ்சலுமுண்டு
மிஞ்சலில் மீதமுண்டு

இதயத்து ராணியே
ரீங்காரத் தேனீயே

இதழமுதம் தித்தித்திட
இனிமையும் சேர்ந்ததே

அன்பால் இணைந்த
அருமைக் காதலியே

அரவணைத்து காத்திடு
ஆதரவில் கனிந்திடு

அடைக்கலம் தந்த
அன்பானவள் நீதானே

நினைவுகளில் கலந்திட்ட
உனைவிட்டு பிரிந்திடேனே

பெ.வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்



# ‘சங்கிலி சுப்பிரமணியன்’ நேர்காணல்

## நேர்கண்டவர்: திரு ஏ.டி.வரதராசன்

AI

# தவறு யார் செய்தாலும் அது தவறே...

**கரந்தை புலவர் கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்றார். பள்ளி ஆசானாகவும் அதைத் தொடர்ந்து கல்லூரி பேராசிரியராகவும் பணியாற்றினார். யாப்பெருங்கலக் காரிகையில் முனைவர் பட்டம் பெற்றவர். ஏகபோக ஆற்றல் இருந்தும் கவிதை எழுத விரும்பாதவர். ஆயினும் யாராக இருந்தாலும் தமிழில் ஒரு தவறு என்றால் கொம்பு சீவியக் காளை போல உடனே ஓட வந்து தவறுகளைச் சுட்டிக் காட்டி மண்டியிட வைப்பதில் இவருக்கு இணை இவரே.**

*1. 'சங்கிலி சுப்பிரமணியன்' என்பது அடைமொழியோடு கூடிய பெயராகத் தெரிகிறதே தங்கள் முழு பெயர் என்ன?*

தந்தை பெயர் சங்கிலி. முன்னெட்டுத் தாங்கி பெயர் வடிவமைப்பது தொழில் நுட்பக் கால வழக்கமாதலின் அவ்வாறு எழுதப்படுகிறது. மற்றபடி "என் தந்தை என் நோற்றான் கொல்" என்று சொல்லிக் கொள்ளும்படியாக என்னிடம் ஏதுமில்லை.

*2. தங்களின் பணி, மற்றும் குடும் பத்தைப் பற்றி சுருக்கமாகச் சொல்லவும்*

1963 - இல் பள்ளியிறுதி வகுப்பு. கரந்தைப் புலவர் கல்லூரி என் தாய்வீடு. என் தமிழ் குடியிருக்கும் கோயில். தனி முயற்சியில் முதுகலை, ஆய்வுப் பட்டங்கள். ஆனால் அவை அத்தனையும் வெறும் அட்டைகள். தெருத்தெருவாக நாளிதழ்கள் போட்டுத் தண்டல் செய்யும் தொடக்கக் காலப் பணி. தஞ்சை நாட்டார் திருவருள் கல்லூரியில் மதிப்புறு பேராசிரியர் எனும் இறுதிக்காலப் பணி. எந்தப் பணியும் சிறக்கவில்லை. நானும் சிறக்கவில்லை. என் இயல்பு சிக்கலானது. பிறரால் எளிதில் ஏற்றுக் கொள்ள இயலாதது. மகன்கள் இருவர், வளர்ப்பு மகள்கள் மூவர். அனைவரும் கற்றவர். ஒரு மகளுக்கு மட்டும் இன்னும் திருமணம் ஆகவில்லை.

*3. தமிழ் மீது எப்படி ஈடுபாடு வந்தது?*

"பழந்தமிழ் இலக்கணங்களிலும் இலக்கியங்களிலும் பெரும்புலமை பெற்றவர்" என்னும் என்னைப் பற்றிய மதிப்பியல் ஒரு மாயை! எனக்குத் .தமிழ் கற்றுத் தந்த ஆசான்கள் கலைஞரும் கண்ணதாசனுமே! உரைநடையிலும் கவிதையிலும் தமிழை எப்படிக் கையாளவேண்டும் என்பதை இந்தத் தமிழுலுகத்திற்குக் கற்பித்துச் சென்ற மாபெரும் பேராசிரியர்கள் அவர்கள். தன்னுடைய வெப்பத்தையும் தண்மையையும் தமிழ்த்தாய் உணர்ந்த தருணங்கள் அவை. தமிழுக்கு மீசை முளைக்க வைத்தவர் கலைஞர். அவளுக்குத் தலைவாரிப் பூச்சுட்டிவிட்டவர் கண்ணதாசன்!

*4. யார் தவறு செய்தாலும் தவறுகளைத் தைரியமாகச் சுட்டிக் காட்டுகிறீர் தமிழ் மீது இத்தனைக் காதல் ஏன்?*

தவறான பார்வை. நான் போலிகளைத் தோலுரிக்கிறேன். என்னினும் வல்லார் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். திறனாய்வில் கூடப் போலிகள் வந்துவிடலாம். ஆனால் படைப்பில் போலிகள் நுழைந்து இன்றையக் கவிதை உலகம் போலிகளால் நிரம்பி

வழிகிறது. "இயற்சீர் வெண்டளை" என்பதற்குப் பதிலாக 'உறழ் தளை' என்று சொல்கிறவனை நான் பிறவிப் பகையாகப் பார்க்கிறேன். யாப்பமைப் பாடல்களை எழுதியவனையெல்லாம் "மரபுப்பாமணி" என்றெல்லாம் சிலாகிப்பதை என்னால் எந்தப் பிறவியிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

*5. தனித்தமிழைப் பற்றி தங்கள் கருத்து என்ன?*

தனித்தமிழ் இயக்கத்தின் நோக்கத்தையும் தொல்காப்பிய விதிகளையும் சரியாகப் புரிந்து கொள்ளாத பலரின் கைகளில் அது சிக்கித் தவிக்கிறது. எடுத்துக்காட்டாக மறைமலை அடிகளாரின் உரைநடைப் போக்கை யாராவது பின்பற்ற இயலுமா? தமிழின் தூய்மை கெட்டுவிடக் கூடாது என்பதில் எனக்குப் பெருங்கவலை உண்டு. அதற்காக மெய்ப்பை, குமுகாயம், துமுக்கி என்றெல்லாம் கவிதையில் நுழைப்பதால் வரும் அழகியல் கேட்டைச் சுட்டிக் காடடுவது என் கடமை. தனித்தமிழால் உரைநடை சிறக்கலாம். ஆனால் கவிதை நிச்சயம் அழகு பெறாது. துரை மாணிக்கமே முயன்று தோற்றது!

*6. பொது ஊடகங்கள் தமிழை வளர்க்கிறதா இல்லையா எப்படி?*

'இல்லை' என்று உறுதியாகவும் சொல்லலாம். உரக்க முழங்கலாம். மாறாகக் கெடுக்கிறார்கள். 'மறை' என்றால் எதிர்மறைதான். நேர்மறை என்கிறார்கள். இதனை உண்மை என்று நம்புகிற தமிழ்ப் பேராசிரியர்கள் அப்படியே மேடையிலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திரையில் காணப்படும் தொடர்களில் ஏகப்பட்ட பிழைகள். தொலைக்காட்சிகளின் பெயர்களே தமிழில் இல்லையே!

*7. பழம்பெரும் புலவர்களில் தங்கள் மனம் கவர்ந்தவர் யார்? ஏன்?*

சங்கச் சான்றோர்கள் அனைவரும் வணக்கத்திற்குரியவர்கள். இருப்பினும் கடந்த அறுபது ஆண்டுகளாக என்னோடு வாழ்ந்து உள்ளங்கவர் கள்வனாக உலாவி வரும் திருவள்ளுவரே என் மனங்கவர்ந்தவர்.

*8. தாங்கள் இளமையில் ரசித்த சிறந்த காதல் பாடல் எது?*

உங்கள் வினா திரைப்படல் என்பதாக நானே கருதிக் கொண்டு விடையிறுக்கிறேன். நன்றாக நினைவிருக்கிறது. 1960 அக்டோபரில் வெளிவந்த 'மன்னாதி மன்னன்' படத்தில் வரும் ''கண்கள் இரண்டும் என்று உன்னைக் கண்டு பேசுமோ?'' என்ற பாடல்தான். காதலுணர்ச்சி இல்லாத எவரையும் கூட அது கண்கலங்க வைத்துவிடும். அது இளமைக்காலம் இல்லை. பள்ளியில் நான் எட்டாம் வகுப்பு படித்த காலம்.

*9. தவறுகளைத் தேடித்தேடி சுட்டிக் காட்டுகிறீர், ஆனாலும் இதுதான் தவறுகளே இல்லாத நூல் என்று தாங்கள் சிபாரிசு செய்யும் நூல் எது ஏன்?*

கவிதை நூல் படைப்பின் வெற்றி படைப்பாளன் உணர்ச்சி மற்றும் கருத்தியல் ஆகியவற்றின் வெளிப்பாட்டு உத்தியைப் பொருத்தது. இதில் தோன்றும் மாறுபாடு தவறு காணுவதாகாது. என் பார்வையில் திருக்குறள்தான் தவறே இல்லாத நூல்.

*10. தற்கால எழுத்தாளர்களுக்குத் தாங்கள் சொல்லும் அறிவுரை என்ன?*

எழுத்தாளர்கள் பலவகைப்படுவார்கள். அவர்களுக்கு வழிகாட்டும் தகுதி உறுதியாக எனக்கில்லை. கவிதையிலும் அது பற்றிய திறனாய்விலும் ஒரு அரை நூற்றாண்டை நான் செலவிட்டிருப்பதனால் கவிஞர்களுக்குச் சொல்லக் கூடியது ஒன்றுண்டு. கவிதை தற்போது நோய்வாய் பட்டிருக்கிறது. அதற்கு மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு தேவை என்பதை

உணர்ந்து கொள்ளுங்கள் என்பதுதான்.

*11. முகநூல் விருதுகளைப் பற்றி தங்கள் கருத்து என்ன?*

முகநூல் குழுமங்கள் பல இதனை ஒரு பகுதி நேரத் தொழிலாகவே நடத்துகிறார்கள். வேதனையாக இருக்கிறது. இத்தனை ஆயிரம் நூல்கள் வெளிவந்தும், இத்தனை இலட்சம் கவிதைகள் வெளிவந்தும் சுரதாவிற்குப் பிறகு யார் எழுதிய கவிதையும் மேடை ஏறாதது ஏன்? கருத்துக்குள் நிலைத்திருக்க வேண்டிய கவிதை காதோடு நின்று போனதற்குக் காரணம் என்ன? இது பற்றிச் சிந்தித்தால் ஒரு வேளை விருதுகளுக்கு விடுப்பு கிட்டலாம்.

*12. புதுக்கவிதை, மரபுக் கவிதை இவை இரண்டில் எது சிறப்பு? ஏன்?*

இந்த நிரலே உங்கள் பார்வையை வெளிப்படுத்துகிறது, மரபு முன்பும் புதுமை பின்பும் வந்திருக்க வேண்டும். யாப்பை மட்டும் அளவு கோலாக வைத்துக் கொண்டு மரபுக்கவிதை என்பது அறியாமை. புதுக்கவிதை என்பது தமிழ்மீது வலிந்து திணிக்கப்பட்ட கவிதை வல்லாண்மை. அதனால்தான் அது தற்போது தற்கொலை செய்து கொண்டு ஹைக்கூவுக்கு வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது. இதுவும் விரைவில் தற்கொலை செய்து கொள்ளும். சாவு தண்டவாளத்திலா ஏரியிலா? சுனாமியிலா என்பதுதான் என் எதிர்பார்ப்பு. எனினும் பரிதாப சாவு உறுதி!

*13. கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் இவைகளில் தமிழின் வளர்ச்சிக்கு எது பொருத்தமானது? ஏன்?*

எல்லாமே பொருத்தமானவையே. எனினும் நான் கவிதைக்கு வாழ்க்கைப் பட்டிருப்பதால் நான் அதனையே முன்னெடுக்கிறேன். உணர்ச்சிக் கொந்தளிப்பு, எளிமை, அழகியல், சுருங்கிய வடிவநேர்த்தி, சுருக்கென்னும் கருத்தியல் பதிவு, அங்கதம், ஒலிநயம் என அனைத்தும் கொண்ட இலக்கிய வடிவம் கவிதையே என்பது என் கருத்து. அது இடி அமீன் கையில் சிக்கிய உகண்டா போலச் சிக்கித் தவிக்கிறது என்பதுதான் விலக்க முடியாத சோகம்.

*14. பழம்பெரும் புலவர்களில் காதலைத் துல்லியமாகச் சொல்லும் செய்யுள் எது?*

சங்கச் சான்றோர்கள் செய்த அத்தனையும் துல்லியமான உணர்ச்சி

வெளிப்பாட்டுக்கு உரிமையானவையே. எனினும் இந்த அறுபதாண்டு

காலத்தில் என் நெஞ்சில் நிறைந்த காதல் பாடல் இதுதான்.


"சிலம்பு கமழ் காந்தள் நறுங்குலை அன்ன

நலம்பெறு கையில் என் கண் புதைத்தோயே!

பாயல் இன் துணை ஆகிய பணைத்தோள்

தோகை மாட்சிய மடந்தை

''நீயலது உளரோ என் நெஞ்ச மர்ந்தோரே!"



கொங்கு தேர் வாழ்க்கை என்னும் சில வரிப் பாடலுக்கு அறிஞர் மு.வ. அதே பெயரில் ஒரு திறனாய்வு நூலை எழுதியிருக்கிறார். இந்தப் பாட்டும் அந்தச் சிறப்பிற்கு உரியது. ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணையில் வரும் கபிலர் பாட்டு அது

*15. "வள்ளுவர் மறையும் வைரமுத்து கறையும்" எனும் தங்களின் கட்டுரையைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். அப்படி என்றால் திருக்குறளுக்கு இன்று வரை எழுதிய உரைகளில் தங்களைக் கவர்ந்தது யாருடைய உரை? ஏன்?*

ஐயமே வேண்டாம். ஆசிரியர் பரிமேலழகர் உரையே! அறுபதாண்டுகளாக என் தோழமை அவரோடுதான்!

*16. யார் எதை எழுதினாலும் இதைவிடப் பழம்பெரும் புலவர்கள் எழுதியது தான் சிறப்பு என்று இன்றுவரை விமர்சனம் எழுகிறது. ஏன் அந்தப் பழம்பெரும் புலமைக்கு இணையாக இனிமேல் யாரும் வரமுடியாதா? வரக்கூடாதா?*

வரக்கூடாது என்பதன்று. வர இயலாது. அவர்கள் ஓலைச் சுவடியிலிருந்து திரிந்த வடிவங்களைப், புள்ளியல்லாத மெய் எழுத்துக்களைத் தமிழாக எண்ணிப் போராடித் தமிழ் கற்றவர்கள். பல நூல் கற்று ஒரு நூல் படைத்தவர்கள். நாம் ஒரு நூலைக் கண்டு பல நூலை எழுதி வெளியிடுகிறோம். அவர்களுக்குக் கவிதை ஒரு உந்துதல். நமக்குக் கவிதை விருதுகளுக்கான நுழைவுத் தேர்வு. உணவுவிடுதி சமையற் கூடத்துச் சரக்கு மாஸ்டர் கூட இன்றைய மிக உயர்ந்த விருதுக்கான தேர்வுக் குழுவில் இடம் பெற்று விடுகிறான். வாழ்க்கையைப் பரபரப்பாக ஆக்கிக் கொண்ட பிறகு இலக்கியப் பயிற்சிக்கு அடிப்படைத் தேவையான பொறுமை, சகிப்புத்தன்மை, ஒப்பீட்டு உணர்வு, இலக்கணப் புலமை, பல் துறை ஞானம், இடைவிடாச் சிந்தனை இவற்றைப் பெற இயலாது. இது என் கருத்து.

*17. ஆத்தீகம் நாத்திகம் இவை இரண்டில் எது தேவை? ஏன்?*

ஆரியத்தின் அடிவருடுவதுதான் ஆத்திகம் என்றால் அது என் தமிழ்மண்ணுக்குத் தேவையே இல்லை. எதனையும் அறிவினால் பகுத்து நோக்குவதுதான் நாத்திகம் என்றால் என் தாய்த்தமிழ் நாட்டிற்கு அது அவசரத் தேவை என்பேன்.

*18. தற்போதைய ஆட்சி முறை பற்றி தங்கள் கருத்து என்ன?*

"வணிகம் செய்ய வந்தவன் அரசியல் செய்தான் அன்று. இன்று அரசியல் செய்வதாகச் சொல்லிக் கொண்டு வணிகம் செய்கிறான்" வைரமுத்து சொன்னதைவிட நான் சிறப்பாகச் சொல்லிவிட முடியாது.

*19. தங்கள் மனைவியின் சிறப்புகளில் ஏதேனும் ஒன்றை இங்கே பகிரவும்*

"இடும்பை தீர்ப்பவள் என் மனை! அவள் என் குடும்ப விளக்கு"

*20. தங்களைப் பேட்டி காணும் தமிழ்நெஞ்சம் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்லவும்.*

அந்த இதழோடு மட்டுமன்று எந்த இதழோடும் எனக்கு அறிமுகம் கிடையாது. தமிழ்க்கவிதைகளைத் தவிர வேறு யாரோடும் எனக்கு அறிமுகம் கிடையாது. தம்பி துரை வசந்தராசனின் நேர்காணலை அந்த இதழில் படிக்கும் நல்வாய்ப்பினைப் பெற்றேன். அந்த இதழில் கவிதை கைவரப் பெற்றவர் பலர் எழுதிய கவிதைகளையும் அறிவர் பலரின் நேர்காணல்களையும் நான் படித்திருக்கிறேன். அத்தகைய சிறப்பான இதழில் என்னைப் பற்றிய இந்தத் தங்களுடைய நேர்காணல் ஒரு கண்ணேறாக அமைந்துவிடும் வாய்ப்பு உண்டு. ■

# மீதி

‘ஏன்மா, எப்பவும் எங்களுக்கு வச்சது போக மீதி இருக்கிறதையே சாப்பிடுறீங்க?‘ எனக் கேட்டாள் மகள்.

‘எனக்கு அதுதான் பிடிச்சிருக்கு கண்ணு,‘ என்றார் அம்மா சுருக்கமாக.

‘பொய் சொல்லாதீங்கம்மா. உங்களுக்குப் பிடிச்சதை நாங்க சாப்பிட்டு முடிச்சதும், தட்டுல ஒண்ணுமே இல்லாம இருந்தா கூட தண்ணியைக் குடிச்சிட்டுப் படுப்பீங்க, நான் பார்த்திருக்கேன்.‘

அம்மா அவளை அணைத்துக் கொண்டார். ‘வயிற்றுப் பசியை விட, உங்க மனத் திருப்தியைப் பார்க்குறதுல ஒரு பசி அடங்குது பாரு... அது பெரியவங்களுக்கு மட்டும்தான் புரியும்.‘

மகள் மௌனமானாள். அம்மாவின் தட்டில் இருந்த அந்தச் சிறிய துண்டு உணவில், ஒரு குடும்பத்தின் மொத்த தியாகமும் அடங்கியிருந்தது.

## மாதவப்ரியா



தன்முனைச் சரம்

# தலைவன்

கொக்கரிக்கும் தலைவன்
சொக்க வைக்கும் ஆட்டம்
கொந்தளிக்கும் தொண்டன்
ஆட்டு மந்தை கூட்டம்

கூத்தாடி ஆட்டம்
கூடிவரும் கூட்டம்
என்னவானாலும் ஆகட்டும்
தலைவனை பார்த்தே ஆகவேண்டும்

தலைவனைக் கண்டதும்
உற்சாக அலை
தங்கரிப்பார் எவருமின்றி
ஓங்கரிக்கும் கூட்டம்

எண்ணம் எதுவுமின்றி
எண்ணாதது எல்லாம் நடந்தது
தன் போக்கில்
தொண்டன் மடிந்ததும்

மயக்கம் முடிந்தது
தயக்கம் வந்தது
பயம் வந்தது.
மரணம் வென்றது

நடக்காது இது
இனி ஒரு போதும்
மனிதர்க்கு வேண்டாமா
தன் புத்தி

சசிகலா விஸ்வநாதன்

# நேரமும் செல்வமும்

1
இறை தரும் செல்வம்
சமமான நேரம்
நிகராக அனைவருக்கும்
இருபத்தி நான்கு மணி

2
ஆட்டின் வால் போல்
அறிந்துதான் வைத்துள்ளான்
அளந்துதான் தந்துள்ளான்
அவரவர்க்கு ஆயுள்.

3
இறைவன் அளித்தான்
நேரம் என்னும் வரம்
பனிபோல் உருகும் நேரம்
போவது தெரியாமல் போகும்

4
பொன் அனைய நேரத்தை
பொன் போல் போற்றுவோம்
தங்காது உன் வாழ்வு
மங்காது அதில் முதலிட

5
முதலீடு செய்க நேரத்தில்
முற்றும் உன்னை உயர்த்திடும்
சற்றும் கைவிடாது
கற்று தேர்க அதை

6
செல்வத்தில் செய்யும் முதலீடு
தரும் வெறுமை
மலைபோல் செல்வம்
தரும் தலைக்கனம்

7
சேர்ந்த செல்வத்திற்கு
சேர்ப்பவர் அடிமை
கைகட்டி சேவகம்
கேட்கும் அது.

8
நேரத்தை சேமிக்க
நீ அதன் அரசன்
நேரம் உன் சேவகனாக
ஆதாயம் மிகும்

9
பயன்படுத்திய நேரம்
உயர்த்தும் தினமும்
பயன் படுத்திய செல்வம்
கரையும் தினமும்

10
நேரத்தை சேமிக்க
கட்டற்ற சுதந்திரம்
செல்வத்தை சேமிக்க
மட்டற்ற பாரம்

சசிகலா விஸ்வநாதன்

# நன்மையால் விளைந்த துன்பமே

பசியின் கொடுமையாலே
நாட்டைவிட்டு நாடு வந்தோம்
உயிர்ப்பசி தீர்ப்பாயென்று
ஒருபோதும் நினைக்கவில்லை
மழையே…மலையே….

காட்டையழித்து வீட்டைக் கட்டியது
கவலையில் வாடிட தானோ
கணக்கனின் பேச்சைக் கேட்டு
நிலத்தை காசாய் மாற்றியதும் ஏனோ

நிம்மதியாய் படுத்துறங்கும்
மாலை மழை நேரத்திலே
கனமழையால் அடைமழையால்
உயிர்களை காவுகொண்டதும் ஏனோ

இயற்கையே எம்மினம் செய்த பாவமென்ன
செயற்கை நுண்ணறிவே
சிறந்த பதிலை நீயோ செப்பினாலென்ன

காலனுக்கும் பசி - கல்லறைக்கோ ருசி
சில்லரைகளாய் மானிட உயிரை
சிதைத்து போட்டதை யாமறிவோம்

அழிவோ (அ)கதியோ
இல்லை அந்நியச்செலாவணியை ஈட்ட
நினைத்ததால் வந்த பிணியோ

இயற்கையன்னையே….
எல்லா பக்கமும் இடிதான்
எப்படி சொன்னாலும் இதே கதிதான்

அரவணைக்க நீ
இருப்பதாய் உணர்ந்தோமே
அத்தனை பேர்களையும்
மொத்தமாய் உண்டு சுவைத்தாயே

இனியும் வேண்டாம் அவலநிலை
நொடியில் மறையும் மானிடர்களை
கண்ணின் இமைப்போல காத்திடு
எமது காவல் குலதெய்வங்களே

கலைச்சுடர்
காவத்தையூர் பழனியாண்டி கனகராஜா

## சிரிப்பலை

அவள் இதழ்கள் என்ன
கடற்கரையா?
சிரிப்பலை வந்து
மோதுகிறதே.

## கொடுப்பார் கையில்

கல்வி கொடுக்கிற
சரஸ்வதியின் கையில் வீணை
அதைச் சொல்லிக் கொடுக்கிற
வாத்தியாரின் கையில் பிரம்பு.

## வாழ்வதற்கே

கண்கள் என்கிற மீன்கள்
வாழ்வதற்கே அவள்
கண்ணீர் சிந்துகிறாள்.

## அடையாளம்

பெண் ஆசிரியைகளின்
அடையாளம் குடை
ஆண் ஆசிரியர்களின்
அடையாளம்
குடையில் பாதி
'டை'.

## நிழல்

மரங்கள் யாவும்
அழிந்து வரும் நிலையில்
வருங்கால மனிதனுக்கு
நிழல் என்பது
அவனது நிழல் தான்.

கவிஞர் எம்.சோலை
அம்பத்தூர்.



# ஹோபோவின் காதல்



## புல்லாங்குழலன்

வந்தியா என் மின்னஞ்சலில் தமிழில் என்னவோ எழுதியிருக்கிறாயே என்னப்பா அது?

கவிதை, உனக்குத்தான் என் செல்லமே.

என் பெயர் மைதிலி வந்தியா.

ஆசையாய்க் கூப்பிட்டேன் மைதிலி நீ என் காதலியல்லவா

ஒருதலைக் காதலா இல்லை தறுதலைக் காதலா?

இதயக் காதலிது மைதிலி உன் இதயத்தில் சிறு மோதல் ஏற்பட்டிருக்குமே

ஒரு மோதலுமில்லை. காதலுமில்லை, சாதலின்றி இங்கிருந்து போய்விடு நீ.

என்மீது உனக்குக் காதல் வரும் நாள் விரைந்தே வரும். காத்திருக்கிறேன் கண்ணே.

வந்தியனும் மைதிலியும் ஒரே அலுவலகத்தில் அருகருகே அமர்ந்து பணிபுரியும் நிலையில் வந்தியன் மைதிலி மீது அளவில்லா காதல் கொண்டு விட்டான். மைதிலிக்கு அந்த உணர்வு வரவில்லை இதுவரை என்பது உண்மையே

மைதிலி உனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது, எப்போது திருமணப் பேச்செடுத்தாலும் வேண்டாம் என்கிறாயே, காதல் ஏதும் இருக்கிறதா? இருந்தால் சொல்லு. உன் விருப்பமே எங்கள் விருப்பம் என்று கல்யாணி தன் மகளிடம் கேட்டுக் கொண்டிருந்த போது அவளது தந்தை சந்தானம் வீட்டினுள் நுழைந்தவர். ஆமாம் மகளே நானும் உன்னிடம் கேட்கலாமென்றிருந்தேன். என்றார்.

என்னைப் பெற்றவர்களே, எனக்கு திருமணத்தில் ஆசை இல்லை என்னை விட்டுவிடுங்கள். அப்படி ஆசை வந்தால் கண்டிப்பாகச் சொல்கிறேன். சரியா

அவளுக்கு செல்லம் கொடுத்து வளர்த்தது எந்த அளவுக்கு வந்திருக்கிறது பாருங்கள் என்று அங்கலாய்த்தாள் தன் கணவனிடம் கல்யாணி.

இன்னும் ஒரு வருடம்கூட பொறுப்போம். அதற்குப் பிறகு நான் வேறு ஒரு வழி வைத்திருக்கிறேன். கவலைப்படாதே.

அன்றைய பேச்சு இத்துடன் முடிந்தது.

மைதிலி ஒரு துடிப்பான பெண். மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிபவள். அச்சமின்றி இருப்பவள். அவள் அழகில் மயங்கும் ஆண்கள் அவள்


அலுவலகத்திலேயே அதிகம் பேர் இருந்தனர்.

வந்தியனும் துணிச்சலானவன், அழகன் தான். அதனால் தான் அவளிடம் நேரிடையாகக் காதலைச் சொன்னான்.

மைதிலியின் அலுவலகத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய கருத்தரங்கு ஒன்று நடந்தது. அதில் அது சம்பந்தமான பல தரவுகள் தரப்பட்டன. உரையாற்றியவர் கீழே குறிப்பிட்ட கருத்தை விளக்கிப் பேசினார்

செயற்கைப் பொது நுண்ணறிவுள்ள எந்திரங்கள் மனித நுண்ணறிவைப் போல விரிவான பலவகைச் சிக்கல்களை ஆழமாகவும் பல்துறை திறனுடனும் தீர்த்து விடும்.

நம் நாட்டில் முதல் முயற்சியாக ரோபோக்களுக்கும் மனித உணர்வுகளைப்



புரிந்து கொள்ளவும் அதற்கேற்ப நடக்கவும் செய்யும் ஆராய்ச்சியை முன்னெடுக்கலாம் என முடிவு செய்திருக்கிறோம். நீங்களும் அதை வரவேற்பீர்கள் என நம்புகிறோம்

எனவே நாம் மென்பொருள் தீர்வின் அடுத்தகட்டமாக செயற்கைப் பொது நுண்ணறிவைப் பயன்படுத்தி வெற்றி கரமான புதிய பரிமாணங்களைக் காண வேண்டும்.

அதற்காக நமது கம்பெனிக்கு புதிய இரண்டு மென் பொருள் பொறியாளர் களை நியமிக்க முடிவு செய்திருக்கிறோம்.

அவர்களுக்கு என பிரத்யேகமாக இரண்டு பெரிய அறைகள் நவீன வசதி களுடன் செய்து தரப்படும். ஆராய்ச்சிக்கு வேண்டிய உபகரணங்களும் அவ்வப்போது தேவைப்படும் அளவுக்கு வழங்கப்படும்.

இதில் சேர்பவர்கள் தங்கள் இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாதவர்களா யிருக்க வேண்டும். உறுதியானவர்கள் தங்கள் பெயரை இங்கே பதிவு செய்யுங்கள் என்ற அவர் மென்பொறியாளர்களின் தேர்வுக்காக அமைதி காத்தார்.

எல்லோரும் தங்கள் குடும்பச் சூழல் களின் பிடியில் கட்டப்பட்டிருப்பதால் இதற்கு முன்வரத் தயங்கினார்கள். அப்போது முதன்முதலாக எழுந்த மைதிலி நான் வருகிறேன் என்று முன் வந்தாள்.

நீ பெண்ணாயிற்றே மைதிலி திருமணம் மற்றும் சடங்குகள் உன்னைச் சுற்றுமே என்றார் விரிவுரையாளர் அவளுக்கு ஆதரவாக.

நான் எதற்கும் தயார் சார். உறுதியாக இருக்கிறேன். என் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள் என்றாள்.

ஆண்களில் யாரும் முன் வராத நிலையில் வந்தியன் எழுந்து நானும் தயார். என் பெயரையும் பதிவு செய்யுங்கள் என்றான் துடிப்புடன்..

கூட்டத்திலிருந்த அனைவரும் வியப்பில் வாயடைத்து நின்றனர்.

மைதிலிகூட வியப்பில் அவனை நோக்கினாள்.

விரிவுரையாளர், ஓர் இயந்திரம் மனம் மற்றும் உணர்நிலை ஆகியவற்றைப் பெற்றிருக்க முடியுமா? அப்படிப் பெற்றி ருந்தால் அதற்கு மனித உணர்வுகளைப் புரிந்து நடக்க முடியுமா? என்பதெல்லாம் தெரியவரும். இதைப் பற்றிய ஆராய்ச்சி யைத் தான் நீங்கள் கணினி மூலமாகத் தெளிவு படுத்தப் போகிறீர்கள். கடினமான பணிதான். இதற்கான தனி ஊதியமும் உங்களுக்குக் கிடைக்கும். வெற்றிக்குப் பிறகு உங்கள் பணி உச்சமும் பெறும் என்றார் அவர். அத்துடன் அன்றையக் கூட்டம் முடிந்தது.

மைதிலிக்கும் வந்தியனுக்கும் அதி நவீன அறை கொடுக்கப்பட்டது. அதில் அவர்கள் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். மனித மூளை போன்ற ஒன்றை ரோபோக்களில் பொருத்துவது எப்படி என முதலில் முயன் றனர். கணினி அவர்களுக்கு உதவியாக இருந்தது. இருவரும் இடைவிடாத பணியில் ஈடுபட்டனர். பல நாட்கள் கழிந்தபோது அவர்கள் அதை ஒரு ரோபோவில் பொருத்தி வெற்றியடைந்தனர்.

அந்த மூளையில் சில பல பணிகளை மிகவும் சிரத்தையுடன் பல நாட்கள் செய்தனர். அதில் ஒரு முடிவு கிட்டியது. அதைப் பரிசீலித்த போது அவர்கள் ரோபோவுக்கு உணர்வுகள் வருவதை அறிந்தனர்.

ரோபோ மனிதர்கள் போலவே நடந்தது. பணி செய்தது, சிந்தித்தது, உணர்வுகளையும் பிரதிபலித்தது. அது ஒரு பெண் ரோபோ. அதற்கு வந்தியனைப் பிடித்து விட்டது. அவனைக் காதல் பார்வை அது பார்த்தது. அது அந்த ரோபோவுக்கு மட்டுமே முதலில் புரிந்தது. நாளடைவில் மைதிலியும் வந்தியனும்கூட அதை உணர ஆரம்பித்தனர்.

அந்த ரோபோ தன் பணி முடிந்த நேரங்களில் வந்தியனின் அருகிலேயே நின்றது. அவன் நெஞ்சைத் தடவியது.

முதலில் இதை உணராத வந்தியன் அதனுடைய செயல்களில் ஏன் இந்த மாற்றம் என ஆராய்ந்தான். அது உணர்வு களைப் புரிந்து கொண்டதே இதற்கான காரணம் என அறிந்து அதை மைதிலி யிடமும் தெரிவித்தான். அந்த ரோபோ காதலில் விழுந்து விட்டதை இருவரும் அறிந்தனர்.

மைதிலி வந்தியனை வம்புக்கிழுத்தாள். உன் மீது காதல் கொண்டு விட்டதே ரோபோ.

வந்தியா, நீயும் ரோபோவுடன் காதலில் விழுந்துவிட்டாயா?

நான் ஏன் விழுகிறேன். எனக்குத்தான் ஏற்கனவே ஒரு காதலி இருக்கிறாளே.

பொய் சொல்லாதே உனக்கும் ரோபோ மீது காதல் தானே.

அதோ அது வருகிறது பார். உன்னைக் கொஞ்சத் தான் வருகிறது.

அது என்று சொல்லாதே அதற்கு ஒரு பெயர் சூட்டு

ஏயப்பா, என்ன ஒரு கரிசனம். என்ன பெயர் என்று நீயே சொல்லேன்.

சுந்தரி என்று வைக்கலாமா?

உலகிலேயே இவள் தான் சுந்தரியா?

பெயர் தானே.

இவர்களை நெருங்கிய சுந்தரி வந்திய னின் அருகில் அமர்ந்திருந்த மைதிலியின் கையைப் பிடித்து இழுத்து சற்று தள்ளிக் கொண்டே ஒரு கையால் அவளுடைய நாற்காலியையும் இழுத்து சற்று தூரத்தில் வைத்து அதில் அவளைத் தள்ளியது.

நானும் நீயும் உருவாக்கிய இந்த ரோபோ என்னையே இழுத்துத் தள்ளு கிறதே. உனக்குக் கோபம் வரவில்லையா? வந்தியா

எனக்குக் கோபம் வருகிறது தான். ஆனால் நான் அதை இப்போது கோபத் தில் அடித்தால் நாம் இவ்வளவு நாள் உழைத்த கடின உழைப்பிற்குப் பிறகு உருவாக்கிய அரிதான இந்த கண்டுபிடிப்பு வீணாகி விடுமே என்பதால் பல்லைக் கடித்து என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிரு க்கிறேன்.

அவனை வியப்பாகப் பார்த்த மைதிலி அவன்சொல்வதில் இருக்கும் உண்மையை உணர்ந்தாள். அவனை கூர்ந்து நோக்கி னாள் அவன் மேலும் சொல்வதைக் கேட்க.

ஆமாம், மைதிலி நாம் இதுவரை கண்டுபிடித்தவைகள், செய்தவைகளைத் தொகுத்து அந்த விரிவுரையாளர் மற்றும் உடைமையாளருக்கு அனுப்பி விட்டாய் தானே.

ஆம். ஏன் அனுப்பினோம் என்றிருக்கிறது

ஏன்?

பின்னே என்ன அது உன்னைக் காதலிக்கிறதே

நீயும் காதலிக்க மாட்டாய் வேறு யாரும் காதலிக்கக் கூடாது, அதுவும் ரோபோ கூட

போ அதன் பின்னோடு போ. எனக் கென்ன?

அந்த நிகழ்வுக்குப் பிறகு சுந்தரி மைதிலியை வந்தியனின் பக்கத்தில் உட்கார விடாமல் அவள் நாற்காலியை சற்று தள்ளியே வைத்தது.

மைதிலி மனதளவில் மாற்றம் காணத் தொடங்கினாள். அவள் வந்தியனிடம் சுந்தரி உன்னை நெருங்குகிறது. அதை நான் அனுமதிக்கமாட்டேன். அதை உடைத்து சுக்கு நூறாக்கி விடுவேன் என்றாள். இப்படிச் சொன்ன அந்தக்கணமே சுந்தரி மைதிலியைப் பிடித்து வேகமாகத் தள்ளிவிட்டது.

இதைக் கண்ட வந்தியன் சுந்தரியைப் பிடித்துத் தரதரவென இழுத்துச் சென்று ஒரு அறையில் பூட்டினான். பூட்டி விட்டு மைதிலியிடம் வந்தான்.

மைதிலி இதற்கு ஒரு வழி கண்டு பிடிக்கலாம். ஆண் ரோபோ ஒன்றையும் நாம் உருவாக்குவோம். நம்மிடம்தான் அதற்கான தரவுகள் இருக்கின்றனவே.

ஆமாம் ஆமாம். வந்தியா நீ சொல்வ தும் சரிதான். அவை இரண்டும் காதலிக் கட்டுமே



மீண்டும் அவர்கள் சுந்தரியின் தொல்லைகளுக்கு இடையேயும் ஒரு ஆண் ரோபோவை உருவாக்குவதில் தொடர்ந்து ஈடுபட்டனர். சுந்தரி கொடுத்த தொல்லை களையெல்லாம் கடந்திட அவர்கள் இருவரும் பட்டபாடு மிக மோசம் தான். என்றாலும் அவர்கள் ஒரு வழியாக ஆண் ரோபோவை உருவாக்கி. அதற்கான பெயரையும் சந்திரன் என வைத்தனர்.

இந்தக் கண்டுபிடிப்புகளுக்கிடையே யும் தங்கள் வீட்டிலிருந்து வரும் அலைபேசி அழைப்புகளுக்கும் அவ்வப்போது மட்டும் இருவரும் பதிலளித்தனர். மைதிலி அவளுடைய பெற்றோரிடம் நான் சீக்கிரம் உங்களுக்கு நல்ல செய்தி சொல்கிறேன் என்றாள். பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர்.

கொடுமை என்னவெனில் சந்திரன்

மைதிலியைக் காதல் பார்வை பார்த்தான். வந்தியனை நெருங்கவிடாமல் தடுத்தான். மைதிலி பயந்து போய் சந்திரனிடமிருந்து தப்பித்து நின்றாள்.

வேகமாய் வந்து வந்தியனைக் கட்டிப்பிடித்தாள். வந்தியா நமக்கு இந்தப் பணியே வேண்டாம். இவற்றை இரண்டையும் ஒரு அறையில் இட்டுப் பூட்டிவிடு. நான் உன்னை இப்போது மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன் என்று சொல்வதில் எனக்குத் தயக்கம் இல்லை. நாம் திருமணம் செய்து கொள்ளலாம். நமது கண்டுபிடிப்பையும் இந்த ரோபோக்களையும் உடைமையாளரிடம் ஒப்படைத்து விடுவோம் என்றாள்.

பூட்டப்பட்ட அறையிலிருந்த சந்திரனும் சுந்தரியும் தங்களுக்குள் கைச்சாடைகளால் விவாதம் புரிந்து கொண்டிருந்தனர்.

எதற்கு நம் இருவரையும் இந்த அறையில் இட்டுப் பூட்டி விட்டனர் என்றாள் சுந்தரி

உனக்குத் தெரியாதா? நீ தான் வந்தியனைக் காதலிக்கிறாயே.

நீ மட்டும் என்ன மைதிலியைக் காதலிக்கிறாயே.

பின்னே ஏன் நம் இருவரையும் ஒன்றாக இங்கே பூட்டி வைத்துள்ளனர்.

உனக்கு உண்மையாகவே தெரியாதா? ஏன் நடிக்கிறாய். நாம் இருவரும் காதலிக்கட்டும் என்று தான். எனக்கு உன்மீது காதல் வரவில்லை. நான் என்ன செய்வதாம்.

எனக்கும் தான் உன்மீது காதல் வரவில்லை, என்ன செய்வது?

உன்னால் தான் நான் கெட்டேன்.

உன்னால் தான் நான் கெட்டேன்

விவாதம் தொடர்ந்து கொண்டிருந்தது.

வந்தியன், மைதிலி தன்னைக் காதலிப்ப தாகக் கூறியதில் மிக மகிழ்ந்தான். அவனுடைய காதல் ரோபோக்களின் கண்டு பிடிப்பால் கைகூடியதில் சந்திரனுக்கும் சுந்தரிக்கும் மானசீகமாக நன்றியும் கூறினான்.

இருவரும் உடைமையாளரை சந்தித்து தங்கள் கண்டுபிடிப்பு விவரங்களுடனான குறுந்தகடைக் கொடுத்தனர். நடந்தவை அனைத்தையும் அவரிடம் தெளிவாகக் கூறினர். அதைக் கேட்டு அவரும் ஆச்சரியம் அடைந்தார். இருவரையும் மிகவும் பாராட்டினார்.

மூவரும் ரோபோக்கள் சந்திரன் மற்றும் சுந்தரி இருந்த அறைக்குச் சென்றனர். அங்கே அறையில் அவை இரண்டும் தங்களுக்குள் சண்டையிட்டு சின்னா பின்னமாகிக் கிடப்பதைப் பார்த்தனர்.

நடந்தவிவரங்களைஉடைமையாளரிடமும் தெரிவித்தனர்.

காதல் ரோபோக்களைக் கூட விடுவதில்லை என்பதை எல்லோரும் அறிந்தனர். உணர்ச்சிகளின் வேகம் ரோபோக்களையும் விடுவதில்லை என்பதை அறிந்தனர்.

செயற்கை நுண்ணறிவும் காதலின் முன்னே தோற்றோடியதைக் கண்டு வாயடைத்தனர் விஞ்ஞானிகளும். என்றாலும் தொடர் முயற்சி நடக்கத்தான் போகிறது என்றார் உடைமையாளர்.

# தன்முனைக் கவிதைகள்

சேஹ்ஹு மொஹம்மது பெனாஸிரா

நனவில் நினைவாகிறது
தூரத்து உறவு
கனவில் கலையாமல்
தொடரும் நினைவுகள்

வீட்டின் தகரத்தில்
மழையின் இரைச்சல்
பழகியே போய்விட்டது
அம்மாவின் குரல்

கனமான வார்த்தைகள்
கொஞ்சமும் சுடவில்லை
செவியில் விழுந்தது
மழலை மொழி

பட்ட மரம்தான்
இருக்கை கொடுத்தது
பறந்து களைத்த
கானகத்தின் பறவைகளுக்கு

அழுத பிள்ளை
அம்மாவை தேடுகிறது
ஆட்சேபனை இல்லை
அம்மாவின் மடிக்காகவே

அசந்து தூங்கிய செடிகளுக்கு
நீர் தெளிக்கிறது பனித்துளி
பரந்து விரிந்த சோலைக்கு
வர்ணம் கொடுத்தது கதிரொளி

இருண்ட இருளுக்கு
ஒளியாக சந்திரன்
மறைந்த கனவுக்கு
விருந்தாக நினைவு

ஆற்றோரம் சலசலக்கும் நீர்
கடந்த பாதை நீண்டது
வீட்டோரம் அவள் நினைவு
கடக்க கால்கள் விலகவில்லை

தேவையின் போது
நேரம் கரைகிறது
தொல்லையின் போது
நகர நேரமாகிறது

எப்போதும் பேனா
எழுதவே துடிக்கும்
இப்போது விரல்கள்

---

இம்மாதம் தவிர்க்கமுடியா காரணங்களால் இடம்பெறவில்லை.






# மறதி

பாவலர் கருமலைப்பழம் நீ
வியாசர்பாடி சென்னை 39



பதுங்கிப் பாய்ந்த
முதுமை என்னை
பற்றிக்கொண்டு
படாதபாடு படுத்துகிறது

பகலென்றும் பாராமல்
அடிக்கடி தூக்கம்
கண்களைச் சாய்க்கிறது
இரவில் தூக்கம் வராமல்
புரண்டு படுக்க வைக்கிறது

அடிக்கடி மூளைக்கு
வேலை கொடுக்கணும்
முடிந்தவரை நடக்கணும்
இப்படியெல்லாம்
அறிவுரை அம்புகள்
பாய்ந்த வண்ணம் உள்ளன

தைரியமா இருக்கணும்
முதுமையில் தள்ளாட்டம்
வந்துதான் தீரும்
தன்னம்பிக்கை முக்கியம்
குடும்ப மருத்துவரின்
ஆறுதல் வார்த்தைகள்

அங்காடி செல்ல
தள்ளாடி நடக்கையில்...
எங்கே போகிறது
இந்தச் சாலை
எங்குநான் செல்ல வேண்டும்
விடைதெரியாத வினாக்கள்
விதவிதமாய் எழுகின்றன

தூக்கம் வாரா இரவில்
சிந்தனைகள் தொடர்கின்றன
காலை என்ன சிற்றுண்டி
மத்தியம் என்ன உண்டேன்
மாத்திரைகள் எடுத்துக் கொண்டேனா
சந்தேகங்கள் சுரக்கின்றன

இளமைக்கால நினைவுகள்
நீங்காமல் இருப்பது போல் ஏன்
முதுமையில் இருப்பதில்லை
ஏனிந்த தடுமாற்றங்கள்

இப்போது கூட ஓர்மனிதர்
என்முன்னே வந்து வணங்குகிறார்
ஏதேதோ பேசுகிறார்
யார் இவர்...இதற்குமுன் இவரை
எங்கு பார்த்திருக்கிறேன்
மூளையைப் போட்டுக் கசக்குகிறேன்
இன்னும் கூட நினைவிற்கு
வரவில்லையே...என்ன சொல்ல?



# துவண்ட மனதில் துளிர்விட்ட மழைத்துளி....!

சப்ரான்-நஜீர்

துகள்களான உதிரத்தை கலந்து
தந்தை வழியே உருவெடுத்தேனே
துளியாக இருந்த யெனை
தாயவள் சுமந்தாள் கருவிலே....!

தாயிப் கல்லடிகளை தாண்டி
திருவாளன் மறை யளித்தானே
தீனை உலகெங்கும் பரப்பி
தூயவழி தந்தான் மாநபியாலே....!

தட்டிய களி மண்ணாலே
தனிக் குடிசை யானதே
தாகம் எல்லை மீறியதே
தக்க வேளை உணவில்லையே....!

தமக்கை யில்லா குடும்பத்திலே
தம்பி சுமைகள் சிகைமீதே
தள்ளாடும் நோயில் பிதாவும்
தவித்தேன் வழி யின்றியே....!

தத்தித் தாவி எழுதுகோலின்
துணை கொண்டு நானுமே
தாள் பரீட்சை வெற்றியாலே
தடம் வைத்தேன் இலட்சியத்திலே....!

தோள் தருவா றென்று
துணை நின்றாரை நம்பியே
தன்மை பேச்சில் மயங்கியே
தவித்துப் போனேன் நானுமே....!

தீயினால் சுட்ட பின்னும்
தீராபிடி ஈமான் மீதே
தந்தை இப்ராஹீமின் வாழ்க்கை
தன்னம்பிக்கை எனக் களித்ததே....!

தடியால் தடுத்த பின்னும்
தீங்குக்குள் தள்ளிய போதும்
துவண்டு விடாத மனதால்
துளிர் விட்டு மிளிர்கிறேன்....!

# நம்பிக்கை

நமக்கிருக்க வேண்டிய ஒன்று. நம்பிக்கை இல்லாமல் நம்மால் ஒரு அடி கூட எடுத்து வைக்கமுடியாது. நம்பிக்கை மட்டுமே நம்மையும் நாட்களையும் நகர்த்துகிறது. ஒவ்வொரு விடியலும் ஏதோ ஒரு நம்பிக்கையில் தான். நாளைய கனவு என்பது இன்றைய நம்பிக்கையால் வருகிறது. இன்றோடு இது முடிந்து விடும் என்றால் நாளைய தினம் பற்றிய சிந்தனை நமக்கு வர வாய்ப்பு இல்லை. நம்பிக்கை என்பது உணர்வின் வெளிப்பாடுதான். ஒன்றின் மீது கொண்ட விருப்பமும் நம்பிக்கையைத் தருகிறது. உண்மையில் இது எல்லோருக்கும் பிடித்தமான இருக்கவேண்டிய ஒன்று தான். இங்கே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான விருப்பம். ‘நம்பிக்கை கொள்ளும் போது மட்டுமே தேடல் தெளிவாகிறது‘. விருப்பமில்லாத எதற்காகவும், யாரும் காத்திருப்பதில்லை. ‘விருப்பமே தேடலைத் தருகிறது. தேடலுக்கு நம்பிக்கை தேவை யாகிறது.

நம்பிக்கை என்பது வயதுக்கு ஏற்றபடி இருப்பதில் வியப்பில்லை. குழந்தை களின் நம்பிக்கை பெற்றவர்கள் மட்டும் தான். பெற்றவர்களே உலகம், எந்தப் பிரச்சனை யென்றாலும் பெற்றவர் களிடம் அப்படியே சொல்லும் போது பெற்றவர்கள் மேல் அவர்கள் கொண்ட நம்பிக்கை தெளிவாகிறது. பெற்றவர்களிடம் குறிப்பாக தாயிடம் தான் மகள் எல்லாவற்றையும் கொட்டித் தீர்க்கிறாள். காரணம் தாய் தனக்கான ஆறுதல் என்பது பெண்ணின் அசைக்க முடியாத நம்பிக்கை.

தந்தையிடம் சில விசயங்களை மறைக்கலாம். அதன் காரணம் தந்தையின் முடிவு தன் விருப்பத்திற்கு மாறாக இருக்கும் என்பதே யாகும். சில இடங்களில் தாயை விட தந்தை மீதும் நம்பிக்கை மேலோங்கலாம். மனதைப் பொறுத்தது. நம்பிக்கை என்பது உயிர்களிடத்தில் மேல் தான் என்றில்லை. சில பொருட்ளின் மீது கூட நம்பிக்கை பிறக்கிறது. ஆங்கிலத்தில் (Brand) என்பது. அது விருப்பத்தால் வந்த விளைவு தான். பார்வையிங்கு பல வழிகளில் முடிவைத் தீர்மானிக்கிறது. ‘படிப்பினையோ அனுபவமோ பார்த்து அறிவதோ பலரின் நம்பிக்கைகளுக்கு பதியம் போடுகிறது.

பாதுகாப்பு என்பதே இங்கே உட்பொருளாக வெளிப்பாடாகிறது. இனம் புரியாத உணர்வு நம்பிக்கையை பலப் படுத்துகின்றன. பலவிதமான செயல் பாடுகளால் கிடைத்த அனுபவம் தான் நம்பிக்கையாய் நிற்கிறது. சில நேரங்களில் நம்பிக்கை என்பது நம்மை யும் அறியாத அனிச்சை செயலாக தொடர்கிறது. நாளை நாம் இருப்போம் என்ற நம்பிக்கை தானே கடிகாரத்தில் அலாரம் வைக்க காரணமாகிறது.

நாம் பயணப்படும் ரயிலோ, பேருந்தோ மகிழுந்தோ ,எதுவோ நாம் நினைத்த இடத்திற்கு போய்சேரும் என்ற நம்பிக்கையில் தானே பயணம் தொடர்கிறது. சில சமயங்களில் நம்பிக்கை வேறு விதமாக ரசனைக்குரியதாகவும் இருக்கும். கனவுகளோ ஆசைகளோ

நம்பிக்கை ஆடையைத் தான் கட்டி நிற்கின்றது.

விளையாட்டுக்குச் சொல்லுவார்கள் பிறந்த தேதி போல மறையும் தேதியும் தெரிந்து விட்டால், எல்லோரும் எப்படி எப்படியோ வாழ்வை நடத்தியிருப்பார்கள்.

எதுவும் நிரந்தரமில்லை என்று சொன்னாலும் நம்பிக்கை சிலவற்றை வாழ வைத்துக் கொண்டுதான் இருக்கிறது. நம்பிக்கை பொய்த்தாலும், நம்பியவனின் மனதை அது கட்டிக் காப்பாற்றுகிறது. முயற்சி இங்குதான் முகம் காட்டத் துவங்குகிறது. நம்பிக்கை சமயங்களில் தேடல்களைவளமாக்குகிறது. இயற்கையின் நியதிகளைப் போன்று நம்பிக்கையும் நிச்சயமான வழிகளில் தன்னை களமிறக்கிக் கொண்டு காப்பாற்றவும் செய்கிறது.

நம்பிக்கை யென்பதும் தன்னம்பிக்கை யென்பதும் ஒன்றோடு ஒன்று தொடர் புடையதுதான். மற்றவன் மேல் வைப்பது நம்பிக்கை என்றால் தன் மேல் கொள்வது தன்னம்பிக்கை. தன்னம்பிக்கை கொண்டவனுக்கு நம்பிக்கை பெரிய விசயமல்ல. வரட்டும் எதையும் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் தன்னம்பிக்கை கொண்டவனுக்கு மட்டும்தான் வரும். ஒருவனின் தன்னம்பிக்கை மற்றவனின் நம்பிக்கையாகவும் ஆவது உண்டு. எல்லையிலே நின்று கொண்டு எது வந்தாலும்துணிந்துஇறங்கும்போர்வீரனின் நம்பிக்கையில்தான் நிம்மதியிருப்பதாக, பாதுகாப்பு இருப்பதாக நாம் நம்பு கின்றோம். நம்பிக்கை என்பது மிக பலமானது. பார்வையில் வேறுபட்டாலும் இதுவும் நம்பிக்கை தானே.

தன்னம்பிக்கை கொண்டவனைத்தான் சிலர் ஐயத்தோடு பார்ப்பார்கள். இவனால் முடியுமா? என்ற ஐயத்தையும் இவனா! என்றஆச்சரியத்தையும்தன்னம்பிக்கைதந்து விடுகிறது. அனைத்துக் கேள்விகளுக்கும் நன்றாக பதில் எழுதியிருக்கிறேன் எனக்கு எப்படி மதிப்பெண் குறையும்? என்ற தன்னம்பிக்கை கொண்டவனால் தான் மறு மதிப்பீடுக்கு விண்ணப்பிக்க முடியும். தன்னம்பிக்கை இருந்ததினால் வெற்றியின் வாசல் திறக்கிறது. தன்னம்பிக்கையோடு களத்தில் இறங்குபவன் என்றும் தோற்ப தில்லை.

நம்பிக்கையோ தன்னம்பிக்கையோ நல்ல வழியில் மட்டுமே இருக்க வேண்டும். 'கத்தியால்உயிரைக்காப்பாற்றவும்முடியும், உயிரை எடுக்கவும் முடியும். யாரிடம் கத்தி இருக்கிறது என்பதே இங்கு முக்கியம்'. தலைவன் மேல் தொண்டனுக்கும், தொண்டன் மேல் தலைவனுக்கும், புரிதல் மற்றும் நம்பிக்கை இருந்தால் மட்டுமே அரசியல்களம் அர்த்தமுள்ளதாகும். இங்கே நம்பிக்கை தொலையுமானால் பதவியும் அதிகாரமும் பறிபோகும். உண்மைக்கும் நம்பிக்கைக்கும் தொடர்பு உண்டு. உண்மையிருக்கும் இடத்தில் நம்பிக்கை குடியிருக்கும்.

ஒவ்வொரு செயலும் நம்பிக்கையோடு தான் பிறக்கிறது. வாழ்க்கையில் காரணம் இல்லாமல் நாம் யாரையும் சந்திப்பதில்லை. நமக்காக விதிக்கப்பட்ட ஒன்றுக்காக மட்டும் தான் நாம் வாழ்கின்றோம் என்ற நம்பிக்கை வேண்டும். நமக்கான பணி முடிந்து விட்டால் நாமிருக்கப் போவதுமில்லை. இரவு பகலாக உழைத்து சேர்த்த பொன்னும் பொருளும் நமக்கான தில்லை. நம்ப வேண்டும். எதை ஆண்டு அனுபவிக்கிறோமோ அது மட்டுமே நம்முடையது. இது தான் உண்மை. இதை உணர நம்பிக்கை வேண்டும். 'கடவுள் வழிபாடு என்பது நம்பிக்கையின் உச்சம்'. மதங்கள் வெவ்வேறானாலும், வழிபாட்டு

முறை மாறியே இருந்தாலும், நம்பிக்கை மட்டுமே எங்கும் ஒன்றாக அதுவே இறையாகிறது. தொழுதால் பயன் உண்டு என்பதே நம் நம்பிக்கை.

எந்த நோயானாலும் மருந்து பாதி மனது பாதி என்பார்கள். எதையும் மனதொன்றி செய்யும் போது அந்த செயல் வெற்றியாகிறது. நம்பிக்கை இருந்தால் மட்டுமே செயலை மனமொன்றி செய்ய முடியும். முடியுமா முடியாதா என ஊசலாடினால், செயல் வெற்றி பெறாது. நம்பிக்கை கொண்டவனைத்தான் நாடும் வீடும் விரும்புகிறது. நம்பிக்கையோடு செய்யும் தியானம் வெற்றியாகிறது. நம்பிக்கை தரும் வார்த்தைகளே உரமாகிறது. நம்பிக்கைக்கு வயது வரம்பு கிடையாது. முடியும் என்ற நம்பிக்கை இருக்கும் வரை உடல் தளர்ந்தாலும் உள்ளத்திண்மையோடு வலம் வரலாம். நம்பிக்கை தளராமல் இருப்பதால் தான் சிலரால் தொடர்ந்து வெற்றி பெற முடிகிறது. தலைவன் மேல் கொண்ட நம்பிக்கையே தொண்டர்களைக் கட்டுக்கோப்போடு வைத்து வரலாறுகளைப் படைத்து வருகிறது. நம்பிக்கை சமயங்களில் பொய்ப்பது போல தோன்றினாலும் வேறு வழியில் கண்டிப்பாக வெற்றியைப் பெற்றுத் தரும்.

ஒருவன் படகில் செல்கிறான். விபத்துக் குள்ளாகிறான். கரை ஒதுங்குகின்றான். 'நம்பிக்கையோடு உடைந்த படகின் ஒருபாகத்தில் உதவி தேவை என எழுதி வைக்கிறான்'.

யாரும் வரவில்லை. வேறு வழியில்லா மல் வாழ வேண்டும் என்ற நம்பிக்கையோடு, நாட்களை நகர்த்த முற்பட்டு கிடைத் ததை உண்டு நம்பிக்கையோடு காத்திருக் கின்றான். அவன் உணவு தேட சென்ற போது அங்கிருந்த குடிசை தீப்பிடித்து எறிந்து புகையை மட்டுமே காண்கிறான். அப்போது என்ன செய்வது என்று தெரியாத நேரத்தில் பெரிய கப்பல் ஒன்று வந்தது. அதில் உள்ளவர்கள் காப்பாற்றும் நோக்குடனே வந்ததாகச் சொல்ல, இவன் வியந்து போகிறான்.

எப்படியெனக் கேட்கும்போது அவர் கள் சொன்னது, ஏதோ புகை வந்ததைப் பார்த்து, பிறகு தொலை நோக்கியில் பார்த்த போது 'உதவி தேவைப்படும் என்றெண்ணி வந்தோம், என்று கூறவே நம்பிக்கை வீண் போகாததை உணர்கின்றோம். இதில் புகை காரணமானதும், அது வானோக்கி நகர்ந்ததும், அது மற்றவரை கவர்ந்ததும் 'இவன் செயலால் இல்லை என்றாலும்', நம்பிக்கையோடு தன்னை நிறுத்திக்கொண்டிருந்ததால் தான் அவன் வாழ்க்கைத் தொடர்ந்துள்ளது. ஆக 'நம்பிக்கை கொண்டவன் தோற்கக் கூடாது என்று இயற்கையே உதவி செய்யும்.

காலத்தின் ஒவ்வொரு பக்கமும் இயற்கையின் ஒவ்வொரு பக்கமும் நம்பிக்கையால் விளைந்தவை தான். விதை மரமாகும் வரை நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டும். மேகம் கூடினால் மழை, இது இயற்கையும் நம்பிக்கையும் தான். விளக்கு ஏற்றினால் வெளிச்சம் வரும். இயற்கை தான் நம்பிக்கை தான். காரண காரியமுடனே நம்பிக்கை பிறக்கிறது. 'எதையும் யாருக்காகவும் இழக்கலாம் நம்பிக்கையை மட்டும் இழந்து விடக்கூடாது' நாளை என்பது இன்றைய நம்பிக்கையில்தான். புரிந்து கொண்டால் வாழ்க்கை வளமாகவேஇருக்கும்.

**பரணி சுப சேகர்**
*மதுரை 17 தமிழ்நாடு*

# பக்கம் பக்கமாய்

சோலச்சி புதுக்கோட்டை

சைக்கிள் கடை வைத்திருக்கும் மாரியப்பன், மணிக்கு ஒரு ரூபாய் வீதம் சைக்கிள்களை வாடகைக்கு விட்டு வந்தார். நண்பர்களோடு தானும் வாடகை சைக்கிள் எடுத்து ஓட்டுவதற்கு பழகிக்கொண்டான் பேரறிவாளன். யாராவது சைக்கிளைக் கொடுத்து கடையில் பொரு சொன்னால் போதும்... சைக்கிளை ள் வாங்கிவரச் மிதித்துக் கொண்டு கைகளை விரித்தபடி சிட்டாய் பறந்து செல்வான். சைக்கிள் ஓட்டுவதென்பது ஏரோபிளேன் ஓட்டு றதுக்குச் சமம் என்பான்.

இவன் சைக்கிள் ஓட்டும் அழகில் மயங்காதவர்களே இல்லை. ‘எந்தச் சிரிக்கியோட வலயிலசிக்கப்போறானோ... ஏன்டி.... செல்வி ஓம்மவனுக்கு நெதமும் திட்டி சுத்திப் போடுடி. ஊரு கண்ணே அவன்மேலதான் மண்டிக் கெடக்குது..’ பக்கத்து வீட்டு அமிர்தம் சொன்னாள்.

நீ சும்மாரு அயித்த. எப்பப் பாத்தாலும் அதயேதான் சொல்லிட்டு இருப்பே. சைக்கிளு ஓட்டுறது அவனுக்கு புடிக்குமுனு ஊருல உள்ளவுக எல்லாம் சைக்கிள கொடுத்து வேல வாங்குறானுக. ஏம் புள்ள என்ன ஓடும் புள்ளயா. ஊருக்கு ஓழைக்கவா பெத்துப் போட்டுருக்கேன்.பத்தாங்கிளாசு முடிக்கட்டும். மேல படிக்க அசலூருக்குத் தானே போகனும். எப்பாடுபட்டாவது அப்போதைக்கி நல்ல உருப்படியான சைக்கிள வாங்கி கொடுத்துப்புடுறேன்..’

பேரறிவாளன் பதினோறாம் வகுப்பு சேர்ந்ததும் முதல் வேலையாக சைக்கிளை வாங்கிக் கொடுத்தாள் செல்வி.

கூடலூரிலிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்தில் பிலாக்குடியில் உள்ள பள்ளியில் தான் அறிவியல் பாடப்பிரிவு எடுத்து படித்து வந்தான். பொருளியல் பாடப்பிரிவு மாணவர்கள் ஆங்கில வகுப்புக்கு மட்டும் அறிவியல் பாடப்பிரிவு வகுப்பறைக்கு வந்து விடுவார்கள். ஆங்கில ஆசிரியர் ஒருவர் மட்டும் இருந்ததால்தான் இந்த இணைப்பு வகுப்பு. பொருளியல் பிரிவு மாணவர்கள் பெஞ்சில் நெருக்கிக்கொண்டு உட்கார்ந்ததுபோக இடமில்லாதவர்கள் தரையில்தான் அமர்ந்தனர்.

அப்போதெல்லாம் பொருளியல் படிக்கும் சங்கீதா முதல் இருக்கையில் உட்கார்ந்திருக்கும் பேரறிவாளன் இருக்கைக்கு கீழே அமர்ந்து கொள்வாள். பார்வை ஆசிரியர் பக்கம் என்றாலும் சிந்தனை பேரறிவாளனைப் பற்றியதாகவே இருக்கும் அவளுக்கு.

அவள் தனது இடது கையால் பேரறிவாளன் கால்களை வருடிக்கொண்டே இருந்தாள். அவன் இடமாறி உட்கார்ந்தாலும் லாவகமாக நகர்ந்து அவனருகே சென்று விடுவாள்.

‘ஏம்பா.... ஒரு எடத்துல இருக்க மாட்டியா. அங்கிட்டும் இங்கிட்டுமா நகர்ந்துக்கிட்டே இருந்தா. நா ஒன்னப் பாக்குறதா. இல்ல பாடத்த நடத்துறதா.

வெளியில போயி பேண்டுல எதுவும் பிரச்சினைனா சரிபண்ணிக்கிட்டு அடுத்த கிளாசுக்கு வா. என்னப்பா சொல்லிக் கிட்டே இருக்கேன். வயசுக்கு வந்த புள்ளமாதிரி தலகுனிஞ்சு நிக்கிற. நீ போறீயா... இல்ல நா போகவா.' கலாவதி டீச்சரின் சத்தம் அதிகமாயிருந்தது. நிசப்தமாக இருந்த வகுப்பறையிலிருந்து பேரறிவாளன் வெளியில் கதவு ஓரமாய் நின்றுகொண்டு இருந்தான்.

வழியில் செல்லும் ஆசிரியர்களும் மற்ற மாணவர்களும் இவனைப் பார்த்துக் கொண்டே சென்றதால் அவமானமாக கருதினான்.

'வெலகி வெலகி போனாலும் அந்தப் பொண்ணு எதுக்கு நமக்கிட்டயே வருது. நம்ம குடும்பம் இருக்க நெலமயில இந்த வயசுல அது ஒன்னுதான் கொறச்ச...' தனக்குள் பேசிக்கொண்டான்.

இணைப்பு வகுப்பு பேரறிவாளனுக்கு தர்மச்சங்கடத்தை உண்டாக்கியது. கலாவதி டீச்சரிடம் சங்கீதாவைப் பற்றி ஒருமுறை கூட சொன்னதே இல்லை.

'பொம்பளப் புள்ளைககிட்ட சூதானமா பழகனும்ப்பா. பொம்பளப் புள்ள பாவம் சும்மா விடாது. யாரு மனசயும் கலங்கப்படுத்திடாம நல்லபடியா படிச்சுட்டு வந்துரு சாமி." அவன் அம்மா சொன்னதை நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

அவளது வகுப்பறைச் சன்னலிலிருந்து இவனை பார்த்துக் கொண்டே இருப்பதை பெரும் பாக்கியமாக கருதினாள். சங்கீதாவும் அவனிடம் காதலை வெளிப் படையாகச் சொல்லவில்லை.

தன் நண்பர்கள் அவனை காதலிக்க கட்டாயப்படுத்தினர். 'இது பட்டிக் காடுடா. பன்னண்டாவது படிச்சவொடன அந்தப் புள்ளய எப்புடியும் யாருக்காவது கட்டிக் கொடுத்துருவாங்க. அப்பதான்டா நமக்கு பதினெட்டு வயசே ஆரம்பிக்கும். எனக்குச் சோறு போடுறதுக்கே எங்க அப்பனுக்கும் ஆத்தாளுக்கும் நாக்கு தள்ளுது. இந்தக் கெரகத்துல காதலு வேறயா.. இது படிக்கிற வயசுடா..' பேரறிவாளனின் கருத்து அனைவருக்கும் நியாயமானதாக தோன்றியது.

'அப்புடினா அந்தப் பொண்ணுக்கிட்ட உண்மையச் சொல்லிற வேண்டியதுதானே. நா வேணா போயி சொல்லவா...' ஞானேஸ்வரன் குறுக்கிட்டான்.

'மாப்ள, அதுக்கான வாய்ப்பு அமையும்டா'

அந்த ஆண்டு நடக்க இருக்கும் ஆண்டு விழாவுக்கான போட்டிகள் மாலை நேரம் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

'என்னங்க... நீங்கதான் பாட்டுப்புக்கு பைண்டிங் பண்ணி நெறைய வச்சு ருக்கீங்கள்ள. அத கொடுங்க. பாட்டுப் போட்டில சேந்திருக்கேன்' சங்கீதா வின் குரல்கேட்டு மறுப்பேதும் சொல்லா தவனாய் மறுநாள் கொண்டு வந்து கொடுத்தான்.

பாட்டுப் போட்டியில் பேரறிவாளனும் கலந்து கொண்டிருந்தான். மேல்நிலை வகுப்புகளுக்கான பாட்டுப்போட்டி தொடங்கியது. வரிசைப்படி பெயர்கூப்பிட ஒவ்வொருவராக பாட ஆரம்பித்தனர். பேரறிவாளனை அழைத்தபோது அவனது நண்பர்களோடு சேர்ந்து சங்கீதாவும் கரவொலி எழுப்பினாள். மாணவிகள் அவளை 'என்னடி...' என்பது போல

பார்த்ததை அவள் பெரிதாக கண்டு கொள்ளவில்லை.

'பச்சமலப் பூவு நீ உச்சிமலைத் தேனு.... குத்தங்குறை ஏது நீ நந்தவனத் தேரு.... அழகே பொன்னுமணி.... சிரிச்சா வெள்ளிமணி..... ' பேரறிவாளன் பாடும்போது அவளும் முனுமுனுத்தாள். அவனைத் தொடர்ந்து நான்கைந்து பேர் பாடினர்.

சங்கீதா பாட ஆரம்பித்தாள். 'இந்தப் பச்சைக்கிளிக்கொரு செவ்வந்திப்பூவை தொட்டிலில் கட்டி வைத்தேன்.... அதில் பட்டுத்துகிலுடன் அன்னச் சிறகினை மெல்லென இட்டு வைத்தேன்....' நீதிக்கு தலைவணங்கு படத்திலிருந்து பாடினாள். பேரறிவாளனின் நண்பர்களில் ஒருவன் கைகளை தொட்டிலாக்கி ஆட்டிக் கொண்டிருந்தான்.

'சும்மா இருங்கடா....." மெல்லியதாய் சத்தமிட்டுக் கொண்டே இருந்தான் பேரறிவாளன்.

நிகழ்ச்சி முடிந்த பிறகு பேரறிவாள னிடம் வாங்கிய பாட்டுப் புத்தகத்தை கொடுத்தாள். அவளின் கண்கள் இளகிய பனியை ஒத்து இருந்தது. அவளின் உதடுகளில் முல்லை மலர்களை பூக்கச் செய்து நகர்ந்து சென்றாள்.

"மாப்ள கொடுடா. அதுல என்ன இருக்குனு பாக்குறேன்..." வெடுக்கென பறித்தான் சுப்பிரமணி. ஒவ்வொரு பக்க மாக புரட்டினான். அதில் ஒன்றுமில்லை என்று உதடுகளைப் பிதுக்கினான்.

பேரறிவாளன் பாட்டுப் புத்தகத்தை வாங்கி பக்கங்களை காற்றில் விரிய விட்டான். அதிலொரு பக்கம் அதிகம் பயன்படுத்தியதற்கான அடையாளத்





தோடு இருந்தது. உற்றுப் பார்த்தான். அந்தப் பக்கத்தில் முன்று நட்சத்திர குறியீடுகள் இட்டு வட்டமிட்டு இருந்தது. வட்டத்தின் மேல் பறவைகள் இரண்டு பறப்பது போல் குறியீடும் இருந்தது.

”எனக்கு ரொம்ப ரொம்ப பிடிச்சப் பாட்டு. இப்படிக்கு எஸ்.ஜி. என்பது ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. சங்கீதா என்பதைத்தான் அப்படி எழுதியிருந்தாள்.

”வச்சுக்கவா ஒன்ன மட்டும் நெஞ்சுக் குள்ள... சத்தியமா நெஞ்சுக்குள்ள ஒன்னு மில்ல...”யாரோ பாடுவது போலிருந்தது அவனுக்கு.

இவனைத் திரும்பித்திரும்பி பார்த்துக் கொண்டே சென்ற அவளது கண்கள் இரண்டும் துள்ளி நடனமாடிக் கொண்டி ருந்தன. பேரறிவாளனின் இதயம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வேகமாய் துடித்தது. தனது வலது கையை நெஞ்சில் வைத்து சாந்தப்படுத்திக் கொண்டான்.

நாட்கள் கடந்தன. பள்ளிக்கூடம் விட்டு வந்த அவனிடம் கடிதம் வந்திருப்ப தாக அவன் அம்மா சொன்னாள். நமக்கு கடிதமா... ஆச்சரியமாக இருந் தது அவனுக்கு. சன்னலில் இருந்த உறையிடப்பட்ட கடிதத்தை எடுத்தான். அனுப்புநர் முகவரி வெற்றிடமாக இருந்தது. பிரித்துப் பார்த்தான். முத்துகளை கோர்த்ததாக இருந்தன அந்த எழுத்துகள். கடிதத்தை சங்கீதாதான் எழுதியிருந்தாள். வாசிக்க ஆரம்பித்தான்.

*பிரியாதிருப்பாய் என்று நம்பி ப்ரியமுடன் உன்னுள் வாழ ஏங்கும் உனக்கான சங்கீதா...*

கண்களைச் சிமிட்டிச் சிமிட்டி காத லிக்கும் என் கருவிழிகளை காணாதது போல் கடந்து போகும் உன்னை கட்டியணைத்து முத்தமிட்டு மகிழ்கின்றேன் நாள்தோறும் கனவில். கால்களைச் சுரண்டும் போதெல்லாம் கட்டெறும்பு கடிப்பதாய் இடம்மாறி அமருகிறாய். உன்னுள் வாழ துடிக்கும் என்னை எவ்விடத்தில் வைத்து அழகுபார்க்க எண்ணுகிறாய் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை.

நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் குழுவில் நீயும் இருக்கிறாய் என்பதை

நானறிவேன். நம் மாணவர்கள் மலையக் கோவில் திருவிழாவிற்கு பாதுகாப்பு பணிக்கு செல்வதாக அறிந்து உன்னைக் காண ஒற்றை ரோஜாவை தலையில் சூடாமல் கைகளில் தாங்கி வந்தேன். பூ வைக்காத என் தலையைப் பார்த்து என் தாய் திட்டிக்கொண்டே வந்தாள். உன்னைப் பார்த்த மகிழ்ச்சியில் அந்தப் பூவைச் சூட வேண்டும் என்று நான் எண்ணியிருந்ததை என் தாயிடம் எப்படிச் சொல்வேன்.

உன் நண்பர்கள் எல்லோரும் என்னைப் பார்த்து பேசினார்கள். அவர்களுக்கும் தெரிந்திருக்கும் நான் உன்னைக் காண்பதற்காகத்தான் வந்தேன் என்று. உனக்கு மட்டும் ஏனோ தெரியவில்லை. திருவிழாவில் கூட்ட நெரிசலாக இருந்தபோதும் என்னுள் அவை அனைத்தும் வெற்றிடமாகவே தென்பட்டது.

உன் வருகை இல்லாத திருவிழா வெறிச்சோடி காணப்பட்டது. உன் விடுப்புக்கான காரணத்தை உன் நண்பர் களும் அறியாதவர்களாகவே இருந்தனர். வெற்றுக் கூட்டத்தைப் பார்த்தபடி வெறுமையை சுமந்துகொண்டு அந்த ரோஜாவை படியொன்றின் ஓரமாய் வைத்தேன். சிறுமி ஒருத்தி ஓடி வந்து அதைச் சூடிக்கொண்டு சிரித்தபடி சென்றாள். அந்தச் சிரிப்பில் நாம் மகிழ்ந்திருந்தோம்.

பாட்டுப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் இருந்த முகவரியை பத்திரப்படுத்தி வைத்திருந்ததால்தான் என்னால் மடல் எழுத முடிந்தது. பக்கம் பக்கமாய் அமர்ந்த போதும் பக்குவமில்லாதவனைப் போல் காட்டிக்கொள்ள முயல்கிறாய். உரக்கச் சிரிக்கும் உன் அழகில் உறங்கிக் கிடக்கும் என்னை உன்னுள் அணைத்துக்கொள். கைகளை விட்டபடி சைக்கிள் ஓட்டும் உன் கரங்களை மெல்லப் பற்றிக்கொண்டு மிதக்கும் என்னை உன்னுள் மூழ்கவிடு. சொந்தமாய் பாட்டெழுதி சந்தம் போட்டு சத்தமில்லாமல் உன் நண்பர்களிடத்தில் பாடும் அந்த சந்தடிக்குள் நீந்த துடிக்கும் என்னை ஏந்திக்கொள். விரட்டி விரட்டி உன்னைக் காதலிக்க வைக்கும் அந்தக் கண்களுக்குள் என்னைக் காத்துக்கொள்.

பிரியாதிரு பிரியமே
ப்ரியமுடன்
உன்னுள் வாழும்
சங்கீதாபேரறிவாளன்.

ஒவ்வொரு சொற்களிலும் அவள் கலந் திருந்தாள். அந்தக் கடிதம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக கருதினான். அப்படி பாதுகாத்தால் காதலை ஏற்றதாக அல்லவா கருதப்படும். நாளை நேரில் பார்த்து காதலைச் சொல்லிவிடுவதுதான் சரியாக இருக்கும் தனக்குள் எண்ணினான்.

"சாமி.... என்னக்கடிதாசிப்பா அது"

"பழைய கொஸ்டீன் பேப்பர என் ப்ரண்டு அனுப்பிருக்காம்மா..."

''ஏதோப்பா... நா என்ன படிச்சா இருக்கேன். ஓந்தக்கச்சிக ரெண்டும் ஒன்ன நம்பிதான் இருக்குதுக. வித்து கட்டிக் கொடுக்குற அளவுக்கு பெருசா நமக்கிட்ட என்ன இருக்கு. ஓட்டக் கலப்பையும் ஒட்டிப்போன வயிரோட தொத்த மாடு ரெண்டும் காலா நடுக ஒரு நாத்தங்காலும்தான் இருக்கு. சமத்தா படிச்சுக்குய்யா..."

வழக்கம்போல் பள்ளிக்கூடம் சென்றான். அவன் கடிதம் வந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. அவளும் அவனைப் பின்தொடர்வதிலிருந்து பின் வாங்குவதாய் இல்லை .......

# போதையின் பாதையில்...

போதையின் பாதையில்
பேதையாய் ஆகாதே
வாதை மிகுதியில்
வேதனை துய்க்காதே

போதைக்கடிமை
போக்கற்ற செயலாம்
வலுவிழக்கும் வாலிப
வன்செயல் ஆகுமே

மார்க்கம் மறக்குமே
மதிபிறழ்ந்து போகுமே
போர்க்களமாய் வாழ்வு
பீதிகொள்ள வைக்குமே

மேதையின் போதனை
மொத்தமாக ஏற்றிடு
மகத்தான வழியிலே
மனங்களை மாற்றிடு

தீதாம் போதையில்
தீராத நோய்களே
திடமான கொள்கையில்
தீர்க்கமாகும் வாழ்க்கையே

துக்கமெலாம் துறக்கவே
தூக்காதே போதையை
துயில் மீளாதுலகிலே
தூர்ந்திடுமுன் காதையே

போதை நீ பருகிட
பலப்பல காரணம்
போதையில்லா தூயநெறி
வாழ்க்கையே பரிபூரணம்


மதுவிச மருந்தினால்
மரித்தவனாய்க் கிடப்பாய்
நல்லுறக்கம் இழப்பாய்
நாளெலாம் தவிப்பாய்

பாதகம் செய்தே வாழ்வினை
பாலைவனம் ஆக்குமே
பழிசுமந்து உலகிலே
பாவியாக மாற்றுமே

புத்தி மந்தம் ஆகுமே
புகைச்சல் விழியில் தோன்றுமே
சக்தி குன்றி யாக்கையில்
சகல நோயும் தொற்றுமே



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை



காப்பு அரண் ஈரலும்
கழிவகற்றும் அங்கமும்
சிதைந்து சிதைந்து மெல்லவே
சீவன் பிரித்து எடுக்குமே

புற்றுநோய் தொற்றுநோய்
பற்றியெரியும் குடற்புண்
சுற்றோட்டக் குருதி வியாதி
மற்றும்பல மாறா நோய்களும்

பற்றியுன்னைத் தாக்கும்
பிடித்துலுக்கி வதைக்கும்
படுபோதை பிணிகளுமே
பெரும்பாவ வினை விதைக்கும்

குடும்ப மானம் போக்குமே
குறுகுறுக்க வைக்குமே
இடுக்கண் மிகைத்த சீவியம்
இளமை முதுமை ஆக்குமே

மிடிமை தோன்றி வாழ்விலே
மீளாத் துயரில் வைக்குமே
அடிமை நம்மை ஆக்கியே
அடவி கொண்டு சேர்க்குமே

இழிசெயல்கள் இனிவேண்டாம்
இன்றே நீ உறுதிகொள்வாய்
ஈடேற்ற நல்வாழ்வினிலே
இனிமைதனைச் சேர்த்திடுவாய்

குடிஅடிமை இல்லாத நல்
அரசாட்சி எமக்கு வேண்டுமே
அடிவருடி தொடர் நன்னெறியில்
அகிலம் போற்ற வேண்டுமே

# தேவதை

அலெக்ஸ் ஆபீஸ் வந்து விட்டானே தவிர மனம் ஒரு நிலையில் இல்லை. வந்ததில் இருந்து வேலை ஓட வில்லை..

காலையில் அப்பா ஊரில் இருந்து வந்திருந்தார். அவர் வந்தாலே இந்த ப்ரச்சனையும் வந்து விடும்.

அவருக்கு அவர் தங்கை பெண்ணை



அலெக்ஸ் கல்யாணம் செய்து கொள்ள வில்லை என்று ஆத்திரம். அதிலும் கல்யாணம் ஆகி இரண்டு வருடங்கள் ஆகியும் ரோசிக்கு குழந்தை பிறக்கவில்லை என்பதால் ஆத்திரம் இன்னும் அதிகமாகிக் கொண்டு இருந்தது.

வரும் போதே அலெக்ஸுக்கு வேறு பெண் பார்த்து முடிக்க வேண்டும்... பேரக் குழந்தையை கொஞ்ச வேண்டும் என்று சொல்லிக் கொண்டே தான் வந்தார்.

மருமகளை அழவைத்துவிட்டு தன் சகோதரியை பார்க்க போய் விட்டார்.

அழும் மனைவியை சமாதானப்படுத்தி விட்டு ஆபீஸ் வந்து விட்டான் அலெக்ஸ்.

அலெக்ஸ்.... ஊரில் படிக்கும்போதே அவன் வீட்டில் எப்போதும் நாய்களும், பூனைகளும், கோழி, வாத்து முதலிய வளர்ப்பு பிராணிகளும் நிறைந்திருக்கும்.

இதைத் தவிர ரோட்டில் அடிபட்டு கிடக்கும் எல்லா உயிரினத்தையும் காப்பாற்றுவது அவன் அன்றாட வேலை.

அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தான் ரோஸியை சந்தித்தான். ரோட்டில் அடிபட்டு கிடந்த ஒரு கிளியை தூக்கிக் கொண்டு மிருகவைத்தியரிடம் ஓடும்போது யோசிக்காமல் பைக்கை எடுத்துக் கொண்டு வந்த அலெக்ஸை அப்போது சரியாக கவனிக்கவில்லை. ஆனால் அந்த சமயத்தில் அவன் நடந்துகொண்ட விதம் அவன் மேல் மிகுந்த மரியாதையை ஏற்படுத்தியது.

அடுத்தடுத்த நாட்களில் கிளியைப் பற்றி அவன் விசாரித்த விதம், மற்றும் அவன் வீட்டில் உள்ள ப்ராணிகள் சரணாலயத்தைப் பற்றி கேள்விப்பட்டது

இவை அவளை அவன் வீடு தேடி போக வைத்தது.

ப்ராணிகள் மேலிருந்த பாசம் இருவரையும் நெருக்கமடைய செய்தது. அவன் அம்மாவிற்கும் ரோஸியை மிகவும் பிடித்து போக அப்பாவின் எதிர்ப்பை மீறி ஒரு நன்னாளில் இருவரும் கல்யாணம் செய்து கொண்டார்கள்.

ஒரு வருடம் மிகவும் சந்தோஷமாக சென்றது. ஊரில் இருந்தவரை பிராணிகளின் துணை அவர்களை வேறு எதைப்பற்றியும் கவலைப்பட விடவில்லை.

அலெக்ஸ் சென்னை கம்பெனியில் வேலை கிடைத்து சென்னை வந்த பிறகு அடுத்த மூன்று மாதத்தில் ரோஸியும் அவனுடன் வந்து விட்டாள்.

ஊரில் இருந்ததுபோல் பெரிய வீடாக இல்லாமல் அபார்ட்மெண்ட் வாசம்... செல்லப் பிராணிகள் பிறிவு ஆகியவை இருவரையும் கொஞ்சம் புரட்டித் தான் போட்டது. அதோடு குழந்தை இல்லாத சோகம் வேறு மனதை ரணமாக்கியது.. அதில் ஊசி ஏற்றுவது போல் மாமா பேசியது அவள் மனதை குதறியது.

சரியாக மதியவேளையில் மாமாவிடம் இருந்து போன்..

ரோஸிம்மா கொஞ்சம் உடனே புறப்பட்டு வா..

எங்க மாமா இருக்கீங்க..

எனக்கு சரியா தெரியல்லம்மா.. இரு பக்கத்துல இருக்கற தம்பி கிட்ட போனைத் தறேன்.. இடத்தை கேட்டுக்கோ. அலெக்ஸையும் கூட்டிக் கிட்டு வந்துடு.

சார் எங்க இருக்கீங்க??

வண்டலூர் கேளம்பாக்கம் ரோடுல இருக்கோம்மா..

உடனடியாக கூடுவாஞ்சேரியில் இருந்து வண்டலூர் வீட்டுக்கு அலெக்ஸை வரவழைத்து இருவருமாக மாமாவைத் தேடி, அடுத்த பதினைந்து நிமிடங்களில் அவரை அடைகின்றனர்.

ரத்தம் சொட்ட சொட்ட கிடக்கும் ஒரு மானை மடியில் ஏந்தியவராக மாமா.

உடன் இருந்த நபர் போலீஸ் மற்றும் வனத்துறைக்கு புகார் கொடுத்து விட்டதாகவும் மோதிய வண்டியை பிடித்து வைத்து உள்ளதாகவும் தகவல் கொடுக்க.. மானின் உயிரை காப்பாற்ற வேண்டி செயல்பட ஆரம்பிக்கிறாள் ரோஸி..

ஆனாலும் பலனின்றி ரோஸியின் மடியில் அந்த மான்குட்டி மூச்சடங்கிய வேளை தன் அடிமடியில் ஒரு தேவதை புகுந்தது போல் சிலிர்ப்பு ரோஸிக்கு.....

போலீஸூம் வனத்துறையினரும் வந்து முறையாக நிகழ்வுகளை பதிவு செய்த பிறகு நெஞ்சடர்ந்த சோகத்துடன் வீடு திரும்பியவர்களுக்கு மறுநாள் அந்த சந்தோஷ செய்தி கிட்டியது.

அந்த குடும்பம் ஒரு தேவதையின் வரவுக்காக காத்திருக்கிறது.

**வெங்கட் க்ருஷ்ணா**



# சிறகுகள் சிறைபடுவதில்லை

குயில்.மு.இரசியா பேகம்



கயலுக்கு தனது ஓர்படிகளின் முன்னே தலை நிமிர முடியவில்லை.

பெரியப் பண்ணை புனித யாத்திரையில் இருந்து திரும்பி வந்துவிட்டார்.

கயல் வீட்டுக்கு வந்தது எண்ணி அவருக்கு மிகுந்த சந்தோசம் என்றாலும், சந்திரனின் மேற்படிப்பு பாதித்தது அவருக்கு வருத்தமே!

கயல் கருவுற்று இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ந்தார். காஞ்சிபுர பட்டு வாங்கி ளைகாப்பு செய்தார்கள்.எல்லாம் எதிர்த்த வீட்டாருக்கும் தெரியும் ஒரு ஈ காக்கா கூட எட்டிப் பார்க்க வில்லை.

கயலுக்கு சந்திரனை உரித்து வைத்தார் போல் ஓர் ஆண் பிள்ளை பிறந்தது. எல்லோருக்கும் மகிழ்ச்சி கயலுக்கு மட்டும் வருத்தம்.தன் வீட்டில் இருந்து யாரும் வரவில்லை என்று. ...

ஒரு வருடம் ஓடிப் போனது...

பெரியப் பண்ணை அன்று சாப்பிட்டுவிட்டு தனது நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

கண்ணை மூடி தியானத்தில் இருந்தார்.

தன் மச்சான் சின்னப் பண்ணை விசயத்தில் ஏன் இப்படி நடந்தது?

சின்னப் பண்ணை என் மூத்த மகன் சனாவை சரிக்கப் போவதாக எடுபிடிகள் சொன்னது கேட்டுத் தான் தடுமாறிப் போனது தவறு..

கோவப்பட்டது தவறு...

ஆட்களை அனுப்பி அவரை அழைத்து வரச் சொன்னது தவறு...

எல்லாமும் தவறாகப் போனது...

நான் கவுரவம் பார்க்காது கிளம்பிப் போய் அவரை சந்திருந்தால் ஒருவேளை எல்லாம் நலமாக இருந்திருக்கும்.

கலவரம் நடந்திருக்காது.. தனது மச்சானை இரத்த வெள்ளத்தில் பார்த்தது காட்சியாக கண்முன் விரிய.... மிகவும் மனங்கலங்கிப் போனார்...

வீட்டு வேலை செய்யும் பொடியன் எனப்படும் சிறுவன்.தண்ணீர் மற்றும் டீ யுடன் நின்று அய்யா என்றான்.எப்போதும் ஆடிக் கொண்டிருக்கும் அவர் கால்கள் ஆடவில்லை. அசையவில்லை.

ஏதோ அசாதாரணமாக உணர்ந்து னார்த்தன அய்யாவை அழைத்தான்.வந்துப் பார்த்த சனார்த்தர் அப்பா இவ்வுலகை நீத்ததை புரிந்தார்.

குரலெடுத்து அழ முடியாத குடும்பத்து மூத்த பிள்ளை!

துடைத்து வைத்த குத்து விளக்கு பான்ற மூத்த மருமகள்.அருமையாக அணைத்துப் போனார்கள் அனைவரையும்.

பாஸ்கரன் தனது அறுபத்து மூன்றாவது வயதில் மிகப் பெரிய மன உளைச்சலில்,கவலையில்,தனது தவறினால் தன் மச்சான் இரத்த வெள்ளத்தில் கிடந்ததை நினைத்து புழுங்கினார்.. தான் இறங்கிப் போய் பேசி தீர்க்காமல் போனோமே என்ற ஏக்கத்தில் இயற்கை எய்தினார். கடைசி வரை அவர் மனைவியிடம் பேசவேயில்லை இது உச்சம் பட்ச துன்பம்.

பிரச்சனைக்கு காரணமானவர் இறந்தப்பின்னும் திர்த்த வீட்டாருக்கு கோபம் தீரவில்லை...

## 25. சந்திரன்

சந்திரனுக்கு குடும்பப் பொறுப்பு மிக அதிகமானது.மேலும் படித்தார்.அரசாங்க வேலைக்காக எழுதிப் போட்ட வண்ணம் இருந்தார்.

கேஸ் வந்தால் தான் சம்பளம் என்ற நிலை சந்திரனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.அரசாங்க வேலையில் நிலையான ஒரு வருமானம் வருமென்று ,அதற்கான முயற்சியில் இருந்தார்.

கயலின் மனஅழுத்தம் அவருக்கு நன்றாகப் புரிந்தது.பொறுமையைத்தான் போதித்தார்.

பறக்க நினைத்த அவள் மனம் சிறைப்பட விரும்பவில்லை.

தாழ்வு மனப்பான்மையும், குற்றவுணர்வும் அவளை சிறுக சிறுக தின்பது சந்திரனுக்கு மிகத் தெளிவாகப் புரிந்தது.

சந்திரன் தனது மாமியார் குடும்பத்தில் எப்படியாவது கயலை சேர்ந்துவிட எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்தது.

கயலை இழந்துவிடுவோம் என்ற பயம் எப்போதும் சந்திரனைத் துரத்திக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் கயல் இரண்டாவது முறைக் கருவுற்றாள்....

சந்திரனும் தானே முயன்று எதிர்த்த வீட்டாருக்கு தெரியும்படி செய்தார்.

அவர்கள் வந்துப் பார்த்தாலாவது கயல் மனம் தேறும் என்று நினைத்தார்.

பெரியப் பண்ணை இறந்தப்பின்னும் அவர்கள் கோபம் தணியவில்லை.

கயலுக்கு அவர்கள் மனதில் என்ன எண்ணங்கள் தன்னைப் பற்றியுள்ளது என்று தெரிந்துக் கொண்டு, தான் எடுத்த முடிவின் நியாயங்களை அவர்களுக்கு தெளிபடுத்த முயன்ற கயலின் முயற்சிகள் அனைத்தும் வீணானது.

அவர்கள் மனதில் கயலைப் பற்றி மிகுந்த தவறான அபிப்பிராயம் உண்டென கெடுமதியுள்ள சிலரால் ஓதப்பட்டது.

அதென்னங்க அப்படி ஒரு ஈவு இரக்கமில்லாமல்.. சம்மதப்பட்டவரிடமே பட்டவர்த்தனமாக உன்னை பற்றி இப்படி பேசுகிறார்கள் என்று சொல்லமுடிகிறது...

இப்படியும் சிலர்..

கயல் செத்தே போனாள்! பின்னால் அவள் நடைப்பிணமானாள்.

வீட்டில்,கணவன்,குழந்தைகளிடம்,நாட்டமில்லை....

நாட்கள் செல்லச் செல்ல அவளின் மனக்குமறல் அதிகமானது....

இரண்டாவது குழந்தைப் பெண்ணாகப் பிறந்தது ...

எதிர்த்த வீட்டாரிடம் எந்த மாற்றமும் இல்லை.

கயல் கேட்டா அந்த திருமணம் நடந்தது.?

கயல் கேட்டா எதிர்த்த வீடுதான் அவள் மாமியார் வீடென மனதில் பதிய வைக்கப்பட்டது?.

கயல் கேட்டாளா தனக்கு இரண்டாவது திருமணம் வேண்டு மென்று?.

கயலால் அவள்தங்கைகளுக்கு திருமணத்தடை என்று சொல்லப்பட்டது ஏன்?

கயல் என்ன பாவம் செய்தாள்

கற்பு நெறிப்படி வாழநினைத்துப் படிதாண்டியது தவறா?

பழியென்றால் அதைச் செய்தவரை யல்லவா பழிவாங்க வேண்டும்.

இயற்கையே அவரைப் புதைத்த பின்னும் அடங்கவில்லையே பழிவாங்கும் உணர்வு.

இன்னும் எத்தனைக் காலம்

தொடருமிது.??....

‘வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரமில்லை

எனவே உங்களை அதிக மன அழுத்தத்திற்கு ஆளாக்காதீர்கள்.

ஏனென்றால் சூழ்நிலை எவ்வளவு மோசமான இருந்தாலும் அது நிச்சயம் ஒருநாள் மாறும்‘ என்பதை இவர்கள் நினைத்திருந்தால்...இந்தக் கதை உருவாகி இருக்காது...

கயலுக்கு நம்பிக்கை கொடுக்க கடவுளே யாரையாவது கொண்டுநிறுத்து என்று மனத்தால் பிரார்த்தனை செய்தார் சந்திரன்...

யாருமே வராது போனது சந்திரனின் துரதிர்ஷ்டம்...

தொடரும்

# 'துளிப்பாக்கள்'

÷

சும்மாட்டோடு தயிர் பானையை
இறக்கி வைத்தாள்
குறைந்தது பசி!

÷

மெல்ல மெல்ல நினைவிழக்கிறது
திருமணத்திற்கு பின்
பழைய காதல்!

÷

கண் தெரியாதவனும்
கணவு காண்கிறான்
காதலில்!

÷

விளையாட்டாய் பேசியது
விணையாய் முடிகிறது
காதல்!

÷

கூண்டிலிருந்து
சுதந்திரமாய் பறக்கிறது பறவையின்
இறகு!

÷

கணவனே கண்கண்ட தெய்வமாம்
முழங்குகிறாள் மேடையில்
விவாகரத்தானவள்!

÷

நிச்சயதார்த்தம் முடிந்தது ஆயத்தமாகிறாள்
மணப்பெண்
காதலனோடு செல்ல!

÷

இறைக்காக காத்திருக்கும் நாரை
குஞ்சுகளோடு துள்ளி விளையாடும்
மீன்கள்!

÷

இரவு விளக்கணைத்ததும்
பகல் கனவு பலித்தது
சாந்தி முகூர்த்தம்!

÷

ஆதாரமின்றி பழிசுமத்தும் மனைவி
ஆதாயமாகும் கணவன்
விவாகரத்து!

÷

முண்டியடித்து சென்றும்
இடம் பிடிக்க முடியவில்லை
முதல் பந்தி!

÷

கருமேகங்கள் நகர்ந்து சென்றதில்
நினைக்காமல் தப்பித்தேன்
முதல் காதல்!

÷

ஒரு நிரபரதியை
குற்றவாளியாக்கி கொண்டிருக்கிறது
வீண்பழிகள்!

÷

கோடம்பாக்கம் வந்தவர்
எடுத்துக் கொண்டிருக்கிறார்
பிச்சை!

÷

தாமரை இலையில் தண்ணீர்
ஒட்டவில்லை
மாமியார் மருமகள்

÷

இறகுக்கு இருக்கும் சுதந்திரம்
பறவைக்கு இல்லை
கூண்டில்!

÷

பிரச்சார பீரங்கி
தனியறையில் வெடித்து விட்டார்
பலூன்!

மகிழை சிவகார்த்தி






- தலைப்பு: வாழ்க்கைத்தடம்
- ஆசிரியர்: தேசிய நல்லாசிரியர், கலைமாமணி ப.முருகேசன்
- வகைமை: கவிதை
- பக்கங்கள்: 240
- விலை: ரூ 250/-
- வெளியீடு: கவிதா பப்ளிகேஷன், சென்னை.

கலை வடிவமும் கருத்துச்செறிவும் கவனம் ஈர்க்கும் நயமிகு சொல்லாட்சியு மாகக் கட்டமைப்பைக் கொண்டது கவிதை என்பதாகும். அவ்வடிவ மொழி யழகுக் கவிதையுடன் கூடிய கடித இலக்கியமாகப் படைக்கப்பட்டதுதான் இந்த 'வாழ்க்கைத்தடம்' எனும் நூல் வடிவம் ஆகும். இது புதுச்சேரி, தேசிய நல்லாசிரியர், கலைமாமணி, ப.முருகேசன் அவர்களின் எழுத்தாக்கத்தில் உருவானது.

இன்றைய நவீன கால வளர்ச்சியின் காரணமாகக் காணாமல் போன பலவற்றில் கடிதமும் ஒன்று ஆகும். பழையன கழிதலும் புதியன புகுதலுமாக, இன்றைய வாழ்வில் தொடர்புகள், செய்திகள், தரவுகள், தகவல்கள் எனப் பல்வேறு பரிமாற்றங்கள், மின்னணு ஆற்றலின் வழியில் விரைவாகவும் விரிவாகவும், உலகப்பந்தைத் தாண்டியும் நிகழ்கின்றன.

ஒரு காலத்தில் கடித இலக்கியம் என்பது ஒரு புரட்சியாக இருந்தது. மடல் எனப்படும் கடிதத்தை, உள்ளத்து உணர்வுகளைப் பரிமாறப்படும் இடம், உறவுகளைப் பலப் படுத்தும் விதம் என்பதையெல்லாம் தாண்டி மனிதர் களின் வாழ்வியல், வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், படிப்பினை என்று பலவற்றையும் காட்சிப்படுத்தும் ஊடகம் போலவும் இலக்கியத்தில் இடம் பிடித்துள்ளது என்பதை மறுக்க இயலாது. அத்துணை உள்ளடக்கம் பெற்றவை, பிற்காலத்தில் வரலாற்று சிறப்புமிக்க கடிதங்களாகி இன்றும் நிலைத்திருப்பதே அதற்குச் சாட்சியாகும்.

அக்காலத்தில், கடிதத் தொடக்கத்தில் முதலில் எழுதப்படும் விளிச்சொல்லே பெறுநரின் கண்களில் நீரைப் பெருக்கும். 'அன்புள்ள அம்மாவிற்கு', 'நெஞ்சில் நிறைந்த காதலிக்கு', 'அன்புள்ள அத்தான்' என எத்தனையோ சொற்கள் உள்ளத்தை உணர்த்துவதாகத் தொடங்கும். 'வணக்கம்! இங்கு நான் நலம். அங்கு நீங்கள் நலமா?' எனத் தொடரும். எத்தனையோ செய்தி களைப் பகிர்ந்த பின்னும், 'இனி, மற்றவை தங்களின் பதில் மடல் கண்டு', என இன்னும் தொடரத் தூண்டும். இறுதியில், 'என்றும் அன்புடன்', 'உன் நினைவில் உருகும்', 'அன்பு வாழ்த்துகளுடன்' என்று தீரா அன்பை உணர்த்தும் பல்வித வார்த்தைகளுடன் பெயரிடப்பட்டு முடியும். இந்நூலாசிரியரும் அத்தகைய அன்பை முதலாகக் கொண்டு, தன் அன்பு மகள் அல்லிக்காக, இந்நூலைப் படைத்து உள்ளார்.

புதுச்சேரியின் முக்கிய ஆளுமையான,

பன்முக ஆற்றல் உடைய இந்நூல் ஆசிரியர், தேசிய நல்லாசிரியர், கலைமாமணி, ப.முருகேசன் அவர்களின் தற்போதைய அகவை 75 ஆகும். இத்தனை ஆண்டுக்கால வாழ்வில், பிறப்பு முதல், சில நினைவுகள், சில தருணங்கள், காதல், திருமணம், சில திருப்புமுனைகள், சில அனுபவங்கள் எனத் தெரிவு செய்த சிலவற்றை மட்டும் 'வாழ்க்கைத்தடம்' ஆக்கி இலக்கியப் பரப்பிற்குள் கொண்டு வந்துள்ளார் நம் ஆசிரியர். இவர் எழுதிய மடல், உறவுகளில் தொடங்கி, பிறந்து வளர்ந்த, வாழ்ந்த, வாழும் என இந்தப் புதுச்சேரி மண்ணின் சில இடங்கள், சில மனிதர்கள், சில சூழல்கள் எனத் தன் மகளிடம் விவரிக்க விரும்பியவற்றைக் கூறியுள்ளது.

இதுவரை, பல்வேறு விதமாக, 15 நூல்களைப் படைத்த இந்நூலாசிரியரின் இந்தக் கவிக்கடித நூலின் உள்ளடக்கம் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

அதற்குமுன், தோரணவாயிலாக அட்டையின் அழகைக் காண்போம். முகப்புப் படத்தில், வானில் எழுகதிர்திசை நோக்கி நடக்கும் ஒருவர், அவரின் பாதத் தடங்கள் என நம் நூலாசிரியரைக் குறிப்பதாகக் காட்சி, மேல் வானத்தில் நிலவுமகளாக ஆசிரியரின் மகள் அல்லியைக் காட்டும் காட்சி! ஒரே நேரத்தில் சூரியனும் சந்திரனும்!



அடுத்து, தன்னம்பிக்கை வளர்க்கும் இந்நூலிற்காக, பதிப்புரையையே பாராட்டுரையாகத் தந்துள்ளார்கள் கவிதா பப்ளிகேஷன், திருமிகு சேது. சொக்கலிங்கம் அவர்கள். என்னுரையில், நூலாசிரியர் நம் வாழ்வின் நிதர்சனங்களை இப்படிச் சொல்கிறார். 'ஒருவரின் அனுபவம் / மற்றவர்க்கு எடுத்துக்காட்டு'. இதை மறுக்க இயலுமா?

பொதுவாக, முரண்கள் நிறைந்தது வாழ்க்கை. என்றாலும், எவரவர் வாழ்க்கை என்னென்ன ஆகும் என்பதெல்லாம் இயற்கையின் கையில்தான். அந்த முரண்களின் முன்னும் பின்னுமானச் சூழல்கள் யாவையும் வாழ்க்கையில் திறமையாகக் கையாள்வதின் மூலமாக, நல்லனுபவமாகவோ, சவால்களாகவோ, படிப்பினையாகவோ மாறுகின்றன. அவற்றையும் ஆசிரியர், தான் பெற்ற மகளிடம், இக்கடிதத்தில் விவரிக்கிறார். சில முரண்களை இங்கு உணர்வோம்!

இந்த 'வாழ்க்கைத்தடம்' என்பது இரண்டு பாகங்களாக உள்ளது. முதல் பாகம்-1 எழுதும் போது, ஆசிரியருக்கும் அவரின் மகள் அல்லிக்கும் வசிப்பிட இடைவெளித் தூரம் கிட்டத்தட்ட 1000 மைல்கள் இருக்கலாம். பாகம்-2 என்பது கடல் கடந்து அயலகத்தில் பல்லாயிரம் மைல்கள் தாண்டி அன்பு மகள் வாழ்கின்ற நிலையில் எழுதப்பட்டுள்ளது. முதல் பாகம் 81 பக்கங்கள் எனில் இரண்டாம் பாகம் 147 பக்கங்களில் அடங்கியுள்ளது. முகம் பார்த்துப் பேச முடியாத தொலைபேசியும் நினைக்கையிலே பார்த்து, பேசி மகிழும் திறன்பேசி, கணினி எனத் தொலைத் தொடர்புகளுமாக, இவ்விரண்டுப் பகுதிகளின் நிலையில் உள்ள முரணைக் காணலாம். இந்த முரணுக்கிடையில் நெருங்கி நிலைத்து வைப்பது அன்பு ஒன்றே அன்றோ?

நுனி நாக்கு ஆங்கிலம் பேசும் தன் மகள், தன் எழுத்தை, பேச்சை, ரசிப்பவளும் ருசிப்பவளும் ஆக இருக்கிறாள் என்று உவகை அடைகிறார். அல்லிமகளின் இளவல் அருண்குமார் பற்றி கூறும் போது 'என் எழுத்தை / இயங்குச் சித்திர எழிலோவியமாய் / வடிவம்

மாற்றும் வில்லாளனாய் / ஆங்கில நாவல் எழுத்தாளனாய்‘ என்று குறிப்பிட்டு, பின், ‘இனி என் எழுத்தும் சாகா வரம் பெறும்‘ என்று நெகிழ்ந்துள்ளார். இதைவிட ஒரு எழுத்தாளருக்குப் பரிசாய் ஒரு வாழ்வு அமையுமா?

விவரம் புரியாத வயதில் மகள் துயிலுற, அன்று சொன்ன கதைகள் அத்தனையும் கற்பனை என்று பாகம் ஒன்றில் உண்மையை ஒத்துக்கொண்டவர், விவரம் புரிந்த மகளுக்கு இன்று சொல்வது மெய் என்று உறுதியுடன் வாழ்க்கை பற்றிய ஒரு அறிமுகத் தத்துவத்தை, நிதர்சனத்தைக் கூறுகிறார்.

வயதை அறியா வயதில் அன்னையிட மிருந்து அவர் அறிந்த பிறப்புச் சூழல் பாகம் ஒன்றில் தொடங்குகிறது. இது புதுச்சேரியின் முதலியார் பேட்டையில் இருந்து விரிகிறது. அடுத்தது சாரம். இதில், திண்ணைப் பள்ளியில் தொடங்கி புதுவை மண்ணின் பல்வேறு பகுதிகளில் கல்வி வாழ்வைத் தொடர்ந்தவர், வசித்த ஊர்களாக, குயவர்பாளையம், மீண்டும் முதலியார்பேட்டை, வண்ணாங்குளம், பொய்யாக்குளம் என்று நீள்கிறது பட்டியல்.

சிசுவாக இருந்தவருக்கு, பெற்றோரின் சார்பாக ’முருகேசன்’ என்று தனக்குப் பெயரிட்டவர் மருத்துவமனையில் இருந்த ஒரு கிருத்துவ செவிலியப் பாதிரி என்பதை ஆசிரியர் குறிப்பிட்டு மகிழ்ந்துள்ளார்.

கணக்கு வாய்ப்பாட்டை, சரியாகச் சொன்னதற்காக ஆல்பர்ட் ஆசிரியரிட மிருந்து பெற்ற மிட்டாய்ப் பரிசை அபகரித்த சேகர் எனும் சக மாணவரை, இன்றும் பார்க்கையில் வணக்கம் சொல்லி வழியே போகிறாராம். இன்று ஆயிரம் சாக்லெட் வாங்கும் வசதி இருப்பினும் ஆல்பர்ட் வாத்தியார் அளித்த பரிசு கிடைக்குமா? அதனை உணர்ந்ததாலோ என்னவோ, திறமை உடைய மற்றவர்களை, இவர் பாராட்டும் விதத்தில் குறை வைப்பது இல்லை. பரிசு குறித்து இது போன்ற நிகழ்வு வேறொன்று நடந்தது. அதனை ‘வானத்துக்கு வேலி‘ பெற்ற ‘கம்பன் புகழ் பரிசு‘ சொல்லும். நூலின் 2ஆம் பாகத்தில் ஆசிரியர் இதனை விளக்குகிறார்.

15-07-1974 அன்று பணியில் இணைந் ததைப் பற்றிய கவிதை வரிகளில் ‘பொறுப்பு உணரா பருவத்தில் கிட்டியது ஆசிரியர் பணி‘ என்று கூறியவரின் வாழ்க்கை 30 ஆண்டுகளில் அடுத்தடுத்து மாநில, தேசிய நல்லாசிரியர், எழுத்தாளர், நாடக ஆசிரியர் என உருவேற்றி உள்ளது. இந்த முரணில் முன்னிற்பவை அர்ப்பணிப்பு உணர்வு, கால நேரம் பார்க்காது மாணவர்களிடம் ஒழுக்கநெறிச் சிந்தனையை வளர்த்தல், கற்பித்தல், அன்புடன் அரவணைப்பு, பள்ளிக்கும் மாணவர்களுக்கும் இடையில் பாலமாக இருத்தல், பொதுத் தொண்டில் நாட்டம் என எல்லாம் குறிப்பிடத்தக்கவை.

மேலும், அவர்தம் ஆசிரியப்பணி அனுபவத்தில், அவருடைய மாணவர்களி டமும் அவர் பாடம் கற்றுள்ளார். அதையும் சேர்த்துப் பகிர்ந்துள்ளார். அப்பனுக்குச் சுப்பன் சொன்னதைப் போல நடந்ததும் உள்ளது. ஒரு மாணவனின் தந்தை, நம் நூலாசிரியருக்கு ஞானம் பிறக்க வைத்து ‘போதிமரம்‘ ஆகிய நிகழ்வும் நடந்து உள்ளது. இதுபோன்ற, விவரங்களும் நூலில் உள்ளன.

எட்டாம் வகுப்பு வரை குடும்ப இருப்பு புரியாதவர்தான், வறுமை நெருப்பால் பழுக்கத் தீட்டப்பட்டதன் விளைவாக, ஆசிரியப் பணியில், சவராயலுநாயகர் அரசுப் பள்ளியில் மாணவர்களுக்கு

‘வயிற்றுப் பசி நீங்க தினமும் காலையில் ரொட்டி வழங்கினால் நன்று!‘ என ஆலோசனை வைக்க சூழல் உந்தியுள்ளது.

இவர், ஆடை கலாச்சாரத்தைப் பற்றிக் கூறும் போது அக்காலத்தில் ஆசிரியர் என்பவர் தலைப்பாகை, சட்டை மேல் கோட்டு, வேட்டி என்று இருந்திருக்கிறார்கள். நம் நூல் ஆசிரியர், பள்ளி ஆசிரியராய் இருந்த ஆரம்ப காலத்தில் கிராப்பு, கிருதா மீசை, பூப்போட்ட சட்டை, பெல் பாட்டம் போட்ட பேண்ட், அகல பெல்ட் என்று எழுபதுகளின் தமிழ்த் திரையரங்கம் தந்த நாகரிக உச்சத்தில் இருந்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஆசிரியரின் பள்ளிப் பருவத்தில் இருந்தத் தன் தோற்றத்தை, இப்படிக் கூறுகிறார். ‘எண்ணெய் தடவி / அழுந்த சீவிய தலை / அழுக்குத் துவைத்தச் சட்டை / நெற்றி நிறைய பட்டை‘ என்று இருந்த நிலையில் முரணாக அவரின் பக்தி நிலை மாறியதைப் பற்றி, பொய்யாக்குளத்தில் அவர் வசித்தபோது விவரிக்கும் பகுதியில், சொல்கிறார்.

வாழ்வின் வழியில் இளம் பருவம் முதல் இப்போதைய அகவை வரை, மகளிடம் சொல்கையிலே அவர் வெளிப்படுத்துவன யாவும் ஒரு ஆவணப் பதிவாகும். அவரின் வாழ்வில் தொடர்ந்த புதுச்சேரியின் பல்வேறு ஊர்களை, சூழலை, இயற்கை அழகை, அனுபவித்த மகிழ்வை, வாழ்வியல் முறையை, அவர் ஆங்காங்கே எழுத்து வழியில் வாசிப்பவரை இட்டுச் சென்று காண்பிக்கிறார். உதாரணமாக, முதலியார்பேட்டைக்கு அவருடன் போவோம்.

புதுச்சேரியில், ஒருகாலத்தில், மூன்று பஞ்சாலைகளுடைய இயந்திரங்களின் இயக்கத்தால் எத்தனையோ குடும்பங் களின் உயிர்ச்சக்கர அச்சிற்கு உயர்வு கிடைத்தது. அந்த இயந்திரங்களோடு உழைத்த உயிர் இயந்திரங்களாய், தொழிலாளர்கள் இருந்தனர். அவர்களால், அப்போது தூங்கா நகரமாக, இருந்த ஒரு இடம் முதலியார்பேட்டை ஆகும்.

காலத்தின் கோலமாய், வரலாற்றில் வடுவாகிவிட்ட அந்த ஆலைகளின் பணி நேர அறிவிப்புச் சங்கொலி எப்போது ஓய்ந்ததோ, அப்போதே பெரும்பா லோரின் வாழ்வாதாரப் பற்று-வரவுக்கு இறுதிச் சங்கு ஒலித்துவிட்டது எனலாம். அங்குப் பணிபுரிந்து, இன்றும் இருப் போரில், சக்கரமே இல்லா வண்டியாகத் தேங்கியும் பலர்; பிழைத்துக் கொண்டும் பலர் உள்ளனர் எனலாம்.

‘ஜவானா ஆலை... புது ஆலை...
கெப்ளே ஆலை
மூன்று ஆலைகளும்...
புதுச்சேரி மக்களின் வாழ்வாதாரம்!
காலம் மாறியது... சூழல் மாறியது...

சுதேசி மில்... ரோடியர் மில்... பாரதி மில்
ஆலைகள் மூன்றும்...
பெயர் மாற்றம் பெற்றன!

மாதத்தில் பத்தாம் தேதி...
மூன்று பஞ்சாலைகளிலும்...
சம்பள பட்டுவாடா!

முதலியார் பேட்டை....
திருவிழா கோலம் பூணும்!
ஆயிரக்கணக்கான குடும்பங்களின்...
பசி தீர்க்கும் திருநாள்!‘

இப்படித் தொடங்கும் சூழல்,
‘புதுச்சேரியின் பொருளாதாரமென...
பேசப்பட்ட பஞ்சாலைகள்...
மூடுவிழா கண்டுவிட்டன!
ஆயிரமாயிர குடும்பங்கள்...
வறுமையில் வாட்டம்!‘

என்று தொடருகையிலும்,

'கைப்பொருள் தன்னை
வீதியில் வீசி எறிந்து...
வேடிக்கை பார்த்து விட்டோம்!'
எனும்போதும், மனம் வெம்பும்!

இவரின் காதல், திருமணம், மனைவி குமுதம் அவர்கள், அவரின் அன்புப் பிணைப்பு, இல் வாழ்வு, பணிச்சூழல், சுவாரசியம், தேடுதல், தொடருழைப்பு, சாதனைகள் என்று எத்தனையோ சுவாரசி யங்கள் இந்நூலில் உள்ளன. மேலும், சுனாமி, பெருந்தொற்று நோயான கொரோனாவினால் நேர்ந்த சூழலைப் பற்றியும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கவிநயம் பற்றிக் கூறவும் பலவுண்டு. ஆயினும், திகட்டாதினிக்க, துளிகளாய் கொஞ்சம் வரிகள் இதோ!

'சொல்லாத சொல்லுக்கு
விலை ஏதுமில்லை
சுவை கொண்ட சொல்லுக்கோ
விஞ்சிய சுகமே மதிப்பு'

சொற்சுவைக்கு மதிப்பு விஞ்சிய சுகமே என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதனை, அவரின் படைப்பு உறுதிபடுத்தும்.

தமிழை ஏத்தும் சொற்சுவைக்கு எடுத்துக் காட்டுகள் சில இங்கே:

காதல், நம் நூலாசிரியரைத் துரத்திய நாட்களின் கவி வரிகள்:

'கண்ணுக்குக் கைக்குடை வைத்து...' நாயகனாய் நூலாசிரியர் ப.முருகேசன் அவர்களின் எதிர்பார்ப்பு!

'கையில் குடை பிடித்து / தூரத்தில் அவள் வருகை...' நாயகியாகத் திருமதி குமுதம் அவர்களின் வருகை!

இவ்வாறு, காதல் பக்கங்களை கவிநய வடிவத்தில் காட்டுகிறார் ஆசிரியர்.

அடுத்து, தமிழ் இலக்கணம் பற்றி ஒன்று:

பொய்யாக்குளம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இதன் விவரங்களுடன், நம் ஆசிரியரின் 23ஆம் வயதில் இங்கு நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றிக் கூறுகிறார்.

அடுத்து, 'அரிநமோத்துச் சிந்தம்' என்றொரு சொல் இந்நூலில் உள்ளது. இது என்ன என்று யோசிக்க வைத்தது.

தமிழ்ச்சுவைக்கு இன்னொன்று, நாணேற்றி விரைந்ததும் பின், விசை குறைந்து தயங்கியதையும் கூறும் காரணமும் என்ன?

'அன்று 'வில்' நீங்கி
விசை பெற்ற அன்பெனவே
விரைந்து எழுத முனைந்த
பேனா முனை
இன்று நின்று தயங்குகின்றது'

நம் நூலாசிரியர், அக்காரணத்தை விளக்குகிறார்.

மொத்தத்தில் நம் நூலாசிரியரின் அகவை 75 ஆனாலும், அவருள் குழந்தைமை கூடிய சிறுவன் ஒருவன், வாலிபன், காதலன், கணவன், தந்தை, சமூகச் சிந்தனையாளன், கலைஞன் என்று பன்முகங்களைக் காணலாம். அவற்றை, இந்தப் படைப்பு, தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. அதன் மூலம் வாழ்விற்குத் தேவையான நம்பிக்கையை விளக்காக்குகிறது.

தான் பெற்ற மகளுக்கு, ஒரு வாழ்க்கைத் தேனீயாக, ஆவணத் தேன்கூண்டை

அளித்துள்ளார் தேசிய நல்லாசிரியர், கலைமாமணி ப. முருகேசன் அவர்கள். இந்த வற்றா அன்பு அனுபவக் கூண்டு, சிக்குவதற்கு இல்லை! வாழும் எவருக்கும் சிறகடித்துப் பறக்க வழி சொல்லும் கூண்டு!

நிறைவாக, இந்நூலானது, வறுமையில் செம்மை, முயற்சி திருவினையாக்கும், தடம் மாறினாலும் திருந்தினால் பெருமை அடையலாம் என்பது போன்ற வாழ்க்கையின் நன்னெறியையும் புதுச்சேரியிலுள்ள பல்வேறு ஊர்களைப் பற்றிய தகவல்களுடன் புதுச்சேரி மக்களுடைய அக்கால வாழ்வியலும் சார்ந்து, ஒரு சிறப்பு நூலாக அமைந்துள்ளது.

# இதயம் முரளி

முரளிக்கு மனசு பட, படப்பாய் இருந்தது. எத்தனை வருஷத்து காதல் எப்படியாவது இந்த மாசம் முடியுறதுக்குள்ள சொல்லியாகணும்.இப்படி மனசுல உள்ள காதலை சொல்லாம போனா எனக்கு மிஸ்சஸ் ஆவுற ரம்யா மிஸ் ஆகி வேறு ஒருவருக்கு மிஸ்சஸ் ஆகிடுவா.

தைரியத்தை வர வைடா முரளி என மனதுக்குள் சபதம் எடுத்து கொண்டான். ஏதோ ஒரு வேகத்தில் மொபைலை எடுத்து ரம்யாவுக்கு போன் செய்தான் .

ட்ரிங் ..ட்ரிங் ...

ஹலோ ரம்யா

சொல்லுடா

உன்கிட்ட ஒண்ணு சொல்லணும்

சொல்லுடா

ரொம்ப வருசமா மனசுக்குள்ளேயே போட்டு புதைச்சுக்கிட்டு ரொம்ப அவதிப்படுறேன்.

ஐ லவ் யு ரம்யா

அட ச்சீ நீயும் மத்த ஆம்பள பசங்க மாதிரி தானா ?

ரொம்ப அமைதியா இருக்க , நல்லவனா இருக்க ,நல்லா படிக்கிற அதனால தான் உன்கிட்ட பழகுனேன். இத்தனை வருசமா நட்பா பழகுற தோழிக்கிட்ட இப்படி தான் பேசுவியா ?

ஹே.. ரம்யா கொஞ்சம் பொறுமையா நான் சொல்லுறதை கேளு ..

இன்னைக்கு என்ன நாள் ஏப்ரல் 1 அதான் உன்னை ஏப்ரல் பூல் ஆக்க வேண்டி கிண்டலுக்கு லவ் யூ சொன்னேன்.

OH SORRY முரளி.

நீயும், மத்த பசங்க மாதிரி தானோன்னு தப்பா நினைச்சுக்கிட்டு கோபத்துல திட்டிட்டேன் .

ஐ அம் சாரிடா முரளி

ITS OK என்று அழுத கண்களோடு தொலைத்த காதலை எண்ணி அதே சமயத்தில் நட்பையாவது காப்பாத்தி விட்டோம் என்ற ஆறுதலோடு போனை வைத்தான் முரளி.

**- லி .நௌஷாத் கான் -**

# செருப்பு



பள்ளி மணி ஒலிக்கும் நேரம்…
எனக்கு முன் எழுந்து நிற்பது,
என் பிய்ந்து போன செருப்பு தான்.

வகுப்பறைகளில் எல்லாம் …
நான் குரல் கொடுக்கும் போது,
என் வலியின் சுமையைத் தாங்கியது அது.

ஒரு காலம்…
அதன் மேல் பூக்கள் பேசின;
மணிகள் மின்னின;
முத்துக்கள் மாலையாகச் சிரித்தன.
என் நடைக்கு…
இளமைத் துடிப்பு தந்தது.
இன்று , அதன் சிதைந்த தோல்…
என் வாழ்க்கையின் கண்ணீரைத்
துடைத்துக் கொண்டிருக்கிறது.
இப்போது அதில், பூக்கள் இல்லை;
மணிகளும் இல்லை;
முத்துக்களும் இல்லை.

வகுப்பிலிருந்து வகுப்புக்குச்
செல்லும் நேரமெல்லாம்,
நான் நின்று கொண்டே ,
கற்றுக் கொடுக்கும் போதெல்லாம்…
நின்றிருப்பது நானல்ல..
என் செருப்பின் இதயம்.

படிக்கட்டுகளில்…
நான் ஏறும் ஒவ்வொரு அடியும்…
என் சோர்வுகளை முதலில் தாங்கியது,
என் வலிகளை ஏற்றுக்கொண்டது,
மௌனமாய்… ஓசையின்றி இருக்கும்
என் செருப்பு தான்.

மழை அதை கிழிக்கவில்லை;
என் வாழ்க்கையே அதை உரித்தது.
வெயில் அதைக் கருக்கவில்லை;
என் கால்கள் தான் அதன் நிறத்தை…
சுரண்டி எடுத்தன.
என் கால்கள் தடுமாறிய போதெல்லாம்…
அது என்னை வென்று…
என்னைத் தாங்கியது.

எத்தனை பேருக்கெல்லாம்
கற்பித்தேனோ… எத்தனை தெருக்களில்…
என் சுவாசத்தை இழந்தேனோ…
அதைவிட அதிகமாய்,
ஒவ்வொரு நாளும் சுழன்று போனது
என் செருப்பு.
அவை தேய்ந்து போன செருப்புகள் அல்ல…
இன்னும் என்னுடன்
நடந்து கொண்டிருக்கும்
ஓர் மௌனமான உயிர் .

இரவு படுக்கையில் அவைகளை
நீக்கும்போது,
அதற்கு ஓய்வாய்கிறது.
நான் கண்மூடும் போது தான்...
அது மூச்சை விடுகிறது.
நான் விழிக்கும் போது மீண்டும் வருகிறது
என் வலிகளை சுமக்க.
புதுச் செருப்புக்கு ஆசைதான்...
கடைத்தெருக்களில் காண்கிறேன்...
நான் வாங்கும் சம்பளம் ...
உண்ணும் உணவிற்கும்
எடுத்த கடனுக்கும் கரைந்தே விடுகிறது.

காசு சேர்த்தேன் பல தடவை,
ஒவ்வொரு முறையும்
தகர டப்பாக்கள் காலியாகின்றன.
அறுந்து போன என் செருப்பு,
ஓர் ஓர் அப்பாவி.
நூலால் தைத்து உயிர் கொடுத்தேன்...
புதுச் செருப்பு..
எனக்கு கனவுப் பொருள் .
துன்பம் தழுவிய ஒவ்வொரு அடியும்,
பிய்ந்து போன என் செருப்பை
உயிர் போல அணைத்துக் கொண்டே
இன்னும் நடக்கிறேன்.

என் நிழல் கூட சில நேரம்
என் பின்னால் தங்குகிறது...
முன்னாலும் செல்கிறது...
ஏமாற்றிக் காணாமலும் போகிறது.
வறுமை வேரை அறிந்தும் ...
எனக்காக நடக்கும் என் பிய்ந்த செருப்பு
என் வாழ்க்கையின் இரண்டாவது சுவாசம்.

பாவளையூராள்
ஏ.பீ.எப்.பஸ்லியா

## அன்புள்ள துணைவனே!

உன் நினைவுகளுக்குள் நான் கலந்தவள் எனவே
நினைவுகளை சரி செய்துக் கொள்

உன் வார்த்தைகளை நான் சேமிப்பவள் எனவே
வார்த்தைகளை ஒழுங்கு படுத்திக் கொள்

உன் செயல்களில் நான் பூப்பவள் எனவே
செயல்களை சீர்படுத்திக் கொள்

உன் அன்பில் நான் உயிர்பவள் எனவே
அன்பை உண்மையாகிக் கொள்

உன் நடத்தையில் நான் மிளிர்பவள் எனவே
நடத்தையை ஒழுக்கமாகிக் கொள்

உன் பாதுகாப்பில் நான் தைரியமடைபவள் எனவே
பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்

உன் புரிதலில் நான் வளர்பவள் எனவே
புரிதலை ஆழமாகிக் கொள்

உன் மரியாதையால் நான் கௌரவமானவள் எனவே
மரியாதையை தரப்படுத்திக் கொள்

உன் சமத்துவத்தால் நான் சுதந்திரமானவள் எனவே
சமத்துவத்தை அதிகரித்துக் கொள்

உன் தொடர்பாடலில் நான் உணர்வானவள்
எனவே தொடர்பாடலை தொடர்ந்து கொள்

உன் பராமரிப்பில் நான் வாழ்பவள் எனவே
பராமரிப்பை செழிப்பாகிக் கொள்

உன்னில் பாதி உன் மனைவியானவள்
அதை பாதுகாத்துக்கொள்

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம் இலங்கை

# கவலையற்ற படகு

ஐம்பெரும் தமிழ் காப்பியம் நீ…
ஐயமின்றி உன்னை காப்பியடிப்பவன் நான்!

மணம் கமழும் மலர் கூட்டம் நீ..
மகரந்த சேர்க்கை அந்து பூச்சி நான்!

வாலியின் நயமான வரிகள் நீ…
வாஞ்சையுள்ள வாசிப்பாளன் நான்!

பேருந்தின் ஜன்னலோர இருக்கை நீ…
பேரானந்தத்தில் பயணிக்கும் பயணி நான்!

கலங்கரை விளக்கு நீ…
கவலையற்ற படகு நான்!

வான் மழை நீ…
வாசம் பெற்ற நிலம் நான்!



பொன் வானம் நீ…
பொழுது சாயும் வேளை நான்!

செம்மொழி இலக்கியம் நீ…
செந்தமிழ்தாசன் நான்!

நற்சுவை நீரூற்று நீ
நதியோடும் ஆற்றுப்படுகை நான்!

அற்புத தூரிகை நீ…
அழகிய ஓவியம் நான்!

மழை தூறல் நீ…
மயில் தோகை நான்!

ஆகச்சிறந்த சிற்பக் கலைஞள் நீ…
ஆற்றல்மிகு உயிர் சிற்பம் நான்!

விளக்கின் எரிசுடர் நீ…
வீட்டில் பூச்சி நான்!

இயல்பாய் சந்தித்தோம்!
இருவரும் சம்மதித்தோம்!!
இணக்கம் கண்டோம்!!!
இதயம் தந்தோம்…
இணைந்தோம்…இன்புற்றோம்…
இயங்கட்டும் நம் பிணைப்பு
இறுதிவரை…..!!!

**இருதயராஜ்**
ஆசிரியர் புதுச்சேரி.

# இனிய திசைகள்

INIYA THISAIGAL

சமுதாய மேம்பாட்டு மாத இதழ்

## அன்புடன் விழைகிறோம்!

பேரன்புடையீர்,
இறையருள் அனைவர்மீதும் என்றென்றும் நிறைவதாக....

வல்லோன் ஏகன் இறையவன் அளப்பரும் கருணையால் 24 ஆண்டுகளாக மாதந்தோறும் இடைவிடாது தொடர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் 'இனிய திசைகள்' மேம்பாட்டு மாத இதழ் வெளிவந்துகொண்டிருக்கிறது. (அல்ஹம்து லில்லாஹ்)

இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிதழ்களுக்குப் பல வகைகளில் முன்னோடி இதழாகத் திகழும் 'இனிய திசைகள்' சமுதாயத்தினர் அனைவரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் அரசியல், சமுதாயம், மார்க்கம், ஆன்மிகம், இலக்கியம், மருத்துவம், மகளிர் பக்கம், உணவே மருந்து முதலான பல கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி இலங்குகிறது. இலாப நோக்கற்றுச் சமுதாய முன்னேற்றம் என்ற ஒற்றை நோக்கில் அர்ப்பணிப்பு உணர்வோடு மாதந் தவறாது மக்கள் கரங்களிலும் சமூக ஊடக வலைத்தளங்களிலும் அறிவொளி பரப்பும் 'இனிய திசைகள்' இதழை மேன்மேலும் ஒளிரச் செய்வது ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.

25 மாதங்களுக்கு ரூ.500/-, 50 மாதங்களுக்கு ரூ.1000/- என்ற வகையில் சந்தா செலுத்தியும், இதழின் வளர்ச்சிக்கு நன்கொடைகள் தந்தும், தங்களது நிறுவன விளம்பரங்களை மனமுவந்து அனுப்பியும் உதவ அன்புடன் விழைகிறோம்.

**வங்கி விவரம்**

KARUR VYSYA BANK,
KODAMBAKKAM BRANCH
CHENNAI-600 024.

IFSC KVBL 0001165

A/c Name: INIYA THISAIGAL

A/c No.: 1155 1350 0000 7603

**G Pay மூலம் அனுப்ப:**
**94441 65156**

தொடர்பு முகவரி:
**இனிய திசைகள்**
27/53, நரசிம்மபுரம், மயிலாப்பூர்,
சென்னை - 600 004.


FASHION HUB
STUDIO
Female Sales
Executive Wanted
Age Limit: 18 – 35 years
Basic knowledge to use phone & computer
Your Trust is Our Wealth
Visit Us:
Fashion Hub Studio
432/E, Havelock Road,
Colombo 06
Contact Us:
076 471 5077




புத்தக வடிவமைப்பு மற்றும் அச்சக வேலைகள்
அனைத்திற்கும் அனுகவும்
குறிப்பிட்ட காலத்தில் கால தாமதமின்றி
குறைந்த கட்டணத்தில் செய்துத் தருகிறோம்


RAMADAN
MUBARAK
தமிழ்நெஞ்சம்